66

தொகுதி 2] [பகுதி 9

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

ஈஸ்வர ௵ மார்கழி ௴

JANUARY 1938

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—0

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாசிக்க எழுத அறிதல் .... ... Rev. James Gnanamuthu B. A., L. T. | 233 |
| 2. | பாஷா போதனை சம்பந்தமான குறிப்புகள் .... —S. ஜகந்நாதன் | 243 |
| 3. | நவீன போதனை முறை ; ஓர் எதிர்ப்பு .... .... —பி. சுப்பிரமணிய அய்யர் | 254 |
| 4. | குழந்தைகளின் கை வேலை .... .... —கே. சுவர்ணவல்லி | 258 |
| 5. | பத்திராதிபர் குறிப்புகள் .... .... .... | 260 |


---


**கௌரவப் பத்திராதிபர்கள்**

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷால்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திரிகாசிரியர்



# பாலர் கல்வி

| தொகுதி 2 | 1938 ஆண்டு ஜனவரி மீ<br>ஈஸ்வர ஆண்டு மார்கழி மீ | பகுதி 9 |
|---|---|---|



... ஆவணக்காப்பக ... சென்னை-600 008.


## வாசிக்க எழுத அறிதல்

*தற்காலம் இது என்ன நிலையில் இருக்கிறது? நமது நாட்டிலும் திருச்சபையிலும் இதனை எங்ஙனம் விருத்தி செய்யலாம்?*

Rev. James Gnanamuthu B. A., L. T.

ஒவ்வொருவரும் தத்தம் சுயபாஷையை வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளுவது மிக்க அவசியம் என்பதைக் கற்றோர் அனைவரும் ஒப்புக்கொள்ளுவர். மனிதர் சிறப்பாக வாழ்க்கை செய்யவும், தமது தொழில் முயற்சிகளில் காரியசித்தியடையவும், குடியரசு முறையை அறிந்து தங்கள் முன்னேற்றத்துக் கனுகூலமான விஷயங்களை ஆலோசிக்கவும் நிறைவேற்றவும், தெய்வபக்தியில் விருத்தியடையவும் வாசிக்க எழுதத் தெரிந்திருப்பது அத்தியாவசியம். நாகரிகத்திற்கும் சகல முன்னேற்றத்திற்கும் அடிப்படை அவ்வறிவே. அவ்வளவு அறிவுதானும் இல்லாதவர் கபோதிகள் போல்வர். திருச்சபையின் அங்கங்கள் பலர் வேதம் வாசிக்கவும், அறிவோடும் உணர்வோடும் ஆராதனை செய்யவும், தாம் ஈடுபடும் நானா விஷயங்களை நிதானிக்கவும், தற்கால சம்பவங்களைப் பற்றிய சமாசாரங்களைப் படித்து அறியவும், தூர தேசத்தில் பிரிந்து சென்றிருக்கும் தம் குடும்பத்தின் அங்கத்தினருக்குச் செய்தி அனுப்பவும், குடும்பத்தின் வரவு செலவு கணக்குகளை முடிக்கவும், தங்கள் விடு நேரங்களில் அறிவை விருத்தி செய்யவும், நூல்களை வாசித்து இன்பம் அடையவும் இயலாத நிலைமையில் இருப்பது எவ்வளவு பரிதாபம்! ஆரம்பக் கல்விதானும் இல்லாமைதான் ஜனங்களின் மூடப்பயம், மூடப்பக்தி, அவலக்ஷணமான அநேக பழக்கங்கள் ஆகிய இவற்றிற்கு மூலகாரணம்! சரீரசுகத்தைப் பேணிக்கொள்ளவும், காற்று, சூரிய வெளிச்சம், சூரிய வெப்பம் உள் பிரவேசிக்கும் நல்ல இல்லங்களைக் கட்டிக் குடியிருக்கவும், வீடுகளையும் கிராமங்களையும் தெருக்களையும் சுத்தமாய் வைத்துக்கொள்ள

1476466
JL



வும், நோய் வந்தால் தகுந்த சிகிச்சை தேடிப் பெற்றுக்கொள்ளவும், வகை தெரியாத நமது சகோதரரின் வாழ்க்கை மிக்க பரிதாபமே! ஆரம்பக் கல்வியைப் பரவச் செய்வதற்கு அரசாங்கத்தாரும் மிஷனெரி சங்கத்தாரும், மற்ருேரும் அரும்பிரயாசம் எடுத்துவந்தபோதிலும், அதிகப் பயன் விளைந்துவிட்டதென்று கூற இடமில்லை. சென்ற 30 வருஷ காலத்தில் ஆரம்பக் கல்வியின் தேர்ச்சி மிக அற்பமென்றே ஜனசங்கியைக் கணக்கு வெளியிடுகின்றது.

| | |
|---|---|
| 1901-ம் ஹு சென்னை மாகாணத்தின் ஜனத்தொகை | 3,86,53,558 |
| வாசிக்க எழுதத் தெரிந்தவர்கள் .... .... | 24,36,743,—6% |
| ,, ,, தெரியாதவர்கள் .... .... | 3,62,16,815 |
| 1911-ம் ஹு ஜனத்தொகை .... .... | 4,18,70,160 |
| வாசிக்க எழுதத் தெரிந்தவர்கள் .... .... | 31,30,250,—7% |
| ,, ,, தெரியாதவர்கள் .... .... | 3,87,39,910 |
| 1921-ம் ஹு ஜனத்தொகை .... .... | 4,27,94,155 |
| வாசிக்க எழுதத் தெரிந்தவர்கள் .... .... | 36,67,737,—8% |
| ,, ,, தெரியாதவர்கள் .... ... | 3,91,26,418 |
| 1931-ம் ஹு ஜனத்தொகை .... .... | 4,71,93,602 |
| வாசிக்க எழுதத் தெரிந்தவர்கள் .... .... | 43,67,545-9·3% |
| ,, ,, தெரியாதவர்கள் ... .... | 4,28,26,057 |

1901-ம் ஹுத்தில் வாசிக்க எழுதத் தெரியாதவர்களின் தொகை 3,62,16,815.

1931-ல் வாசிக்க எழுதத் தெரியாதவர்களின் தொகை 4,28,26,057.

இவ்வாறு வருஷங்கள் செல்லச் செல்ல ஷெயாரின் தொகை குறையாமல் பெருகிக்கொண்டு போகிறது. 1901-ம் ஹு முதல் 1931-ம் ஹு முடிய உள்ள 30 வருஷங்களில் சென்னை மாகாணத்தில் மட்டும் வாசிக்க எழுதத் தெரியாதவர்களின் தொகை சுமார் 60 லக்ஷம் அதிகரிக்கிறது.

1931-ம் ஹு ஜன சங்கியைக் குறிப்பில் வாசிக்க எழுதத்தெரிந்தவர்களின் தொகை 100-க்கு 9·3 என்று கண்டிருக்கிறது. இவர்களில் பெரும்பான்மையோர் தங்கள் புராதனத் தொழில்களை விட்டுவிட்டு உத்தியோகத்தில் சேர்வதற்கென்றே தங்களை ஆயத்தம் செய்யும்படி பாடசாலையில் சேர்ந்தவர்கள். 1931-ம் ஹு ஜன சங்கியைக் குறிப்பின்படி நமது நாட்டில் ஆண்கள் 100-க்கு 84 பேரும், பெண்கள் 100-க்கு 97 பேரும் வாசிக்க எழுதத் தெரியாதவர்களாய் இருக்கிறார்கள். 1931ஹு ஜன

11:37.2



சங்கியைப்படி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் பற்பல வகுப்பினரின் ஜனத்தொகையும், அவர்களில், வாசிக்க எழுதத் தெரிந்தவர்களின் தொகையும், பின்வருமாறு கண்டிருக்கிறது:—

| ஜனப்பகுதி | ஜில்லா | ஆண்கள் | வாசிக்க எழுதத் தெரிந்தவர்கள் | வீதாசாரம் | பெண்கள் | வாசிக்க எழுதத் தெரிந்தவர்கள் | வீதாசாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| பிராமணர் | மதுரை | 16901 | 12583 | 74 % | 16805 | 5624 | 33 % |
| | ராமநாதபுரம் | 19475 | 13698 | 70 ,, | 20328 | 4065 | 20 ,, |
| | திருநெல்வேலி | 24935 | 17775 | 71 ,, | 28423 | 7583 | 26 ,, |
| மற்றஇந்துக்கள் | மதுரை | 829731 | 174667 | 21 % | 836097 | 10035 | 1 % |
| | ராமநாதபுரம் | 627441 | 159490 | 25 ,, | 684373 | 8305 | 1·2 ,, |
| | திருநெல்வேலி | 643063 | 166738 | 26 ,, | 673290 | 15204 | 3 ,, |
| தாழ்ந்த ஜாதிகள் | மதுரை | 168252 | 7243 | 4 % | 173491 | 160 | 09 % |
| | ராமநாதபுரம் | 128735 | 4242 | 3·3 ,, | 139391 | 1007 | ·7 ,, |
| | திருநெல்வேலி | 158031 | 9564 | 6 ,, | 171208 | 328 | ·2 ,, |
| மகமதியர் | மதுரை | 44948 | 15956 | 35 % | 45639 | 822 | 1·8 % |
| | ராமநாதபுரம் | 49970 | 16186 | 32 ,, | 71361 | 1007 | 1·4 ,, |
| | திருநெல்வேலி | 53428 | 20163 | 37 ,, | 66907 | 1930 | 3 ,, |
| கிறிஸ்தவர்கள் | மதுரை | 41515 | 12511 | 30 % | 42256 | 5614 | 13 % |
| | ராமநாதபுரம் | 43625 | 11009 | 25 ,, | 51414 | 3059 | 5·9 ,, |
| | திருநெல்வேலி | 107687 | 39753 | 37 ,, | 119917 | 24928 | 21 ,, |

கடந்த முப்பது வருஷங்களில், ஆரம்பக் கல்விச்சாலைகளைச் சேர்ந்து கல்வி கற்ற பிள்ளைகளின் தொகைகள் அதிகரித்திருக்கின்றன. என்றாலும் வாசிக்க எழுதத் தெரிந்தவர்களின் தொகை அவ்வளவாய் அதிகரிக்கவில்லை. இதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.

உபாத்திமாரின் ஊக்கத்தாழ்ச்சியும் கல்வி புகட்ட அவர்கள் கையாளும் பயனற்ற முறைகளும் ஒரு காரணமாகச்சொல்லப்படுகின்றன. இது ஒருவாறு உண்மையே. கிராம உபாத்திமார் உபாத்தினிமார்களில் பலர் தங்களைத் தங்கள் ஊழியத்துக்குப் பிரதிஷ்டை செய்யாதவர்கள். அவர்களது ஊக்கம், உற்சாகம், அறிவு, போதனுமுறை, பரோபகாரச் சிந்தை ஆகிய இவை குறைகூறக்கூடியவைதான். தேசாபிமானமும் உற்சாகமும் உள்ள ஊழியர்கள் நிறைவேற்றக்கூடிய உன்னதமான நோக்கங்கள் அவர்களிடமில்லை. அவர்கள் அதைச் செய்ய எத்தனிப்பதும் அரிது.

ஆனல் உபாத்திமார் உபாத்தினிகளை முற்றிலும் குறை கூறுவதும் நியாயமன்று. அவர்களில் கல்வி அறிவு போதாது, அவர்கள் சம்பளம்

குறைவு, அதுவும் ஒழுங்காய் அவர்களுக்குக் கிட்டுகிறதில்லை. அவர்கள் குடும்ப சம்ரக்ஷணையே அவர்களுடைய தியானமாக இருக்கும்பொழுது, ஊழியத்தைப்பற்றிய தியானம் அவர்களுக்கு ஏற்படுவது அசாத்தியம். தற்காலம் ஹையர் கிரேட், செக்கண்டெரி கிரேட் பயின்ற உபாத்திமாரை ஆரம்பக்கல்விச்சாலைகளில் நியமிக்கிறார்கள். இந்த மாறுதலினால் விளையக் கூடிய நன்மைகள் பல உண்டு. இவர்கள் தங்கள் கருமத்தில் கண்ணாயிருந்து, அதை ஒரு பரிசுத்தப் பொறுப்பென்றும், பிறருக்கு உதவிபுரியும் நல்ல தருணமென்றும், கருதும்போது இப்போது இருக்கிற அறிவீனம் நீங்க இடமுண்டு. அவர்களை வேலைக்குக் கொள்ளுவோர் அன்றாடகப் பிழைப்பைப்பற்றிய கவலைகளில் அவர்கள் சிக்குண்டு, அவர்களுடைய நல்ல நோக்கங்கள் மாண்டுபோகாவண்ணம், தகுந்த சம்பளம் கிரமமாய்க் கொடுத்துவருவது அத்தியாவசியம்.

ஊழியர்களை அடிக்கடி மாற்றுவதும், அவர்கள் மனதிலே அவர்கள் பிழைப்பு நிலையற்றதென்ற ஒரு பயம் உண்டாவதும், ஸ்திரமான ஊழியம் நடைபெறப் பெருந்தடையாகும். தாம் வேலை செய்துவரும் பாடசாலையிலும், அதைச்சார்ந்த சபையின் ஜனங்கள் மேலும் ஊக்கமான பாசம் காட்டும் உபாத்தியாயரை அவ்விடத்திலேயே விட்டுவைத்தால், தொடர்ந்த தேர்ச்சியான நல்ல வேலை நடைபெற ஏதுவாகும்.

தற்காலம், கல்வி இலாகாவால் ஒப்புக்கொள்ளப்படும் முறைப்படி, சில பாடசாலைகள் பேருக்குமட்டும் ஸ்தாபிக்கப்பட்டு, கிரான்ட் வாங்க அவசியமான குறைகளைக் கையாண்டு வருகின்றனவே யன்றி, மற்றப்படி யல்ல. இத்தகைய பள்ளிக்கூடங்கள் கூடிய சீக்கிரம் பேரற்றுப்போகுமென்பதற்கு ஐயமில்லை.

பாடசாலைக் கட்டடங்கள் பெரும்பாலும் பிள்ளைகளுக்குப் போதா அவை கவர்ச்சியற்றிருக்கின்றன. ஆரம்பக்கல்வி விருத்தியடைய அது ஒரு தடை என்று பேசப்படுகிறது. மாளிகைகள்போலொத்த பெரிய பாடசாலைக் கட்டடங்கள் இடத்துக்கிடம் தேவையென்று நாம் சொல்ல மாட்டோம். ஆலவிருட்சத்தின் அடியில் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கலாம்.

ஆனால் பிள்ளைகளுக்கு என்று ஏற்பட்டிருக்கும் பாடசாலைக் கட்டடங்கள் போதுமான விஸ்தீரணமாயும், சுத்தமான ஸ்தலங்களாயும், அவை அருகில், அழகிய புஷ்பச்செடிகள், விருட்சங்களும், வகுப்பு அறைகளில் பிள்ளைகள் அமர்வதற்கு ஆசனம் அல்லது சுத்தமான மணல் விரிக்கப்பட்டதாயும், உபாத்திமாராலும், பிள்ளைகளாலும் வரையப்பட்ட படங்கள், சித்திரங்கள், சுகாதார நல்லொழுக்க விதிகள் முதலிய சுவர்களில் இலங்கிக்கொண்டு மிருந்தால் கவர்ச்சி கொடுக்கும். பள்ளிக்கூடத்தின் அருகிலோ, சிறிது தூரத்திலோ பிள்ளைகள் விளையாடுவதற்கு வசதியான இடமும் வேண்டும்.



ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றி அரசியற்றிய நன்மையோ, அல்லது ஆங்கிலேய பாஷை உலகத்தின் பொதுப் பாஷையாய் வழங்கி வருவதின் பயனோ, இந்தியாவில் கல்விச்சாலைகள் ஏற்பட்டு அவைகளில் கல்வி பயின்றவர்கள் உத்தியோகத்தைப் பெரிதாகக் கருதி, தங்களுக்கும் தங்கள் சொந்த ஊர், சொந்த ஜனங்களுக்கும் யாதொரு பாந்தமுமின்றி ஜீவித்து வந்தது இந்திய மக்களின் நாகரிகமின்மைக்கு ஓர் பலத்த காரணம். தற்காலத்திலும் அறிவு விருத்திக்கென்று கல்வியை விரும்புவோர் மிகச் சொற்பப் பேரே. பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப விரும்பும் பெற்றோரின் நோக்கம் என்னவென்றால், தங்கள் மக்கள் உத்தியோகம் வகிக்கவேண்டுமென்பதே. மேற்படி நோக்கம் சித்திபெற, தங்களை ஒறுத்துத், தங்களுக்கு உண்டான வஸ்துக்களைப் பண்டமாற்றி, பிள்ளைகளைப் படிக்கவைக்கிறார்கள். பிள்ளைகள் படிப்பினால் குடும்பத்தில் கடன் உண்டாகிக் கஷ்டத்துக்குள்ளானோர் பலர். கல்வி கற்றவர்கள் உத்தியோகமின்றி அலையும் இக்காலத்தில், ஆரம்பக்கல்வியும்கூட அசட்டை செய்யப்படுகிறது. “ பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகளை அனுப்பிப் பயன் என்ன ?” என்று யாவரும் கேட்கிறார்கள். வாசிக்க எழுதப் பயிலாது இருப்பது வாழ்க்கைக்கு ஒரு பெரும் குறைவு என்று உணருவார் பலரில்லை. வாசிக்க எழுதக் கற்றவர் பலர் தொழில்கள் கற்றுக்கொண்டும், பலர் தங்கள் புராதனத் தொழில்களில் முன்னேற்ற முறைகளைக் கையாண்டு நடத்தக் கற்றுக்கொண்டும், தங்கள் கிராமங்களில் குடியேறிக் கிராமங்களிலுள்ள தொழில்களில் ஈடுபட்டு வருவார்களானால் அவர்களுடைய நல்ல மாதிரி மற்றவர்களைத் தூண்டி எழுப்பும் என்பதற்குச் சந்தேகமில்லை.

தற்காலக் கல்விக்கும் கிராம ஜீவியத்திற்கும் சம்பந்தமற்றிருப்பதினாலும், கிராமவாசிகள் தரித்திரராயிருந்து, தங்கள் பிள்ளைகளும் தங்களோடு, பல தொழில்களைச் செய்து, சம்பாதித்து, வாழ்நாள் கழிக்க அவசியம் அவர்களுக்கு இருப்பதாலும், ஆரம்பக்கல்வியை அலட்சியம் செய்வோர் அநேகர். நாட்டுப்புறத்தார் வறுமை வாஸ்தவமே. தகப்பன் வயலில் உழுதுகொண்டு வரும்போது தாய் தண்ணீர் பாய்ச்சுவதும், பிள்ளைகள் உரம் சுமப்பதும் சாதாரணம்; குடும்பத்தார் ஏகமாய் நிலத்தைக் கொத்துவதும், களை பிடுங்குவதும், நாற்றுப் பிடுங்குவதும், பருத்தி எடுப்பதும் சகசம். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் சேர்ந்து படித்தால் வேலைக்குப் போக விரும்பமாட்டார்கள் என்ற பயமுமுண்டு, பீஸ் செலுத்தவும், புத்தகம் வாங்கவும், போஷிக்கவும் முதலாய ஐவேசும் கிடையாது, என்ன செய்வது ?

ஆரம்பக் கல்விச் சாலைகளில் வாசிக்க எழுதக் கற்பிப்பதுடன் அந்தக் கிராமத்தார் செய்துவரும் தொழில்களில் குழந்தைகள் பழகிவரவும் இடமுண்டானால், ஒரு பெரிய தடை நீங்கிவிடும். பிள்ளைகள் கால அட்டவணைப் பிரகாரம், பாய், பெட்டி, வட்டி, தட்டி முடையவும், துரும்பு எடுக்கவும், கயிறு திரிக்கவும், வலை பின்னவும், தோட்டம் போடவும்

ஜீவப்பிராணிகள் வளர்க்கவும், தையல் தைக்கவும், சித்திரம் வரையவும், விசிறி பண்ணவும் பாடசாலையில் பயிற்சி பெற்றுத் தேறிவந்தால், பெற்றோருக்குக் கல்விலன் பயன் நன்கு விளங்கும். கைத்தொழில்களில் பழகுவதும் பிள்ளைகளுக்கு மிகுந்த உற்சாகம் கொடுக்கும். பாடசாலைகள் வருங்கால ஜீவியத்துக்குப் பிள்ளைகளை ஆயத்தம் செய்யும் பயிற்சிச் சாலைகளாகும். சுமார் 5½ வயது முதல் 9 வயது முடிய, பள்ளிக்கூடத்தில் கற்றுவரும் பிள்ளைகள் வாசிக்க எழுதக் கற்பதுடன் பள்ளிக்கூடம் விட்டபின் இயல்பாகவே பலவிதத் தொழில்களையும் செய்யப் புகுவார்கள்.

இரண்டாவது, கிராமப் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொடுக்கும் காலத் திட்டங்களை சமுசாரிகளின் பிள்ளைகள் வேலை ஒய்ந்திருக்கும் நேரத்திற்குப் பொருந்துமாறு ஒழுங்கு செய்தால் கல்வி முன்னேற்றமடைய ஏதுவாகும்.

மூன்றாவது, தனவந்தர், சர்க்கார் உதவியினாலும், காணிக்கை நிதியிலிருந்தும், தரித்திரருடைய பிள்ளைகளுக்கு வஸ்திரம், புஸ்தகம், அவசியமானால் ஒருவேளை சாப்பாடும் கொடுத்தால் தடை ஒருவாறு நீங்கக்கூடும்.

தற்காலத்திய ஆரம்பக் கல்விச்சாலைகளைப் பற்றி வேறு சில குறைகளும் கூறப்படுகின்றன. ஒரு கிராமத்தில் ஆரம்பக் கல்வி பயிலவேண்டிய பிள்ளைகள் அனைவரையும் பாடசாலையில் சேர்க்க முயற்சி எடுக்கப்படவில்லை. பாடசாலையில் சேர்ந்த பிள்ளைகள் ஒழுங்காய் வருவதில்லை. அதைக் கவனிப்பாருமில்லை. முதல் வகுப்பில் சேருகிற பிள்ளைகள் 5-ம் வகுப்பு முடிய 5 அல்லது 4 வருஷம் தொடர்ந்து ஒழுங்காய் வராததாலும், ஒழுங்காய் கற்பிக்கப்படாததாலும் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் தானே 4 அல்லது 5 வருஷங்கள் வீணாய்க் கழித்து, வாசிக்க எழுதக் கற்காமலே பள்ளிக்கூடத்தைவிட்டு வெளியேறி விடுகிறார்கள்.

இக்குறைகளை உண்மையென்றே ஒப்புக்கொள்வோம். கிராம ஆசிரியரைக் கேட்டால், பெற்றோர் தம்முடன் ஒத்துழைப்பதில்லை யென்றும், கோவிலில் ஆராதனைகள் நடத்தி, சபையாரைச் சந்தித்து விரும்பியவர்கள் வியாதியஸ்தர் வீடுகளில் ஜெபம் செய்து, பள்ளிக்கூடத்தில் படித்துக் கொடுத்தும் வருவதால், பிள்ளைகளைக் கூட்டிச்சேர்க்கத் தங்களுக்கு நேரமில்லையென்று சொல்லுவார்கள். பிள்ளைகள் ஒழுங்கீனமாய் வருவதால் தேர்ச்சியடையாமலும், மேல்வகுப்பிற்குப் போவதற்கு லாயக்கில்லாமலும் ஆரம்ப வகுப்புக்களிலேயே சில வருஷங்கள் தேங்கிக்கிடந்து பயன் அடையாமல் வெளியேறுகிறார்கள். சர்க்காரின் புதிய விதிப்படி ஒவ்வொரு பாடசாலையிலும், முதல் ஐந்து வகுப்புக்களும், திறக்கப்பட்டால், உபாத்திமாரின் தொகை அதிகரிக்க நேரிடும். அப்போது அவர்களிற்



சிலராவது பிள்ளைகளைக் கூட்டிச்சேர்க்க முயன்றுவரலாம். பிள்ளைகள் ஒழுங்காய்த் தொடர்ந்தேர்ச்சியாய்ந் கற்றுவரும்போது கற்பிக்கிறவர்கள் சிரத்தையுடன் வேலைசெய்தால், பிள்ளைகள் வருஷந்தோறும் வகுப்புமாறி முதல் ஐந்து வகுப்புக்களிலும் தொடர்ந்து படித்து வாசிக்க எழுதப் போதிய அறிவு அடைவார்கள். மேலும் அவர்கள் ஆணும் பெண்ணும் ஒவ்வொருவரும் 10 வயது முடியுமுன் தத்தம் தொழில்களுக்குச் செல்லலாம்.

உபாத்தியாயர்மேலுள்ள பொறுப்பு எவ்வளவு பெரியது என்பதை அவர்களும் சபையின் தலைவர்களும் நன்கு நன்கு உணரவேண்டும். கற்பிக்கப் போதிய அறிவு இல்லாதவர்களை உபாத்திமைத் தொழிலுக்குத் தெரிந்தெடுப்பது நன்றன்று. நவீன போதனா முறைகளைக் கற்றவரும், காலா காலத்தில் ஊடாடும் தேர்ச்சிக்கடுத்த புது முறைகளை மேலும் மேலும் கற்றுக்கொள்பவர்களுமே திறமையைக் கற்பிக்கக் கூடும். போதனாமுறைப் பயிற்சிச்சாலைக்குப் பயிற்சி பெற உபாத்தியாயரைத் தெரிந்தெடுத்துச் சிபார்சு செய்வோர் தங்கள் மேலுள்ள பொறுப்பை உணர்ந்து, பிழைப்பற்ற எவரையும் பரோபகாரச் சிந்தையாய்ச் சிபார்சு செய்வதை விட்டுவிட்டு உபாத்திமாராய் இருந்து பிரயோஜனம் உண்டாக்கத்தக்க விதமாய் ஊக்கத்துடன் உழைக்க வாஞ்சையும், யோக்கியதையும், லாயக்கும் வாய்ந்தவரை மாத்திரம் சிபார்சு செய்வது தகுதியாகும். போதிய அறிவும், திறமையும், நற்குணமும், நல்நடத்தையும், ஊக்கமும், அபிமானமும் உள்ள ஒருவர் போதனா முறைச்சாலையில் பயின்று வெளியேறினபின் செய்யும் ஊழியம் சிறப்பாக இருக்கும். பிற்காலங்களில் புதிது புதிதாகத் தோன்றும் நவீன போதனாமுறைகளையும் கற்றுக்கொள்வதற்கேதுவாக விடுமுறைக் காலங்களில் விசேஷித்த போதனாமுறை வகுப்புக்களுக்கு உபாத்திமார்களை அனுப்பிக் கற்றுவர ஒழுங்கு செய்யவேண்டும்.

ஆசிரியர்கள் தங்கள் அறிவை விருத்திபண்ணுமாறு தாய்ப்பாஷையில் எழுதப்பட்டுள்ள பொது அறிவு, போதனாமுறை இவற்றை அடுத்த புஸ்தகங்களுள்ள சிறிய நூல்நிலையம் ஒன்று அவர்களுக்கு இருப்பது அத்தியாவசியம்.

பாடசாலைகளில் வாசிக்க, எழுதக் கற்பிப்பதுடன், அந்தச் சுற்றுப் புறத்திலிருக்கும் ஜனங்களின் தொழில்களுக்கடுத்த பாடங்களையும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும்படி கவனம் செலுத்தவேண்டும். இதற்கு உதவியாக ஆலோசனைகொடுத்து மேற்பார்வைசெய்ய, விசேஷித்தலாயக்குள்ளவர்களும், பிரித்துவைக்கப்பட்டவருமான சிலர் தேவை. தற்சமயம், நமது சபைகளை மேல்விசாரணை செய்வோர் குருமார். அவர்களுக்கு ஏற்கனவே இருக்கிற பற்பல வேலைகளுக்கு இடையில், மேற்கூறியவாறு பாடசாலைகள் முன்னேறுவதற்குச் செய்யவேண்டிய விஷயங்களைக் குறித்துச் சிந்திக்கவும், ஆலோசிக்கவும் அவர்களுக்கு அவகாசம் இல்லை. சுமக்க

அரிதான பாரத்தை அவர்கள்மேல் சுமத்துவது சரியன்று. ஆரம்பக்கல்வி முன்னேற்றமடைந்து, வாசிக்க எழுதப் படிப்பவர்களின் தொகை அதிகரிக்கச் செய்ய பிரத்தியேகமாய் அதற்கென்று உழைப்பவர்கள் சிலர் தேவை. அவர்களுடைய ஆலோசனையும் மேற்பார்வையும் அதிகப் பிரயோஜனமாயிருக்கும்.

பெற்றோர் தங்கள்பொறுப்பை உணராது இருக்கிறார்கள். கொடிய வியாதியிலகப்பட்டுக் குணம் அடைந்தவன், தான் குணமடைந்த முறையை அவ்வியாதியினால் பீடிக்கப்பட்ட பிறருக்கு எடுத்துரைப்பான். வாசிக்க எழுதத் தெரியாத பெற்றோர் விசேஷித்த தூண்டுதலில்லாமல் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவார்கள் எனறு எதிர்பார்ப்பது வீண். அத்தகைய பெற்றோரை ஏவ ஆள்கள் தேவை.

"தேசீய சேவை தெய்வ சேவை" என்று கருதுவோர் சிலர் இச்சிறந்த ஊழியத்தில் ஈடுபடுவார்களானால் கை மேல் பலன் உண்டு. தமது பிள்ளைகளின் நல் வாழ்வை விரும்பாத பெற்றோர் உண்டோ? வாசிக்க எழுதத் தெரியாதவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது அவசியம் என்று உணர்ந்தால் அனுப்ப விரும்புவார்கள். கிராமங்களில் தங்கிக் கிராமவாசிகளைச் சந்தித்தவர்கள், சில வீடுகளில் சந்தோஷகரமான ஒரு காட்சியைக் கண்டிருப்பார்கள். என்னவென்றால், படிப்பறியாத பெற்றோரின் மத்தியில், வாசிக்கத்தெரிந்த மகன் அல்லது மகள் புத்தகம் வாசிக்க, அவர்கள் அதைக் கேட்டு அகமகிழ்வார்கள். ஆனாலும் தங்கள் வறுமையின் கொடுமையால் தமது பிள்ளைகள், மேலும் படிப்பதற்கு வகையற்றிருப்பதைக் கண்டு மனம் வாடுகிறார்கள். சிறிதளவு அவசியமான உதவி கிடைத்தால் அத்தகைய ஏழைப் பெற்றோர்களுடைய பிள்ளைகள் திரள் திரளாய்ப் பாடசாலைக்குப் போவதைக் காணலாம். சுயவெறுப்பு இன்றிப் பெரிய காரியங்கள் கிட்டா. ஆதலின் நாம் விரும்புவது போதாது; விருப்பம் கைகூட உழைக்கவும் வேண்டும்.

பிள்ளைப் பிராயம் தாண்டினவர்கள் வாசிக்க எழுதக் கற்கக்கூடுமா? தாம் தாம் செய்யும் தொழிலையும் பார்த்துக்கொண்டு அவர்கள் கற்றுக்கொள்வது எப்படி? 1931-ம் வருஷத்திய ஜன சங்கியைப்படி, 15 வயதுக்கு மேற்பட்ட புருஷர்களில் 100-க்கு 77 பேரும், ஸ்திரீகளில் 100-க்கு 97 பேரும் வாசிக்க எழுத அறியாதவர்கள். இவர்கள் யாவரும் இப்படியே கடந்து போகட்டும் என்று விட்டு விடுவோமா? அல்லது அவர்களும் வாசிக்க எழுதக் கற்றுக்கொள்ள முயற்சி செய்வது அவசியமா? ஆம், இவர்களும் கற்க முயல வேண்டும். அதற்கு ஒரு முறை என்னவென்றால் கிராமப் பாடசாலையில் பெரும்பாலும் புருஷனும் மனைவியுமாக இருவர் ஆசிரியர் இருக்கவேண்டும். காலையில் வேலைக்கு ஏகி, மாலையில் வீட்டுக்குத் திரும்பும் ஆண்களுக்கு இரவில் இரண்டு மணி நேரம் இராப்பாடசாலை வைத்து நடத்தலாம். இது உபாத்தியாயருடைய வேலை. கிராமத்தில் பெண்கள் பெரும்பாலும் மாலை 2 அல்லது 3 மணிக்குப் பின் சுமார் 2 மணி நேரம் வேலை ஓய்ந்திருப்பார்கள். அச்சமயம் உபாத்தினி பெண்களுக்கு எழுத வாசிக்கக் கற்பிக்கலாம். அதாவது காலையில் 9 மணி முதல் $11\frac{1}{2}$-மணி மட்டும் ஆசிரியர்இருவரும் பாடசாலைப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்க வேண்டும். மாலை 2 மணி முதல் 4-மணி வரை உபாத்தியாயர் பிள்ளைகளுக்குக் கற்பிக்க, அந்த நேரத்தில் உபாத்தினி பெண்களுக்குக் கற்பிக்கலாம். பின் மாலை 7-மணி முதல் |9-மணி வரை உபாத்தியாயர் ஆண்களுக்குக் கற்பிக்கலாம். சம்பாஷணைகள், வாசிப்புப் பிரதிகள், (Reading Sheets) கரும் பலகைச் சித்திரங்கள் மூலமாய் ஆரம்ப அறிவைப் புகட்டலாம். அவர்கள் வாசிக்கப் பழகிய பின் புஸ்தகங்கள் உபயோகிக்கலாம். இவ்வாறு செய்ய உற்சாகமுள்ள ஊழியர்கள், ஆரம்பத்தில் அக்கிராமத்திலுள்ள பிள்ளைகள், பிள்ளைப் பருவங் கடந்த புருஷர் ஸ்திரீ இவர்களின் பெயர் ஜாபிதா ஒன்று தயாரிக்கவேண்டும். பிள்ளைகளுக்கு 4 அல்லது 5 வருஷத்திலும், பெரியோர்க்கு சுமார் 2 வருஷத்திலும் வாசிக்க, எழுதக் கற்பிக்கும்படி ஒரு திட்டம் வகுக்கவேண்டும். முதலில் வரக்கூடிய அனைவரையும் சேர்த்து வேலையை ஆரம்பிக்கவேண்டும். இடைக்கிடையே 6 மாதம் அல்லது ஒரு வருஷம் கழிந்தபின் வாசிக்க எழுதத் தெரிந்தவர்களின் தொகை எவ்வளவு அதிகரித்திருக்கிறதென்று முன் ஜாபிதாவோடு ஒத்துப் பார்க்கவேண்டும்.



வாசிக்க எழுதக் கற்றவர்கள் அநேகர் நாளடைவில் தாம் கற்றதை மறந்து வாசிக்க எழுத இயலாத நிலைமைக்கு வந்துவிடுகிறார்களே. இதைத் தடுக்க என்ன செய்யலாம்? ஒவ்வொரு கிராமப் பாடசாலையின் சார்பிலும் ஒரு நூல் நிலையம் இருப்பது நலம். கிராமவாசிகளுடைய பலவகைத் தொழில்கள், விவசாயம், மதுவிலக்கு, சுகாதாரம், சிசு பரிபாலனம், முதல் உதவி (first aid) முதலிய விஷயங்களைப்பற்றிய நூல்களும், துண்டுப் பிரசுரங்களும், அந்நூல் நிலயத்தில் இருத்தல் வேண்டும். அங்கு தினசரி சமாசாரப் பத்திரிகையும் இருப்பது அவசியம்.

நூல் நிலையத்திற்கு ஜனங்கள் வரும்படி அவர்களைக் கவரவும், அவர்களுடைய பொது அறிவையும், சன்மார்க்கத்தையும் விருத்தி செய்யவும் இடைஇடையே சங்கீதக் கச்சேரி, நாடகம், ஒளி விசித்திரப் படக்காட்சி இவைகள் நடத்தலாம். மார்க்கம், அரசியல் முறை இவைகளைப் பற்றிக் கிராம ஆசிரியர் அல்லது இதர கற்ற நண்பர்கள் உபந்நியாசம் செய்யலாம்.

உபாத்திமார் உபாத்தினிகள் வயிற்றுப் பிழைப்பைப்பற்றிய கஷ்டமின்றி ஊழியத்திற்கே தங்களைத் தத்தம் செய்யவேண்டுமென்றால் அவர்கள்பெற்றுவரும் உபகாரம் அதிகரிக்கவேண்டும். உபாத்திமார்மாதச்சம்பளம் சராசரி ஒருவேளை ரூபாய் 15 என்னலாம். இது இரட்டித்தாலொழிய அவர்கள் கஷ்டம் நீங்காது. சர்க்கார் கிராண்டு இரட்டிக்கவேண்டும். அப்படியாகுமென்று இப்போது நம்ப இடமுண்டு.

உயர்தரப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர், மாணவிகளும் அவர்களுக்குக் கற்பிக்கும் உபாத்திமார், உபாத்தினிகளும், ரஜாக்காலங்களில் நல்ல வேலை செய்யலாம். மாணுக்கரை அவ்வேலையில் பழக்குவது கல்லூரிகளின் பொறுப்பு. அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ரஜாநாட்களில் வாசிக்க எழுதத் தெரியாத சில வாலிபரைச் சேர்த்துக் கற்பிக்க முயலலாம். கிராம உபாத்திமாரோடு கலந்து வேண்டிய உதவி புரியலாம். வேத வாசிப்பு வகுப்பு, ஓய்வு நாள் வகுப்பு நடத்தலாம். நடிப்புக் காட்சிகள் காட்டலாம். உபந்நியாசம் செய்யலாம்.

புதிய ஒரு சட்டம் நம் நாட்டில் ஏற்பட்டால் நல்லதென்று எண்ணுகிறேன். கல்வி கற்று உத்தியோகம் தேடிவரும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தங்களுடைய பற்பல யோக்கியதா பத்திரங்களோடு தம்மால் எழுத வாசிக்கப் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் எத்தனைபேர் என்ற பத்திரம் ஒன்றும் ஆஜராக்க வேண்டுமென்றிருந்தால் நலமாயிருக்கும்.

காரியத்தின் கடைத்தொகையைப் பார்த்தால் நமது நல்நோக்கங்கள் வாய்ப்பதப் வாய்ச்சாதே போவதும் கிராம உபாத்தியார் ஜனங்களின் தோழராகவும் வழி காட்டிகளாகவும் ஞானம் நிறைந்த ஆலோசனைக்காரராகவும் விளங்கவேண்டும். தேசாபிமானம், ஜனாபிமானம், உத்தியோக அபிமானம், மிஞ்சின பாசம், பொறுமை, சகிப்பு, சுய வெறுப்பு, விடா முயற்சி, நம்பிக்கை, போந்த அறிவு அமைந்த ஊழியர் தேவை. அவ்வித ஊழியர் எளிதில் தோன்றுர். கிராம ஊழியரின் தற்போதுள்ள பரிதாபமான நிலைமையைக் கவனித்தால் அவர்களில் மேலான நோக்கமும் சிந்தையும் உருவாகுமோ வென்பது சந்தேகம். "வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும்." வாசிக்க எழுதப் படித்தவர்களின் தொகை அதிகரிக்கவேண்டுமானுல் அந்த ஊழியத்தை நிறைவேற்றி வரவேண்டிய உபாத்திமார், உபாத்தினிகளின் நிலைமை உயர வேண்டும்.

# பாஷா போதனை சம்பந்தமான குறிப்புகள்

## சுயக் கருத்துகளை எழுதுவதும் குழந்தைகளின் வாசகசாலையும்

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை

1. எவ்வளவுக் கெவ்வளவு பாஷையைக்கேட்க அவகாச மேற்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு பாஷை மனதிலிருந்து வெளிவருகிறது. அதற்குத் தக்கபடி வாசிப்புத் தன்மையும் விருத்தி யடைகிறது. ஒரு பாடத்தைப் பலதரம் படிப்பது, பல புஸ்தகங்கள் படிப்பது, இம்மாதிரி படிப்பதில் பழக்கம் வருகிறதற்குத் தக்கபடி எழுத்துப் பழக்கம் மேம்பாடடைகிறது. ஒழிவு நேரங்களில் கதைப் புத்தகம் படிக்கிற பையன்கள் திறமையாகவே வாசிக்கிறுர்கள். இம்மாதிரி வாசிப்புப் பழக்கம் இருக்கிறவர்கள் நன்றுகவும் எழுதுகிறுர்கள். இவர்களது பேச்சுத் திறமையும் நன்றுகவே யிருக்கிறது. ஆரம்ப வகுப்பு வாசக பாடத்திற்கு அனுகுணமாக உபாத்தியாயர்கள் தாமே சிற்சில உபகரணங்களைத் தயாரிக்க வேண்டி வரும். முக்கியமாக படங்கள் அவசியம். எவ்வளவோ பழைய கியாட்லாக்குகள் கிடைக்கும். அவற்றிலுள்ள படங்களைக் கத்தரித்து அடியிற் கண்ட பிரகாரம் வகுத்து ஒவ்வொரு படத்தின் பெயரையும் ஒரு துண்டு அட்டையில் எழுதி அந்தந்த இனத்தைச் சேர்ந்த லகோடாவில் போடவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. காய்கறிகள் | 5. மரங்கள் | 9. மரச்சாமான்கள் | 13. சிலகருவிகள் |
| 2. மிருகங்கள் | 6. இலைகள் | 10. நகைகள் | 14. உருப்புகள் |
| 3. பக்ஷிகள் | 7. பழங்கள் | 11. பாத்திரங்கள் | 15. விளையாட்டுப்பொம்மைகள் |
| 4. உண்பன | 8. புஷ்பங்கள் | 12. வீட்டுச் சாமான்கள் | 16. இதர சாமான்கள் |

படத்தை எடுத்து அதற்குச் சரியான வார்த்தையைக் கண்டறிந்து படத்தினடியில் வைத்துக் காட்டுவதே அப்பியாசமாகும்.

2. பிள்ளைகள் தாமாகவே எழுதின விஷயங்களிலிருந்து அடியிற் கண்ட பிழைகள் தெரியலாயின. சாதாரணக் கொச்சைப் பேச்சில் வழங்கும் பதங்களையே எழுத்திலும் உபயோகிக்கிறுர்கள்.

| A. | பேச்சு | எழுத்துமுறை | பேச்சு | எழுத்துமுறை |
|---|---|---|---|---|
| | இப்போ | இப்பொழுது | கீயே | கீழே |
| | பன்னி | பன்றி | பொம்பரம் | பம்பரம் |

| பேச்சு | எழுத்துமுறை | பேச்சு | எழுத்துமுறை |
|---|---|---|---|
| முழுங்கி | விழுங்கி | வெடிகாலம்பர | விடியற்காலம் |
| சுத்தி | சுற்றி | பசங்கள் | பையன்கள் |
| விசிறி | வீசி | பொட்டி | பெட்டி |
| திருநா | திருநாள் | உப்புமாவு | உப்புமா |
| வாரிப்பேன் | வாரிக்கொள்வேன் | வளையாடு | விளையாடு |
| நெஜார் | நிஜார் | வேடிச்சு | வெடித்து |
| குடு | கொடு | பின்னிப்பேன் | பின்னிக்கொள்(வேன். |

B. நடை முறையில் வழங்கப்படும் ஆங்கில பதங்களை தமிழ் எழுத்தால் எழுதிவிடல்.

| | | | |
|---|---|---|---|
| ஸில்க் | (பட்டு) | மணிபாக்ஸ் | (பணப்பை) |
| டிபன் | (சிற்றுண்டி) | ரூம் | (அறை) |
| பஸ் | ................ | ரவுண்டு | (வட்டம்) |
| டின்னர் | (விருந்து) | சார் | ............ |
| பீச்சு | (சமுத்திரக் கரை) | பிரைவேட் | (வீட்டில் பாடம் சொல்லிக் கொள்வது) |
| ரேடியோ | ................ | சைக்கில் | ........... |
| லைட் | (விளக்கு) | பாம் | (வெடிகுண்டு) |
| பைல் | (தவறிவிடு) | டூத்ப்ரஷ் | ............ |
| கிளாஸ் | (வகுப்பு) | ஷர்ட் | (உள் சட்டை) |

அந்தந்த வார்த்தைகளுக்கு எதிரே காட்டப்பட்டிருக்கும் சரியான பதங்களும் நடைமுறையில் இருக்கின்றன. அவற்றையே எழுத்து முறையில் எழுதப் பழக்கம் கொடுக்கவேண்டும்.

C. பிறகு, அப்பொழுது இவ்வார்த்தைகள் பலதரம் உபயோகப்பட்டு வருகின்றன. கடிதம் எழுதுவதில் ஆரம்பிக்கும் முறையும், முடிக்கும் முறையும், சரியாய்த் தெரியவில்லை. சில வாக்கியங்கள் முடிவு அடையாமலும் பல விஷயங்கள் ஒன்றுக்கொன்று சரியாக பிணைக்கப்படாமலும் எழுதப்படுகின்றன. மனதிலுள்ள பாஷையை எழுதிக் காட்டும்பொழுது மனோ வேகம் கைவேகத்தைவிட வெகு சீக்கிரமாகப் பறந்து செல்லுகிற காலத்தில் சில சம்பவங்களும், சில வார்த்தைகளும் நழுவி விட்டுவிடப்படுகின்றன.

## D. இலக்கணப் பிழைகள்

பாஷை முன்னே, இலக்கணம் பின்னே. பாஷையை நன்றாய்ப் பேசக் கற்றுக்கொண்ட பிறகு அதன் இலக்ஷணத்தை அறிதல் வேண்டும். மேலே காணப்பட்ட சுய வியாசங்களில் தென்பட்ட பிழைகள் பின் வருமாறு.



வாக்கியத்தின் அமைப்பு

ஒருமை பன்மை

முக்காலம்.

சொல், பெயர்ச்சொல், வினைச்சொல், உரிச்சொல்.

சந்திகள்—இவைகள் சம்பந்தப்பட்டவை.

சிற்சில பாடங்களில் இவைகளின் விசேஷங்களில் அறிவூட்டுதல் அவசியம். தனி இலக்கண புஸ்தகமும் பாட நேரமும் அவசியமில்லை. பிழைகள் நேராவண்ணம் பிரத்தியேகமான பயிற்சிகளால் தோஷங்களைப் போக்குதல் பொருந்தும். கொஞ்சம் இலக்கண ஞானம் வேண்டித்தான் இருக்கிறது. தன்னுடைய பாஷையை இலக்ஷணமாக அமைத்துக் கொள்ளவும், வேறு பாஷைகளைப் படிக்கிற காலத்தில் இலக்கண சம்பந்தமான பரிபாஷையை அறிந்து அப்பாஷையில் தேர்ச்சியடையவும் இந்த ஞானம் அவசியமாயிருக்கிறது.

## கூட்டாளி எழுதின விஷயத்தை அறிய ஆவல்

நான் எடுத்துக்கொண்ட பத்து விஷயங்களைப்பற்றிப் பிள்ளைகள் எழுதி முடிக்கும்பொழுது மற்றவர்கள் அவ்விஷயங்களைப்பற்றி என்ன எழுதியிருக்கிறார்கள் என்று அறிய ஆவலுள்ளவர்களாயிருந்தார்கள். அது மெச்சத் தகுந்தது. அவரவர்கள் எழுதியுள்ள வியாசங்களைத்திருத்தி அத்திருத்தங்களை அமைத்துமறுபடி எழுதச்சொல்லுவதும், இவைகளைச் சேகரம் செய்து வகுப்புப் பிள்ளைகளிடம் கொடுத்து சில பிள்ளைகளின் நோட்டுப் புஸ்தகங்களை வெளிப்படையாக அல்லது மனதிற்குள் படிக்கச் செய்வதும் நல்ல பலனைத் தரும். உதாரணமாக ஒவ்வொருவரும் தீபாவளி தினத்தைத் எப்படிக் கொண்டாடினார்கள், எந்த ஊருக்குச் சென்றிருந்தார்கள், என்னவினோதமான கனைக்கண்டார்கள், என்ன சமாசாரம் கேள்விபட்டிருக்கிறார்கள் என்று அறிய அவா வுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

## கொஞ்சம் வேடிக்கை

இந்த விஷயத்தில் பிள்ளைகள் ஒருவர்க்கொருவர் எழுதிக்கொள்ளும் கடிதங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன.

ஸ்டாம்பு இல்லாத கடிதம்
ரயிலில் செல்லாத கடிதம்
தபால்காரன் கொண்டுவராத கடிதம்
} என்ன கடிதம்?

விடை—பிள்ளைகள் கடிதம்.

**(உதாரணம்)**

i. K. K. என் பேச்சுக்குக் காயா, பழமா, என்று நான்கேட்டு கொள்ளுவது,—நான் பழம்விடப் போகிறேன்.

ii. கமலக்கண்ணனுக்கு எழுதியது.

மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். காயா பழமா என்று தயவுசெய்து சொல்.

iii. இன்றைக்குள் விடை சொல்லவேண்டும்.

iv. அவசரமாய்ச் சொல்.

இக்கடிதம் தங்கள் உள்ளத்தில் உள்ளதை உண்மையாக வெளியிடும் பாஷையானதால் இவற்றை உதாரணமாக எடுத்துக்கொண்டேன். இவற்றிலுள்ள பாஷையும் வெகு மரியாதையாகவும், தனும்பும் அன்பையும் வெளிக் காட்டுகிறது. இம்மாதிரி போக்கு வரத்துக் கடிதங்களை உபாத்தியாயர் கண்டறிதல் அவசியம். உபாத்தியாயருக்கும் தெரியாமலே கம்பியில்லாத் தந்திபோல் இக்கடிதப் போக்கு நடப்பது குழந்தைகளின் இயற்கையாகும். குழந்தைகளின் உபாத்தியாயர் இதில் சிரத்தையெடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லவும் வேண்டுமா? ஒருவர்க்கொருவர் ஏதேனும் மனக் கசப்புடன் பேசாமலிருந்து வருவார்களானால் உபாத்தியாயர் அவர்களை ஒற்றுமையுள்ள நண்பர்களாகச் செய்வது போற்றத்தக்கதே.

## தினசரிச் சம்பவங்கள்

அன்றாடம் சம்பவிக்கும் விசேஷங்களைக் குழந்தைகளுக்குச் சொல்லுவதும், அவர்கள் காதுக்கெட்டும் சமாசாரங்களை நாம் அறிவதும் உபயோகமானது. சில பிள்ளைகளுக்கு இதில் உற்சாகம் இருந்து வருகிறது. தமது வீட்டிற்கோ பக்கத்து வீட்டிற்கோ பத்திரிகைகள் வந்து அதைப் பற்றிப் பெரியவர்கள் பேசும்பொழுது பாலர்கள் அதைக் கேட்பது சாத்தியமாயிருக்கிறது. ஆயினும் அதிகப் பிள்ளைகளுக்கு இம்மாதிரி சந்தர்ப்பம் கிடைப்பது அரிதாயிருக்கிறது. தினசரிப் பத்திரிகையிலுள்ள சில விஷயங்களைப் படித்துக் காட்டுவது, ஒரு தமிழ் பத்திரிகை வரவழைத்து ஏதேனும் சில விஷயங்களை அவர்களைக்கொண்டு படிக்கச் செய்வது, பள்ளிக்கூடத்திலேயே ஒரு பலகையில் தினசரிச் சம்பவங்களில் முக்கியமானவற்றை எழுதி வருவது முதலான முறைகளை அனுஷ்டிக்கலாம். நான்காவது ஐந்தாவது வகுப்பு உபாத்தியாயர்கள் தமது வகுப்பு அறையில் இம்மாதிரி ஒன்று எழுதித் தொங்க விடுவது உசிதமாயிருக்கும்.

| இடம் | விஷயம் |
|---|---|
| திருநெல்வேலி | பெருமழையினால் ஏற்பட்ட கஷ்டங்கள் 1. ரயில்போக்கு தடைப்பட்டது. |
| மாம்பலம் | 2. மவுண்ட்ரோட்டுப் பள்ளிக்கூடத்திற்கு வந்து கொண்டிருந்த 2 பிள்ளைகள் ஓடையில் அகப்பட்டு இறந்தனர். |
| கும்பகோணம் | தீபாவளி "எலெக்டிரிக் பாம்" வெடி விபத்து 1. ஒருவர் கை 5 விரல்களும் கருகி விட்டன. 2. மற்ற ஒருவர் இடது கை கட்டைவிரல் பிய்ந்து விட்டது. 3. மற்றும் 10 பேருக்குச் சொற்ப காயம். |
| மன்னார்குடி | தைரியமுள்ள பெண்: ஜலம் இழுக்கச் சென்ற ஒரு சிறுமி கிணற்றில் தவறி விழுந்து விட்டாள். ஆனால் வெகு தைரியமாக கயற்றை கையால் பிடித்துக் கொண்டு ஒரு காலை சுவற்றிலுள்ள இடுக்கில் வைத்துக் கொண்டாள். இவள் கூச்சல் கேட்டு ஜனங்கள் வந்து இவளை வெளியே இழுத்து விட்டு விட்டார்கள். |
| ஷிமோகா (மைசூர்) | சிறுத்தையைக் கொன்ற தீரன்: ஒரு சிறுத்தை ஒரு பையனைச் தூக்கிச் சென்றது. பையனின் தகப்பனார் குழந்தையைத் தப்புவிக்க முயன்றார். சிறுத்தையின் முன் கால்களைத் தைரியமாகப் பிடித்துக் கொள்ள பையன் தப்பித்துக் கொண்டான். வெகு நேரம் தகப்பனார் புலியுடன் போராடினார். வழியில் வந்து பஸ்ஸில் உள்ளவர் புலியைக் கொன்றார்கள். தகப்பனாருக்கு ஒரு வெகுமானம் கிடைத்தது: |
| லண்டன் | சீமையில் பிரதமமந்திரியாயிருந்து M. ராம்ஸே மாக்டொனால்ட் மார்புஅடைப்பு ஏற்பட்டு கப்பலில் இறந்துவிட்டார். |
| சைதாப் பேட்டை | நான்கு நாட்களாக இடைவிடாமல் மழை. ஆற்றில் வெள்ளம். ஒரு ஸ்திரீ அடித்துக்கொண்டு போகப் பட்டாள். கோயில குளம் நிரம்பி தெருவில் ஜலம் வந்து விட்டது. |
| சென்னை | மவுண்டு ரோட்டில் இருந்த நீல் துரை சிலை ஞாயிற்றுக் கிழமை இரவு 3—மணிக்கு பொருள் காட்சி சாலைக்கு கொண்டு போய் வைக்கப்பட்டிருக்கிறது. |
| கல்கத்தா | ஜகதீச சந்திர போஸ் என்ற ஒரு கியாதி பெற்ற தாவர சாஸ்திரி இறந்து விட்டார். அவர் இறந்தது நமது தேசத்திற்கு பெருத்த நஷ்டம். |
| சென்னை | கிராமத்தாருக்கு நல்ல தேகப்பயிற்சி கொடுக்க யோஜனை. போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு ஓட்டம் ஆட்டம், பந்தயங்கள் இவை நடத்துவார். |
| திருவாரூர் | 127 வயதுள்ள சாமியார் ஒருவர் இருந்து வருகிறார். பாலும் பழமும் மாத்திரம் சாப்பிட்டு வருகிறார். |



## குழந்தைகளின் கதைகள்.

1. அரசனும் 3 பிள்ளைகளும்
2. பாண்டவர் கதை
3. காக்கையும் குருவியும்
4. மாயமோளம் (2 பேர்)

5. ஆபத்தில் உதவாத நண்பன்*
6. குருவும் சீடர்களும்
7. பேராசை பெரு நஷ்டம்*
8. வள்ளி திருமணம்
9. கோழிக்குஞ்சு பணக்காரியானது
10. ஆருனி (உத்தம சீடன்)
11. எலியும் பூனையும் *
12. நரியின் கதை
13. வானம் விழுந்த கதை (2பேர்)
14. சுண்டெலிக் கதை
15. நரியை ஏமாற்ற முடியுமா ?
16. ஓர் அரசன் கதை
17. தங்க மாம்பழம்
18. ஏழு பெண்கள் கதை
19. நரியும் காக்கையும் †
20. புத்தியற்ற சேணியன் (2பேர்)
21. கஜேந்திரன் கதை (2 பேர்)
22. பரமசிவனிடம் வரம்பெற்ற கதை
23. மாயக்கிளி
24. கிழவியும் 2 பிள்ளைகளும்
25. கிழவியும் மகனும்

* பாட புத்தகத்துக் கதைகள்

† தற்காலத்தில் விசேஷமாக பாலர்களுக்குச் சொல்லப்படும் கதை.

### நாம் தெரிந்து கொள்ளுவதென்ன ?

ஒழிவு நேரங்களில் பிள்ளைகளும் படிக்க ஆசைப்படுகிறார்கள் பெண்களுக்கும் சிலகதைகள் மாத்திரம் அவர்கள் மனதில் அழியாமல் பதிந்து விடுகின்றன. மேலேசொன்ன கதைகளை உற்றுநோக்கினால் பெரும்பாலார் தாங்கள் படித்த கதைப் புத்தகங்களிலிருந்தே ஞாபகம் வைத்திருந்ததும் தமக்கு மிகப் பிரியமானதுமான கதையை எழுதியிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. நான்கு பேர் மட்டும் வாசக பாடங்களிலுள்ள வழக்கமான கதையை எழுதியிருந்தார்கள். ஒருவன் மாத்திரம் 'குழந்தைக் கதை' எழுதியிருந்தான். யாரிடம் பாஷை மிகக் குறைவாயுள்ளதோ அவனாலேயே இக்கதை எழுதப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விஷயம் ஒன்று உளது.

### ஆரம்பப் பள்ளிக்கூடத்திற்கும் வாசகசாலை மிக்க அவசியம்.

1918—1919-ல் நான் 5-வது வகுப்புப் பிள்ளைகளுக்குத் தமிழ் பாடம் சொல்ல நேர்ந்தது. அச்சமயம் உள்ள பாட புத்தகத்தில் சிங்கம், புலி, தென்னைமரம், மரம் செடி கொடி இவைகளைப்பற்றின பாடல்களே நிரம்பியிருந்தன. இப்பாடங்களைப் படித்துப் படித்து குழந்தைகளுக்கும் அலுப்பு ஏற்பட்டுவிட்டது. கதை புத்தகங்கள் படிக்கவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. கதை புத்தகங்களோ கிடையாது அதற்கு என் செய்வது? பதினொரு குழந்தைகள் தாமே இரண்டணா வீதம் கொண்டுவந்த ரூ. 1-6-0 தொகையைக் கொண்டு 10 புத்தகங்கள் வாங்கப்பட்டன. அவற்றையே அவர்கள் மாற்றி மாற்றிப் படித்துவந்தார்கள். பிறகு மாதிரிக்காகக் கதை புத்தகங்களை சேர்ப்பதில் கவனம் செலுத்தப்பட்டு ஒரு புத்தகசாலை என்ற சொரூபத்தை அடைய ஆரம்பித்தது. 20 வருஷங்களுக்குப் பின் அப்புத்தகசாலை 2 பீரோக்கள் நிரம்பிய புத்தகங்களாகக் கண்ணுக்கு முன் நிற்கிறது. ஆகவே மனதில் உதிக்கும் எந்த நல்லெண்ணங்களையும் ஆரம்பித்து நடத்துவதில் சிரத்தை வேண்டும். ஆரம்பிக்கும்பொழுது இடையூறும் இடஞ்சலும் ஏற்பட்டாலும் அவற்றிலிருந்து தப்புவிக்க வழிதேடி காரியத்தைச் சாதிக்கவேண்டும்.



### எம்மாதிரிப் புத்தகங்கள் தேவை?

வகுப்புப் பாடப் புத்தகங்களைவிட சுலபமான நடையில் எழுதப்பட்ட புத்தகங்களே தேவை. நல்ல அச்சு, பெரிய எழுத்து, நிரம்பப் படங்கள், இவை முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். கால்மணி அரைமணி நேரம் படித்து முடிக்கக்கூடிய கதைகளோ, அல்லது ஒரு கதையாகவோ இருக்கவேண்டும். படிக்கபடிக்க கதை ஆசை கொடுக்கத்தக்கதாயிருக்கவேண்டும். புஸ்தகத்தின் பெயரும் கேட்டமாத்திரத்தில் பிரியம் உண்டுபண்ணத்தக்கதா யிருக்கவேண்டும். வாசகபாட விஷயங்கள் சிலவை வெறுப்பைத்தருகின்றன. கடின பதங்கள் நிரம்பியிருக்கின்றன. மனதிற்கு எட்டக்கூடாத விஷயங்கள் வரையப்பட்டுள்ளன. இக்குறைகள் கதைப் புத்தகங்களிலிருந்து நீக்கப்படவேண்டும். குழந்தைகளையே கேட்டபொழுது அவர்கள் அடியிற்கண்ட புஸ்தகங்களைத் தாங்கள் படித்துக் களித்தார்கள் என்று தெரியவந்தது.

| | | | |
|---|---|---|---|
| A. | குசேலர் | மாணிக்கவாசகர் | நல்ல குழந்தை |
| | பால ராமாயணம் | பொன் நாணயம் | பட்டினத்தார் |
| | துருவன் | பஞ்சபாண்டவர் | திருஞான சம்பந்தர் |
| | அரிச்சந்திரன் | கணபதி | நல்ல எறும்பு |
| B. | பொன் ஆடு | தமயந்தி | பீமசேன மகாவீரன் |
| | கதாமஞ்சரி | சாவித்திரி | வீர அபிமன்யு |
| | பொன் மோதிரம் | சிறுவர்க்கான சிறுகதை | சத்திய நாராயணன் |
| | சந்திரஹாசன் | நீதிக்கதைக்கொத்து | கோவலன் |
| | உலகநீதி | லவகுசா | கண்ணபிரான் |
| | இரணியன் | நந்தனார் | பொன் கிளி |

### இடைக்கால நேரங்களில் படிக்க வசதி தேவை

ஒழிவு நேரங்களைச் சற்றே ஏதாவது மேல் பார்வையாகப் பார்த்துப் படிக்கத்தக்க சிறு சிறு கதைப் புத்தகங்கள் தேவை. சாதாரணமாக வாரப்பதிப்பு, மாதபத்திரிகை இவைகளில் காணப்படும் கதைகளைப் பிள்ளைகள் படிக்க ஆசைப்படுகிறார்கள். கலைமகள், கதைகள், சுதேசமித்திரன் சிறுவர் பகுதி ஆனந்தவிகடன் பாபா மலர் இவைகளைச் சேகரம் செய்து வைப்பது நல்லது. பத்து நிமிஷம் பார்த்துவிட்டுப் போக இவை இடமளிக்கின்றன. மற்றும் பத்திரிகை என்றும் அவசியம்

சுலபமான சில விஷயங்களைப் படித்து அறிந்துகொள்ள பத்திரிகை பிரயோஜனப்படும்.

## விடுமுறை நாள் வாசகசாலை

படிப்பு, வாசிப்பு என்பதற்கு ஓய்வு என்றும், ஒழிவு என்றும் விடுமுறை நாள் என்றும் கிடையாது. வாசிப்புப் பழக்கம் இல்லாக் குறையினாலேயே பலர் படித்ததை மறந்து விடுகிறார்கள். நமது நாட்டில் இந்தக்குறை நிரம்பக் காணப்படுகிறது. 3, 4 வருஷங்கள் படித்த பிள்ளைகள் படிப்பை விட்டு விட்டுப் பெரியவர்களான பொழுது படிப்பையே மறந்து ஆரம்ப வகுப்பில் சேர்ந்து படிக்கவேண்டிய பரிதாப நிலையில் இருக்கிறார்கள். ஆகவே யான் இரண்டு மூன்று கோடைகால விடுமுறை நாட்களில் பிள்ளைகளுக்கென்றே ஒரு புத்தகசாலை ஏற்படுத்த நேரிட்டது. பள்ளிக்கூடம் மூடுமுன் இந்த ஏற்பாட்டைக் குறித்துச்சொல்லி ஒரு துண்டு நோட்டீஸும் கொடுக்கப்பட்டது. வாசகசாலை திறந்த காலையில் ஊர் முழுவதும் தண்டோரா போடப்பட்டது. வாசகசாலை வருகிற பிள்ளைகளுக்குச் சற்றுநேரம் உபாத்தியாயரே கதைபடிப்பார். பிறகு அவரவர்கள் தமக்குத் தேவையான புத்தகங்களை எடுத்துப்படிப்பார்கள். அங்கு விடுகவிகள், தெனாலிராமன் கதை, இவை நன்கு வாசிக்கப்பட்டு வந்தன. மற்றும் உட்கார்ந்து விளையாடத்தக்க ஆட்டங்களும் அதற்கேற்ற உபகரணங்களும் தேவை. பரோடா சமஸ்தானத்தில் படிப்பு பரவியிருக்கிறதென்றால் அங்கு பாலர் முதற்கொண்டே வாசகசாலைக்கு வந்து விளையாடுவதற்கு ஏற்ற சாதனங்களை அமைத்திருக்கிறார்கள் என்பது கவனிக்கத் தகுந்தது.

## வாசகசாலை சம்பந்தமான மற்றும் சில ஏற்பாடுகள்

ஒருவருஷம் வீட்டிலேயே புஸ்தகங்கள் கொடுப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டது. திண்ணையில் உட்கார்ந்து தேவையான கதைப் புத்தகங்கள் எடுத்துப் பிள்ளைகள் படிப்பார்கள். மற்றும் ஒருவருஷம் ஒரு பையனே கதைப்புஸ்தகங்களை வைத்துக்கொண்டு அவன் வீட்டிற்கு வந்தவர்களுக்குக் கொடுத்துவந்தான். பள்ளிப் பிள்ளைகளைத் தவிர மற்றும் படிப்பு விட்டுவிட்ட பிள்ளைகள் எத்தனையோ பேர் புஸ்தகம் கிடைக்காமலும் படிப்பைத் தொடர்ந்து செல்லக் கூடாமலும் இருக்கிறார்கள். இதே மாதிரி நிலைமையில் உள்ளவர்கள் சீக்கிரத்தில் படிப்பை மறந்துவிட நேரிடுகிறது. ஒரு சமயம் தெருத்தெருவாகச் சென்றும் புத்தகம் கொடுத்துவரும் வண்டியிலிருந்து புஸ்தகம் பெற்றுப் படிக்க சில பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்காகவே அங்கத்தினர் ஆனார்கள் என்பது குறிப்பிடத் தகுந்தது. மேலும் பல பெண்கள் பிள்ளைகளைவிட படிப்பதில் ஆசையுள்ளவர்களாக விருக்கிறார்கள். அவர்களுக்கும் இம்மாதிரிப் புத்தகம் கொடுத்துவர ஏற்பாடு செய்வது மிக்கப் பொருத்தமாயிருக்கும்.



147646 சென்னை-600 008

இம்மாதிரி வாசகசாலையிலுள்ள புஸ்தகங்களின் ஜாபிதா ஒன்று தொங்கவிடப்படவேண்டும். தேவையான புஸ்தகங்களைத் தாமே எடுக்க ஏற்ற வசதியளிக்கப்படவேண்டும். ஒவ்வொரு புத்தகத்தில் உள்ள நல்ல விஷயங்களும் கட்டாயம் படிக்கப்படவேண்டிய விஷயங்களும் ஒரு துண்டுக் காகிதத்தில் குறிக்கப்பட்டு புத்தகத்தின் பின்புற உள் அட்டையில் ஒட்டப்பட்டிருப்பது நல்லதாகும். படப் புஸ்தகங்களுக்குத் தனியான ஜாபிதாவும் பிரத்தியேகமாக வைக்கப்பட்டிருக்கவேண்டும். நமது தேசத்தில் படங்கள் எவ்வளவோ வீணாகப் போகின்றன. சர்க்கரைப் பொட்டணம் கட்டிக்கொடுக்கப்படுகிற காகிதத்திலும், நல்ல நல்ல படங்கள் கிடைக்கின்றன. இம்மாதிரி படங்கள் பொறுக்குகிறவரைப் பார்த்து என்ன பயித்தியக்காரத்தனம் என்று ஒருவர் முணுமுணுத்துக் கொண்டே போனார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நற்காரியத்திலும் பயித்தியம் இருப்பது போற்றத்தக்கதே. பகவானுக்கே பித்தன் என்று பெயரிட்டு சுந்தரமூர்த்தி நாயனார் அழைத்தார். அந்தப் பெரிய பித்தனது மக்களாகிற நாமும் பைத்தியக்காரர்கள் தான். அம்மாதிரி சேகரம் செய்யப்பட்ட படங்களைப் புஸ்தகங்கள் ரூபமாகத் தைத்து வைக்க வேண்டும்.

## பாஷை, பொது அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற குழந்தைகள் சங்கங்கள்.

தெருத்திண்ணையில் ராமாயண காலக்ஷேபம் நடக்கிறது. புராணம் சொல்லுகிறவர்கள் பாஷையை அப்படியே மழை பொழிவது போல் பொழிகிறார். அதைக்கேட்டு மற்றவர்கள் கரகோஷம் செய்கின்றனர். 'என்ன சொல் வன்மை' வார்த்தைகள் எவ்வளவு முத்து கோத்தாபோல் அடுக்கு அடுக்காக வருகிறதைக் கவனியுங்கள்' என்று பேசிக்கொள்ளுகின்றனர். பாஷையின் மூலமாக கதையும் வெகு தெளிவாகவும் விளங்குகிறது. பாஷையே ஒரு தோற்றத்தையும் மனதுக்கு ஒரு சந்தோஷத்தையும் விளக்குகிறது. பள்ளிக்கூடத்திலும் அம்மாதிரி சந்தர்ப்பங்கள் அமைக்கப்பட வேண்டும். பூகோளம், சரித்திரம், தாவர சாஸ்திரம், பௌதீக சாஸ்திரம் இவற்றில் தேர்ந்தவர்கள் இவைகளில் குழந்தைகளுக் கேற்றவைகளை குழந்தை பாஷையில் படம், சினிமா காட்சி, சோதனை, உபகரணங்கள் மூலமாகப் பொருந்தவைத்து விளக்குவது மெச்சத்தக்கதாகும். உயர்தர உபாத்தியாயர்கள் இம்மாதிரி குழந்தைகள் சங்கங்களுக்கு வந்து போதிப்பதும் ஏற்றதே. இச்சம்பவங்கள் குழந்தைகளின் மனோபாவங்களை அவர்கள் அறிவதற்கு ஏற்ற தருணமாகும்.

பெரும்பாலும் பிள்ளைகள் தாமாகவே ஒரு விஷயத்தைப் பேசச் சக்தியற்றவர்களாக விருக்கிறார்கள். உபாத்தியாயரே ஒரு விஷயத்தைப் பற்றி சிற்சில வாக்கியங்களை எழுதிக்கொடுத்துக் குழந்தைகளைப் படிக்கச் செய்கிறதை நான் பார்த்திருக்கிறேன். அதையே பல குழந்தைகள் எழுதிக்கொண்டும் படிக்கிறார்கள். இதனால் ஒரு தைரியம் உண்டா

JL
T15 M21, N36PA N37.2.9-11

கிறது. பேச்சுப் பழக்கம் கொஞ்சம் விருத்தியடைகிறது. ஆனால் அவர்கள் தாமாகவே எந்த விஷயங்களைக் குறித்துச் சொல்லக்கூடும் என்று உபாத்தியாயர்கள் யோசிக்கவேண்டும். அம்மாதிரி யோசிக்கத்தக்கவாறு சில ஏற்பாடுகளைப் பள்ளிக்கூடத்தில் அமைத்துக் காட்டவேண்டும். 2, 3 பிள்ளைகளை இம்மாதிரி பழக்குவதினால்கூட மற்றப் பிள்ளைகள் அவர்களைப் போல் தாமும் கற்றுக்கொள்ள பிரயத்தனம் செய்யக்கூடும். நாடகம் ஆடுவது, சங்கீதக் கச்சேரி ஏற்பாடு செய்து பிள்ளைகளைக் கேட்டு ஆனந்திக்கச் செய்வது இவை பாஷையில் அபிலாஷை கொள்ள ஏற்பாடுகள் ஆகும்.

## பாஷை விளையாட்டுகள்:

**A.** இரண்டு கேள்விகளுக்கு ஒரே பதில். — விடை.

1. கோழி கூவுவதேன் ?
   தூங்கி விழிப்பதேன்? } பொழுது விடிய.
2. வம்புப் பேச்சு பேசுவதேன்
   பல்லாங்குழி ஆடுவதேன் } பொழுது போக்க.
3. நரி பரியானதேன்?
   பரி நரியானதேன்? } இடம் மாற ஈசன் செயலால்.
4. திரிசங்கு தொங்குவதேன் ?
   உபாத்தியாயர் கோபிப்பதேன் ? } குரு சொல் கேளாமல்.
5. ராமன் கானகம் சென்றதேன் ?
   பார்க்கவன் தாயைக் கொன்றதேன்? } தந்தை சொல் காக்க.
6. ஹரிச்சந்திரன் மயானம் காத்ததேன் ?
   ராமன் வனம் சென்றதேன் ? } ஸத்தியத்தைக் காக்க.
7. பல்லைக்காட்டி கெஞ்சுவதேன் ?
   கூத்தாடி நெளிப்பதேன் ? } பணம் பிடுங்க.
8. பால் சுண்டுவதேன் ?
   தங்கம் உருகி ஓடுவதேன் ? } காய்ச்சக் காய்ச்ச.
9. குழந்தை கலங்கி நின்றதேன் ?
   திருடன் குற்றம் கண்டதேன் ? } கண் விழிக்க.
10. புலி புளியாவதேன் ?
    சொல்லு கொள்ளு ஆவதேன் ? } லகர ளகரம் மாற.
11. நாலு எட்டு பதினாறு ஆவதேன்?
    விளக்குமாறு தேய்வதேன் ? } பெருக்கப் பெருக்க அல்லது கூட்டக் கூட்ட.
12. செவ்வாய் விடிவதேன் ?
    நிலா மறைவதேன் ? } திங்கள் போக.
13. ஒன்று முக்கால் ஆவதேன்?
    கால் கல் ஆவதேன் ? } கால் போக.



"ா" இதை கால் வாங்கு என்று சொல்லுவது வழக்கம்.

மேலே சொல்லப்பட்ட உதாரணங்கள் இருச்சொல் அலங்காரம் என்ற வகைக்கு உதாரணம் ஆகும். இவை குழந்தைகளுக்கு ஏற்றதாகும்.

## பாஷைப் பயிற்சிக்கு அதிக நேரம் வேண்டுவது அவசியம்

மேலே சொன்ன பிரகாரம் எல்லாம் பாஷைப் பயிற்சி கொடுப்பதென்றால் தற்காலம் நடைமுறையிலுள்ள காலவரம்பு போதாது. அதிக நேரம் வேண்டுமென்றே நினைக்கிறேன். மேலும் எல்லாப்பாடங்களையும் தாய்பாஷையிலேயே நடத்துகிறோம் என்று வைத்துக்கொண்டாலும் பாஷையைவிட விஷயங்களை உரைக்கவே போதுமான நேரத்தைக்கழித்து விடுகிறோம். பாஷை என்பதின் கீழ் புஸ்தகத்திலுள்ள சிற்சில விஷயங்களைப் படிப்பதிலும், கேள்விகளுக்குப் பதில் சொல்ல அல்லது எழுதப் பயிற்சி கொடுப்பதிலுமே காலஞ் செலவழிக்கப்படுகின்றன. மேல்நாடுகளில் பாஷைகளுக்காக ஒருவாரத்தில் எவ்வளவு நிமிஷம் செலவழிக்கிறார்கள் என்பதை அடியிற்கண்ட அட்டவணையினால் அறியமுடியும்.

| | வகுப்புகள் | | | | |
|---|---|---|---|---|---|
| பாடங்கள் | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 வேதம் | 150 | 150 | 150 | 150 | 150 |
| 2 ஆங்கிலம் * | 270 | 310 | 250 | 235 | 265 |
| 3 கணிதம் | 250 | 250 | 250 | 250 | 250 |
| 4 வாசிப்பு * | 240 | 160 | 205 | 245 | 265 |
| 5 எழுத்து * | 130 | 150 | 120 | 155 | 135 |
| 6 பூகோளம் | 70 | 70 | 60 | 70 | 70 |
| 7 சரித்திரம் | 60 | 60 | 60 | 70 | 70 |
| 8 இயற்கை சாஸ்திரம் | 30 | 40 | 30 | 30 | 30 |
| 9 சங்கீதம் | 50 | 65 | 65 | 60 | 60 |
| 10 தேகப்பயிற்சி | 85 | 90 | 95 | 100 | 119 |
| 11 ஊசிநூல் வேலை (பெ.) | 160 | 160 | 160 | 120 | 110 |
| 12 கைவேலை (ஆண்) | 160 | 160 | 160 | 120 | 110 |
| 13 சித்திரம் | 40 | 40 | 40 | 40 | 40 |

* இம்மூன்று அடையாளங்களுக்கு நேரே காட்டப்பட்டுள்ள மொத்தத்தைச் சேர்க்க பாஷைகளுக்கு விடப்படுகிற நேரம் எவ்வளவு என்று தெரியும்.

நூதனக் கல்வி சங்கத்தார் தூதுகோஷ்டியினர் கொணர்ந்தபொருள் காட்சியிலுள்ள ஒரு பகுதியில் காணப்பட்ட அட்டவணையேயாகும்.

இதிலிருந்தாவது பாஷைப் பாடத்திற்குச் செலவாகும் நேரம் குறைவு என்று தெரிந்துகொள்ளலாகாதா !

*(All Rights Reserved.)*

# நவீன போதனா முறை; ஓர் எதிர்ப்பு

(பி. சுப்பிரமணிய அய்யர் தியாகராஜ நகர்)

பெரிய வகுப்புகளிற் படிக்கும் குழந்தைகள் கூட தமிழைச் சரியாக எழுதவும் படிக்கவும் கற்றார்களில்லையே. செய்யத்தகாத எழுத்துப் பிழைகளநேகஞ் செய்கிறார்களே. காலம் செல்லச் செல்ல மாணவர் நிலை கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறதே என்று அநேகர் வருந்திப்பேசுவதை யாம் கேட்கிறோம்.

பொதுவாக, பழமையானவைகளையும், சிறப்பாக தனது சம்மந்தம் பெற்றவைகளையுமே மேன்மைப்படுத்திப் பேசும் சுபாவமுடையோர் தம் கூற்றிது வென்று இலேசாகப் புறக்கணிப்பவருமுளர். உண்மையை யறிய ஊக்கமும் ஆற்றலும் இலாதாரே இவ்வெளிய வழியைக் கைக்கொள்வர். இந்நிலைமையின் உண்மையை யறிந்தாலும் அதனோடு நிற்பதற்கில்லை. அதன் காரணங்களை யாராயவும் பின்னரவைகளைப் போக்கவும் வழி தேட வேண்டும். இத்துன்பங்களைத் தாமே வலிய மேற்கொள்ளுதற்கு மனோ திடமற்றவரும் இன்னோரேயாவர்.

பல வருஷங்கள் படித்த பின்னும் மாணவர் போதிய அளவு தேர்ச்சி பெறுவதில்லை என்றே யான் நினைக்கிறேன்.

### காரணங்கள்

(1) ஆசிரியர்களிடத்திலோ அல்லது (2) மாணவர்களிடத்திலோ அல்லது (3) போதனா முறையிலோ ஏற்பட்டுள்ள மாறுபாடுகள் தனித் தனியாகவோ அல்லது ஒன்று சேர்ந்தோ இந்நிலைக்குக் காரணங்களாக அமைதல் வேண்டும்.

### முதற்காரணம்

அந்தந்த காலத்து உபாத்தியாயர்களும் தத்தம் மாணவப் பருவத்திலே மேன்மேலும் மாறுபட்டுக் கொண்டே வந்திருக்கிற போதனா முறையின்படியே பயிற்சி பெற்றிருப்பாராதலான் அவர்களிடையே தோன்றும் மாறுதல்களுக்கும் போதனா முறையின் மாறுதல்களே அடிப்படையாக விளங்குகின்றன. பெற்றோரைப்போன்றே மக்களும் ஆவது இயல்பானால் குழந்தைகளிடத்திற் காணப்படும் மாறுதல்களுக்கும், புதிய முறையின் படியே பயின்று வந்த தாய்தந்தையரே காரணமாவர். ஆகவே போதனா முறையிலேற்பட்டிருக்கும் மாறுதலே ஆதிகாரணமாகத் தோன்றுகிறது.



### போதனா முறையிலேற்பட்டிருக்கும் மாறுதல்கள்

போதனா முறையின்கண் ஏற்பட்டிருக்கும் மாறுதல்கள் இரண்டு வகையாக உண்டாகி இருத்தல் கூடும் (1) பண்டை முறையின் சில அம்சங்கள் விடப்பட்டிருக்கலாம். (2) புதியதாக சில பாகங்கள் புகுத்தப் பெற்றிருக்கலாம்; அல்லது இவ்விரண்டும் ஒருங்கே பொருந்தி இருப்பினும் இருக்கலாம்.

### விடப்பட்ட அம்சங்கள்

1. எழுத்துக்கள் போதித்தலைப் பிரதானமாகக் கருதுதல்,
2. அவைகளைப் பழுதறக் கற்ற பின்னரே கவனத்தை வேறு வழி செல்ல விடுதல்,
3. பன் முறை எழுத்துக்களை எழுதிப் பழகுதல்,
4. கூட்டிப் படித்தல் ஆகிய இவைகளாம்.

### புகுத்தப்பெற்ற பாகங்கள்

1. குழந்தைகளை யுற்சாகப்படுத்துதலும்.
2. போதிக்கப்படும் விஷயங்களை ரஸிக்கும்படி செய்தலுமாம்.

### தற்கால உபாத்தியாயர்கள் புதிதாக அறிந்த விஷயம்

இந்நாட்களில் ஆங்காங்கு நடைபெற்றுவரும் போதனா முறைக் கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் மாணவர்கள் படிக்கும் புத்தகங்களிலிருந்தும் கேட்கும் சொற்பொழிவுகளிலிருந்தும் சாரமாக அறிய வேண்டுவது ஒன்றே யுளது. அது குழந்தைகளிடம் அன்பும் அனுதாபமும் கொண்டொழுகவேண்டு மென்பதே யாம். குழந்தைகள் பாடம் கற்குங் காலங்களில் அவர்களுக்கேற்படும் கஷ்ட சுகங்களையும், இளைப்பு களைப்புகளையும், மற்று மிவை போன்ற விஷயங்களையும், அறிவு அனுபவம் முதலியவைகளால் முன்னதாகவே யறிந்து அவைகளுக்கேற்ப நடந்துகொள்ள வேண்டு மென்பதுமாம். மேநாட்டு சாஸ்திரஞர்கள் நமக்கு இக்காலத்திலுதவி யிருப்பதாகக் கருதப்படும் மனோ தத்துவ சாஸ்திர அறிவினால் கிடைக்கப்பெறுவதும், அன்பு மனுதாபமுங் குடிகொண்ட மனப்பான்மையே யாகும். குழந்தைகளை யுற்சாகப் படுத்துவதும் விஷயங்களை ரஸிக்கச் செய்வதும் மேலே கூறிய மனப்பான்மையான் விளையும் நன்மைகளே யாம். மனோ சாஸ்திர அறிவு தற்காலத்தில் பிரசாரத்திலிருப்பதனாலேயே ஆசிரியர்க ளெல்லோரும் அன்பும் அனுதாபமும் கொண்டொழுகுகிறார்க ளென்பதற்கில்லை. இச் சாத்திரம் பண்டை நாட்களில் பிரசாரத்தி லில்லாமையினால் அந் நாளாசிரியர்க ளெல்லோரும் கொடுமைகளிழைத்ததாக நினைத்தலும் தவறே.

### நாம் அங்கீகரிக்கவேண்டியது எது?

மேனாட்டுப் போதகாசிரியர்கள் மிகுந்த அன்பும் அனுதாபமும் குடிகொண்ட மனத்தினரா யிருந்து பள்ளிச் சிறுவர்களுக்குத் தகுந்த முறைகளின்படி அவரவர் பாஷைகளைப் போதித்து வருவாரானால் நாமும் (adopting the details) அம் முறைகளை யங்கீகரித்து ஏற்றுக்கொண்டு நம் பாஷையைப் போதிக்கவும் அம் முறைகளையே கையாளுவது ஒழுங்காகாது. இதற்கு மாறாக அவர்களைப் போலவே, (முடியுமானால் அவர்களுக்கு அதிகமாகவும்) (inabibing the spirit) அக்குணங்களை விருத்தி செய்துகொண்டு நமது பாஷைக்கேற்ற முறைகளை நாமே கண்டு கையாள்வது சாலவும் தகுதி யுடைத்தாம். இத்தகைய தெளிவான உணர்வின்மையினாலேதான் பண்டை முறையிலுள்ள சில சிறந்த அம்சங்கள் விலக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

### மற்றொரு தப்பபிப்பிராயம்

ஓரிருட்டறைக்கு விளக்கொன்று கொண்டு சென்றால் எப்படி ஒரு க்ஷணம்கூட அவ்விருள் நிலைத்திருக்க முடியாதோ அதுபோல் குழந்தைகளை யுற்சாகப்படுத்த வேண்டுமானால், பண்டை முறையின் அம்சங்கள் நிலைத்திருக்க முடியாதென கருதப்படுகிறது. வெளிச்சத்திற்கும் இருளிற்குமுள்ள முரண் ஈண்டு இலதாகலின் அந்த அம்சங்களை விலக்கவேண்டிய அவசியமும் இலதாகிறது. இந்த அம்சங்கள் நீங்கப்பெறுவதினாலேயே குழந்தைகள் எழுதுவதிலும் படிப்பதிலும் அதிக எழுத்துப் பிழைகள் செய்கிறார்கள்.

### அளவுக்கு விஞ்சிய அவா

குழந்தைகளை யுற்சாகப்படுத்தவேண்டுமென்னும் அவாவினால் சிலரடைந்திருக்கும் அதி தீவிர புத்தியானது, பாஷையைப் பிழை யில்லாமலெழுதவும் படிக்கவும் குழந்தைகள் கற்பதே சாலச் சிறந்ததெனும் எண்ணத்தையே மங்கும்படி செய்வதோடு மறந்து போம்படியும் செய்கிறது. இவ்வழியே போதனா முறை விருத்தி யடைந்துகொண்டே போவதற்கு மூன்று காரணங்களுள. அவை (1) ஆசிரியர்கள் சலிப்பில்லாத மனத்தினராய் ரஸிக்கச் செய்யும் மார்க்கங்களையே சிந்தித்துக்கொண்டிருத்தலும் (2) குழந்தைகள் வேறு காரணங்களினால் உடல் நலனும் மனோ நலனும் அற்றவர்களாய்க் கொண்டிருத்தலும் (3) பெற்றோர் தங்கட் குழந்தைகளை யிளம் வயதிலேயே பள்ளியிற் சேர்த்து உடனே பாடங்களைத் திணிக்க அவாவுதலுமாம். குழந்தைகள் வரவர பலஹீனர்களாய்க் கொண்டிருப்பதற்கு மற்றக் காரணங்களோடு இளம் வயதிலேயே பாடங்கள் கற்கத் தலைப்படுவதும் ஒன்றாகும்.

### படிப்பில் கஷ்ட மேற்படுவதேன்?

குழந்தைகள் மன உவப்போடு செய்யுங் காரியங்களை விலக்கி, எந்தக் காரியங்களை யவர்கள் செய்வது தமது புத்திக்கு நல்லதென்று



தோன்றுகிறதோ அக்காரியங்களைச் செய்யும்படி குழந்தைகளை உபாத்தியாயர்கள் வற்புறுத்துவதனாற்றான் அவர்களுக்கு படிப்பில் கஷ்டமேற்படுகிறது. இக்கஷ்டம் தோற்றாதவாறு செய்வதே உபாத்தியாயருடைய லக்ஷியமாக இருந்துவருகிறது. இந்த லக்ஷியத்தை மனத்தில் உன்னியே பலவிதமான மாறுதல்களுண்டாக்க சிலர் முற்படுகிறார்கள்.

### கஷ்டங்களை வேறு வகைகளில் குறைத்துக்கொள்ளுவ தெப்படி?

ஐந்து வயதுள்ள குழந்தையை ஒரு வேலை செய்யச் சொல்லுகிறோம். அதில் ஓரளவு கஷ்டம் இருக்கிறது. அதே வேலையை ஐந்தாம் வயதில் கொடுக்காமலிருந்து ஆறாம் வயதில் கொடுத்தால், ஆசிரியன் அவ்வேலையை ரஸிக்கச் செய்வதற்கு, முன்பு எவ்வளவு பாடுபடவேண்டி இருந்ததோ அவ்வளவு பாட்டிற்கு இப்போது அவசியமிராது. ஏன்? (1) ஒரு வருஷகாலம் இயற்கையோடியைந்த விளையாட்டுகளில் ஈடுபட்டு களித்திருந்தமையால் ஏராளமான சரீரநலனும் மனோ நலனும் அக்குழந்தை எய்தியிருப்பான். (2) ஒருவருஷ அனுபவத்தின் உதவியால் கொடுக்கும் வேலை முன்னையினும் நன்றாக விளங்கும் (3) அந்தவேலையை ஐந்துவயதான குழந்தைக்குஉபாத்தியாயர் கொடுமையிழைப்பதாக பார்ப்பவர் நினைக்கக்கூடும். அந்த வேலையை ஆறாம் வயதில் கொடுத்தால் அவ்வளவாக கொடுமை என்று நினைக்க இடமிராது. ஆகவே விஷயங்களை ரஸிக்கச் செய்வதாவது குழந்தைகளுடைய நிலைக்குத் தக்கவாறும் அவசியமான அளவிலும் இருக்கவேண்டுமே யல்லாது இக்காலத்தில் காணப்படுவதுபோல் ஆசிரியர்களுடைய மனத்திருப்திக்காகவும் அவர்களது ஆற்றலையுணர்த்துதற்காகவும் உதவக்கூடாது என்பதை யுணர்தல் வேண்டும்.

போதனா முறையை மாற்றும் முயற்சியை அறவே விட்டொழித்து வேறு வகைகளில் (1) குழந்தைகளை யுற்சாகப்படுத்தவும் (2) கஷ்டம் குறைந்த அளவிற்றோற்றும்படி செய்யவும் (3) விஷயங்களை ரஸிக்கும்படிச் செய்யவும் முயலவேண்டும்.

(1) ஐந்து வயதில் பாடம் தொடங்குவதற்குப் பதிலாக 6 வயதில் தொடங்கலாம் (2) தினத்திற்கு ஒரு மணி நேரம் சொல்லிக் கொடுக்கும் பழக்கம் முற்காலத்தி லிருந்ததானால் இப்போது தினத்திற்கு அரைமணி நேரமே போதுமென்று திருப்தி யடையலாம். (3) தமிழ்ப் பாடத்திலுண்டாகும் கஷ்டம் தோன்றாதிருக்கச் செய்யவும் தோன்றிவிடின் அதை மறக்கச் செய்யவும் படிக்கும் நேரத்திற்கு முந்தியும் பிந்தியும், பாட்டுப் பாடுதல், சித்திரம் வரைதல், நடித்தல், கைவேலை செய்தல், முதலான உற்சாகம் தரத்தக்க தொழில்களில் குழந்தைகளை யீடுபடுத்தலாம். (4) அனாவசியமான பரபரப்போடு செய்து முடிக்கப்படும் ஆறுமாத பாட திட்டத்தை யோராண்டில் நிதானமாக முடிக்கலாம்.

# குழந்தைகளின் கைவேலை

## பேனா, மைக்கூடு ஸ்டாண்டு




இன்று பேனா மைக்கூடு வைக்கக் கூடிய ஸ்டாண்டு செய்யக் கற்றுக் கொள்வோம்.



19½ அங்குல நீளம், 14 அங்குல அகலம் உள்ள ஒரு அட்டை எடுத்துக் கொள்ளவும். (A B C D முதல் படம் பார்க்கவும்).

A C யில் ஆரம்பித்து 1"; 2"; 8"; 2"; அங்குல நீளமுள்ள புள்ளி கோடுகள் முறையே போடவும்.

பிறகு C D யிலிருந்து அகலத்தில் ¼"; 4", 2", 1", 1", 6", 1", 3" இடை வெளியுள்ளதாய் படத்தில் காட்டியபடி புள்ளிக் கோடு போடவும். படத்தில் காட்டியபடி செய்ய வேண்டிய சாமானின் உருவத்தை வரைந்து கொள்ளவும். F என்று காட்டபட்ட பாகங்கள் மடிப்புகள். இவற்றை மடித்து பக்கங்களில் தோவையானபடி ஒட்ட வேண்டியிருக்கும். சித்திரம் வரைந்த உருவத்தை வெட்டிக்கொள். E. F என்று காட்டபட்ட இவைகளை வெட்டிவிடு. அவைகளே மசிக்கூடு வைக்க வேண்டிய இடங்கள். G, H என்றவை பேனா வைக்க வேண்டிய இடங்கள். இம்மாதிரி உருவம் வெட்டிவிட்ட பிறகு சங்கலிக்கோடு காட்டப்பட்ட இடங்களில் மடிக்கவும். மடிக்கும்போது இந்த இடங்களை கூர் கத்தி கொண்டு அரை ஆழம் கீரிக்கொள். அப்பொழுது தான் சுலபமாய் மடிக்க முடியும். நீ செய்கிற மாடல் உன்னைப் பார்த்து இருக்க வேண்டுமானால் நீ அட்டையின் கீழ் பாகத்தில் கீறிக் கொண்டு மடி. படம் 2, 3 பார்க்கவும்).

படம் 2 ல் அட்டையில் மேல் பாகத்தில் அரை ஆழம் கீறியிருக்கிறது. அட்டையை பிறகு அடிப்புறமாக மடித்துக் காட்டப்பட்டிருக்கிறது. பிறகு தொங்கிக் கொண்டிருக்கும் மடிப்புகளை வேண்டிய இடங்களை ஒட்டி படம் 4ல் காட்டியச் சாமனை செய்துக்கொள். நீ படிக்கிற மேஜைக்கு நீயே இம்மாதிரி மசிக்கூடு பேனா ஸ்டாண்டு செய்து கொள்.

(*All Rights Reserved*)

—K. S

147646
சென்னை-600 008.

# பத்திராதிபர் குறிப்புகள்

கூட்டாளிகள்:—

செய்யார் தாலுக்கா ஆரம்ப ஆசிரியர் இரண்டாவது மகாநாட்டைத் திறந்து வைக்கும் காலத்தில் கல்வி மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள், தனது சுற்றுப் பிரயாணத்தில் ஒவ்வொரு ஊரிலும் ஆரம்பாசிரியர்களுக்கு சம்பள பாக்கி இருப்பதையேக் கேட்டுவந்ததாகவும், செய்யாரில் அம்மாதிரிகுறை இல்லாமலிருப்பதைப்பற்றி தனது சந்தோஷத்தை தெரிவித்துக்கொண்டார். அவ்வமையம் அவர் கூறியுள்ளதை ஆசிரியரும் ஆரம்ப பாடசாலை நடத்தும் மானேஜர்களும், மற்றுமுள்ள பொது ஜனங்களும் கவனிக்கவேண்டிய தவசியம். "ஆசிரியர்களுக்கு சம்பளம் ஒழுங்கே கொடுக்கப்படாமல் அவர்கள் பசியால் வருந்தினால், அவர்கள் சார்பிலுள்ள பாலர்களுக்கு கல்வி போதிப்பார் என்று எவ்வாறு எதிர்பார்க்கக் கூடும்? அரசாங்கத்தார் ஆரம்பக்கல்வியை தங்கள் சார்பிலே எடுத்துக் கொள்ளவேண்டும் என்னும் பிரச்னை ஆசிரியர்கள் ஒழுங்காக சம்பளம் கிடைக்காமல் கொடிதும் வருந்தும் துயரத்தையும் தீர்க்கும் பொருட்டே" என்றார். ஆரம்பக் கல்வி விஷயத்தில் அரசாங்கத்தாரும், ஆசிரியர்களும் **கூட்டாளிகள்** என்று டாக்டர் சுப்பராயன் அவ்வமையத்தில் சொல்லியுள்ளார். ஆனால் கூட்டாளிகளுக்கு ஒரு சமத்வம் அவசியமல்லவா? ஆசிரியர்கள் பலருக்கு கிடைக்கும் தாழ்ந்த ஊதியமும், காலத்தில் கொடுக்கப்படாமலிருக்கும் பொழுது ஆரம்பக் கல்வியில் ஏற்படும் குறைகளுக்கு ஆசிரியர்களே காரணம் என்று பலர் சொல்லிவருவது நியாயமாகுமா? சில நாட்களுக்கு முன்பு, மலபார் ஜில்லாவில் கூடிய உதவி பெறும் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டில் தங்கள் குறைகளை ஒருவரும் கவனிக்காததினால், அவ்வாசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிவருமென்ற தீர்மானம் நிறைவேற்றியுள்ளார். உதவி பெறும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களின் குறைகள் பல உள. அவர்களுக்கு சம்பளம் குறைவு. குறைவான சம்பளமும் பல மாதங்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. இவர்களின் குறைகளை ஒருவாறு தீர்க்க நமது கல்வி இலாகா டைரக்டர் ஸ்டாதம் துரை அவர்கள் கிரண்ட் விகிதத்தில் ரூ. 1—0—0 அதிகப் படுத்த வேண்டுமென்ற சிபார்சை மந்திரி சபை நிராகரித்து விட்டதாகத் தெரிகிறது. இப்பொழுதாவது, சுற்றுப் பிரயாணத்தில் பல இடங்களில் ஆசிரியர்களை சந்தித்து அவர்கள் குறையைக் கேட்ட பின்னர், நமது கல்வி மந்தரியார் உதவி பெறும் பள்ளிக்கூடங்களிலும், ஆசிரியர்களுக்கு போதுமான சம்பளத்தை ஒழுங்காக்க கொடுத்து வருவதற்கு வேண்டிய வழியை உடனே அனுஷ்டிப்பதே மந்திரியின் கடமையாகும். ஆரம்பக் கல்வியில் இப்பொழுது உள்ள குறைகளில் ஆரம்பக்கல்வி முன்னேற்றமடைய வேண்டுமானால், ஆரம்பாசியர்களுக்கு பசிப்பிணி இல்லாமல் ஊக்கத்துடனும் சந்தோஷத்துடனும் தங்கள் பாலர்களுக்கு போதிக்கும் வசதிகள் அருள வேண்டும்.

JL
T15m21) N36PA N37.2.9.1

# பாலர் கல்வி


| | | |
|---|---|---|
| தொகுதி 2 | 1938 ஸ்ரீ பிப்ரவரி மீ<br>ஈஸ்வர ஸ்ரீ தை மீ | பகுதி 10 |


சென்னை-600

## பாஷா போதனைக் குறிப்புகள்

### பாஷைப்பாட விரிவான திட்டங்களும் உயரிய நோக்கமும்

**S. ஜகந்நாதன்** டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

குழந்தையின் பாஷை விருத்தியடைவதைக் காண ஆச்சரியமாயிருக்கிறது. ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் இதை அபிவிருத்தி செய்ய நாம் போதுமான முயற்சி எடுத்துக்கொள்வதைப் பற்றி சிந்திப்பதும் சரியான முறைகளை அனுஷ்டானம் செய்வதும் அவசியம். இனிமேல் பேச்சும் தர்க்கமும் உதவாது. கடுகளவு அனுஷ்டானமே பெரியதாக மதிக்கப்பட வேண்டும். ஒரு குழந்தையின் தாய்பாஷை தமிழ். அது கன்னட பாஷைபேசும் விட்டில் வளர்ந்து வரும்பொழுது கன்னடத்தையும் வெகு சுலபமாகவே கற்றுக்கொண்டு விடுகிறது. கொஞ்ச காலம் கழித்து தெலுங்கு பாஷை பேசுகிறவர்கள் வீட்டில் குடியிருக்கும் பொழுது தெலுங்கிலும் பேசக் கற்றுக்கொள்கிறது. பள்ளிக்கூடத்தில் இங்கிலீஷும் கற்றுக் கொள்ளுகிறது. இவைகளுக்கிடையே தாய் பாஷை நின்றுவிடவில்லை. கதைப் புத்தகங்கள் படித்துப் படித்து அதையும் விருத்தி செய்துகொள்கிறது. தாய் பாஷையில் பற்றுதல் தானாகவே ஏற்படுவது இயல்பு. ஆயினும் உபாத்தியாயர்கள் தாய்பாஷையில் பற்றும் அபிமானமும் ஆசையும் உண்டாக்க வேண்டியவர்கள் தான். அதை மேன்மேலும் வளரச்செய்யவேண்டியதில் கடமைப்பட்டவர்கள். தமிழ்த் தெய்வம் என்று மதிப்பிடப்பட்டுவரும் பெரியார் எந்த இக்கட்டு வரினும் தமிழ் பாஷைக்கு ஒரு குறைவு வராது என்று அருளியிருக்கிறார் என்பது நமது ஞாபகத்தில் வரலாம்.

### தாழ்ந்த வகுப்பினரிடத்தும் தமிழன்னைத் தாண்டவமாடுகின்றாள்

குடுகுடுப்பாண்டி, பெருமாள் மாட்டுக்காரன், தெரு வித்தைக் காரன், பாடிக்கொண்டு வரும் பிச்சைக்காரர்கள் இவர்கள் தமிழ் நன்றாய்ப்

147646
சென்னை-600 008



பேசி வருவது மெச்சத் தகுந்தது. இந்த விஷயத்தில் நான் ஒரு சேரியில் கண்ட சம்பவம் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஒரு இரவு பாடசாலை மாணுக்கன் சேரியில் வசித்து வருகிறுன். அவன் வெகுநாள் வராததனுல் அவனை அழைக்க யான் ஒரு காலை அவன் வீடு செல்ல நேர்ந்தது. காலை 7½ மணியிருக்கும். அவன் உறங்கிக்கொண்டிருந்தான். நான் வீட்டு வாசலில் நின்ற சமாசாரம் அவனது அன்னைக்கு அறிவிக்கப்பட்டது. அவள் அவனை எழுப்பி அவனுடன் வந்து அவனைப் பார்த்து "இப்படி உறங்கிக்கொண்டே யிருந்தால் இலக்ஷ்மி தாண்டவமாடுவாளா?" நாலு எழுத்துத் தெரிந்தால் அல்லவா நல்ல பிழைப்புக் கிடைக்கும் என்று சொல்லி என்னிடம் அவனை அனுப்புவதாக ஒப்புக்கொண்டாள். அவள் பேசின வார்த்தைகளும், கருத்துகளும் எனது மனதைவிட்டு அகல வில்லை. தமிழுக்கு ஜாதி மதம் என்ற பேதமும் இல்லை. திருவள்ளுவரையும் ஔவையையும் பெற்றெடுக்கும்படியான பாக்கியத்தைப்பெற்ற ஆதியின் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு மேலே சொல்லப்பட்ட புலவர்களின் அனுக்கிரகம் போலும். கம்பர் "தமி" என்ற சொல்லைக் கேட்டு எப்படிக் களித்தனரோ அதுபோலவே யான் ஏழுமலையின் தாயார் சொல்லைக் கேட்டுப் பரம சந்தோஷம் அடைந்தேன். பிள்ளைகளிடம் இம்மாதிரி பாஷையைப் பேச அல்லது எழுத சக்தி உண்டாக்குவது எவ்வளவு அழகாயிருக்கும் என்று நினைத்து சில முறைகளைக் கையாளுவது பொருந்தும்.

**அழகான படங்கள் அறிவையும் பாஷையும் பெருக்குகின்றன.**

நான் ஒருதடவை பிள்ளைகளைப் பார்த்து வகுப்பிலுள்ள படங்களைச் சுட்டிக்காட்டி ஒவ்வொரு படமும் ஒரு கதையை அல்லது ஒரு தோற்றத்தைக் காட்டுகிறது. அதை நீங்கள் அழகாய் எழுதிக்காட்ட வேண்டும் என்று சொன்னேன். வகுப்பில் காணப்பட்ட படங்கள் பின் வருமாறு: வருஷா வருஷம் வகுப்பைவிட்டு அடுத்த வகுப்பிற்கு மாற்றப்படும் பிள்ளைகள் ஒன்றுகூடி இப்படங்களை வகுப்பிற்குத் தந்தனர்.

| | | |
|---|---|---|
| கணபதி | ராம பட்டாபிஷேகம் | இராமாயணக்கதை |
| ஆறுமுகன் | ஆஞ்சநேயர் | ராதா கிருஷ்ணன் |
| ஸரஸ்வதி | மச்சயந்திரம் | வேணுகோபாலன் |
| லக்ஷ்மி | (திரௌபதை சுயம்வரம்) | கருடவாகனத்தின் மீது |
| பரமசிவன் | பகவத்கீதை | மஹா விஷ்ணு |
| மஹாவிஷ்ணு | கர்ணன் சண்டை | தாஜ்மஹால் |
| தசாவதாரம் | துருவன் | கோகலே |
| கிருஷ்ணலீலா | பாலகிருஷ்ணன் | சிவாஜி பவானி அம்மன் |
| காளிங்கமர்த்தனம் | புத்தர் | ஸ்ரீராம கிருஷ்ணர் |
| | அகல்யை சாப விமோசனம் | |



**குழந்தைகளின் வர்ணனைகள் : சில மாதிரிகள்**

1. ஆஹா என்ன அழகு! என்ன அற்புதம்! ஆயிரம் தலையுடன் கூடிய ஆதிசேஷனின் மேல் அவர் உட்கார்ந்திருக்கும் அழகே அழகு; ஸ்ரீதேவி பூதேவியுடன் அவர் உட்கார்ந்திருக்கும் அழகே அழகு! அவர் கழுத்தில் போட்டுக்கொண்டிருக்கும் வஜ்ரத்தினுல் இழைத்த நகைகளின் அழகே அழகு: ஸ்ரீதேவி, பூதேவியின் செந்தாமரை வதனமே வதனம்! ஒரு கையில் தண்டமும், மற்றொருகையில் செந்தாமரையுடனும் உட்கார்ந்திருக்கும் வனப்பே வனப்பு: தேவ சபையில் அரம்பையர் பாட, தேவர் கைகட்டி நிற்க அவர் ஸ்ரீதேவி, பூதேவியுடன் கொலுமண்டபத்தில் ஆதி சேஷனின் மேல் தர்மபீடத்தில் உட்கார்ந்திருக்கும் அற்புதமே அற்புதம். இவ்வளவு அற்புதத்துடன் இருக்கும் அந்த நாராயண மூர்த்தி இப்பொழுது நமக்குக் காக்ஷி அளித்தால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்.

(கிரிஸௌந்தரி வயது 10.)

2. பிர்மாவினுடைய மனைவியின் பெயர் சரஸ்வதி. அவள் ஒரு கையில் ஜபமாலையும் வீணையும் இன்னொரு கையில் புஸ்தகமும் வைத்திருக்கிறுள். அவள் படிப்பைக் கொடுப்பவள். சரஸ்வதி பூஜையன்று சரஸ்வதியை எல்லோரும் தொழுவார்கள். ஆனுல் நாம் சரஸ்வதியை அன்றுடம் தொழவேண்டும். அவள் இருக்கும் மயில் என்ன சௌந்தரியமாய் இருக்கிறது. அவளுடைய தலையில் கிரீடமும் காதில் குண்டலங்களும் இருக்கின்றன. அவள் பக்கத்தில் ஆறு ஒன்று இருக்கிறது. அதில் அழகான தாமரைப் புஷ்பங்கள் இருக்கின்றன. (குப்புசாமி வயது 10)

3. லக்ஷ்மி ஸ்ரீமந் நாராயணருடைய மனைவி. அவள் தாமரைப் பூவில் எவ்வளவு அழகாய் நின்று கொண்டிருக்கிறுள். அவளுடைய இரண்டு கையிலும் தாமரைப்பூ வைத்துக்கொண்டிருக்கிறுள். பக்கலில் உள்ள யானை தும்பிக்கையில் பூ வைத்துக்கொண்டிருக்கிறது. அவள் வலது கைப்பக்கத்தில் அன்னப் பக்ஷிகள் இருக்கின்றன. அங்கு பலவித புஷ்பச் செடிகள் இருக்கின்றன. தடாகத்தில் தாமரை அல்லி முதலியவை மிதக்கின்றன. இக்காக்ஷி பார்க்கப் பார்க்க ஆனந்தமா யிருக்கிறது. அவளுடைய கிரீடம் எவ்வளவு பளபளப்பாய் இருக்கிறது. அவளுடைய கழுத்தில் நவரத்தின மாலையும், காதில் குண்டலங்களும் தகதக என்று மின்னுகிறது. அவளுடைய வேறு பெயர் செந்தாமரையாள்.

(லலிதா: வயது 10)

4. இராமர் இராவணனோடு சண்டை செய்தபோது இராமருடைய சேனையில் பல பேர் மாண்டனர் அல்லா! அப்பொழுது ஜாம்புவானைக்கொண்டு யோசனை கேட்கும்போது அவர் சொன்ன மூலிகையைக் கொண்டுவர யாராலும் முடியவில்லை. பிறகு இவரல்லவோ (ஹனுமான் படம்) சென்று அதைக் கொண்டுவந்தார். அதன் பிறகுதான் அவர்கள் எழுந்தார்கள். இவர் இத்தனை உயிர்களையும் காப்பாற்றினுரே இவர்தான்

வல்லவர் என்று எல்லோரும் மெச்சலாம். ஆகையால் இவரை எல்லோரும் வணங்குவது மஹா நிச்சயம். இவர் எவ்வளவு நல்லவர், எவ்வளவு உபயோகமுள்ளவர் கெட்டிக்காரர்: இவ்வளவு தைரியமும் சக்தியும் உள்ள இவர் இராமருடைய துணையாய் இருக்கத் தடையென்ன?

(அப்துல் ரகிம் வயது 10)

5. கல்லாய்க் கிடந்தது பெண்ணாக மாறிற்று.
பாததூளி மகிமை.
கௌதமர் இட்ட சாபம். சாப விமோசனம்.
பழைய சுயரூபம்.
கை மகிமை—தாடகை வதம்.
கால் மகிமை—அகலியை சாப விமோசனம்.

மேலே சொன்ன குறிப்புகளை வைத்து அகல்யா சாபவிமோசனப் படத்தைப் பார்த்து எழுதுதல்.)

**உதாரணம்.**

இந்தப்படத்தைப் பாருங்கள் எவ்வளவு அழகாய் இருக்கிறது. இதில் ஒரு மகரிஷியும் இரண்டு அரசிளங்குமார்களும் ஒரு பெண்மணியும் இருக்கிறார்கள். இவர்களுடைய சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அதில் இருக்கிற மஹரிஷி தான் விச்வாமித்திரர். அரசிளஞ்சிங்கங்களில் நீலமேக சாமளரூபமாய் இருப்பவர் தான் இராமசந்திரமூர்த்தி; மற்றவர் இராமமூர்த்தியினுடைய தம்பி லக்ஷ்மணர். இராமருடைய முகத்தின் அழகே அழகு. அவருடைய கம்பீரமான முகம் புஜபல பராக்கிரமமுடைய அவர் நமக்கு இப்பொழுது எதிர் வந்தால் மிகவும் ஆனந்தமாய் இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. நிற்க, இப்பெண் மணியைப்பற்றி கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம். இப்பெண் கௌதம மகரிஷியின் மனைவி. கௌதம மகரிஷியின் சாபத்தால் அப்பெண்மணி கல்லாக மாறியிருந்தாள். இராமருடைய பாததூளி மகிமையினால் இப்பெண்மணி சுயரூபமடைந்தாள். என்னே ஆச்சரியம்! ஆண்டவனுடைய மகிமையைப் பாருங்கள். கல்லாகயிருந்தது பெண்ணாக மாறியது விந்தையே விந்தை. இராமருடைய பாததூளி மகிமையால் அகலியை சாப விமோசனமாயிற்று. இவ்வளவு தானா? இராமர் முனிசிரேஷ்டருடைய யாகத்தைப் பூர்த்தி செய்யும்போது தாடகையை வதம் செய்து தன்னுடைய கை மகிமையைக் காட்டினார். இப்பேர்ப்பட்ட உத்தமருடைய தரிசனம் கிடைத்தால் மட்டிலா ஆனந்தமே! (கிரிஸுந்தரி: வயது 10)

**குறிப்பு:**—[இப்பெண்மணி பல புத்தகங்களை வீட்டில் படித்துப் படித்து அப்பியாசம் செய்ததன் பலன் இது என்று யான் கண்டறிந்தேன்.]



**மெழுகுப் பொம்மைகள் சொல்லிய கதை.**

**சிவாஜி:**—சேனாதிபதி! நமது குடிகள் யாவரும் க்ஷேமமா?

**சேனாதிபதி:**—மஹராஜ்! சத்திரபதி என்று பிரகாசிக்கும் சிவாஜி மஹாராஜாவின் இராஜ்யத்தில் குடிகள் யாவரும் க்ஷேமமே.

**சிவாஜி:**—சிவாஜியன்றோ எந்நாளும் அவர்களைப் பராமரிக்கிறான். உண்ண உணவும் உடுக்க ஆடையும் தங்க நிழலும் அன்னவர்க்கும் அபரிமிதமாய் அளிக்கின்றான்.

(ராமதாஸ் கஷ்கதண்டம் ஜபமாலை இவற்றுடன் தோன்றுகிறார்.)

**ராமதாஸ்:**—நன்று! நன்று! கொற்றவனா குடிகளைக் காப்பாற்றுகிறான்? சகல ஜீவராசிகளையும் படைத்த இறைவனன்றோ இவர்களைக் காப்பாற்றுகிறான். சற்றுப் பொறு.

கல் உடைக்கும் சேவகா! இந்தப் பாறையை ஓங்கி உடை.

(சேவகன் பாறையைப் பிளக்கிறான்.)

பாறையினுள் ஓர் தேரை தோன்றுகிறது.

ஏ சிவாஜி! இங்கு யார் உட்கார்ந்திருக்கிறது பார்த்தனையா?

**சிவாஜி:**—ஆம். ஓர் தேரை இருக்கிறதைப் பார்க்கிறேன்.

**ராமதாஸ:**—இவ்வளவு காலம் கல்லினுள் இருந்து வந்த இத் தேரைக்கு அன்னமும் ஆகாரமும் நீர் அளந்து போட்டதுண்டா? இதைக் குறித்த கணக்கு ஏதேனும் உமது அரசாங்கத்தில் உண்டோ?

**சிவாஜி:**—(வெட்கித் தலை குனிந்து)

மகாப் பிரபு! என்னை மன்னிக்கவேணும்! என் கண் முன் தோன்றும் அனைவரும் என்னுடைய மக்கள் யானே அவர்களை ரக்ஷிப்பவன் என்ற அகம் கொண்டேன். கல்லினுள் தேரையைப்பற்றி யான் கனவிலும் சிந்திக்கவில்லை. யான் கண்டது ஆச்சரியமே! அரசன் என்ற என் அகங்காரம் அடங்கியது. தாங்களே எனக்கு இன்று நல்ல நீதி கற்பித்தீர். அனைவரையும் படைத்து ஆண்டவனன்றோ அனைவருக்கும் படி அளக்கிறான். அதுவே ஸத்தியம்.

யான் இத்தருணம் முதல் உமது அடிமை இந்த இராஜ்யம் முழுவதும் உமதே. தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**ராமதாஸ்:**—ஏ சிவாஜி! சரி! அப்படியே யான் அங்கீகரிக்கிறேன். நீ கொடுத்த இராஜ்யத்தைத் தற்சமயம் உன்னிடமே ஒப்படைக்கின்றேன். நீயே எனக்குப் பதிலாக இவ்விராஜ்யத்தை ஆண்டிரு. நீயும் உனது குடிகளும் க்ஷேமமாய் இருக்கக்கடவது.

இச் சம்பவத்தைக் கண்ணுற்ற சிவாஜியின் சேனாதிபதி ராமதாஸ், சிவாஜி கல் உடைப்போன், கல்லினுள் தேரை இவர்களைப் பார்த்துப் பிரமித்த

வண்ணமாக நிற்கிறார். கல்லுடைப்போன் மௌனத்துடனும் ஆச்சரியத்துடனும் தேரையைக் கவனிக்கிறான்!

## ஆடும் பொம்மைகளும், கருங்கல் வெட்டுச் சிற்பங்களும் பாஷையைத் தெரிவிக்கின்றன.

நமது தேசத்தில் கோயில்களுக்குக் குறைவில்லை. கோயில் எங்கும் கல்வெட்டுச் சித்திரங்களும் பதுமைகளும் நிரம்பியுள்ளன. பலபேர் அவற்றைப் பார்த்துப் பார்த்துப் பிரமிக்கிறார்கள். அவைகள் அவர்களுடன் ஏதோ கம்பியில்லாதத்தந்தி மூலமாய்ப் பேசுகின்றன போலும். குழந்தைகள் இந்த ஆச்சரியங்களைக் கண்ணுற்று அவைகளின் கதைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்வது நல்லது. மகாபலிபுரத்தில் அர்ஜுனன் தபஸ் என்ற கல்வெட்டுச் சித்திரப்பாறையில் எவ்வளவோ விசித்திரங்கள் காணப்படுகின்றன. தஞ்சாவூர் கோயில் சுற்றுப்பக்கச் சுவர்களில் எவ்வளவோ சித்திரங்கள் கண்ணைக் கவர்கின்றன. பழையகாலத்தில் பொம்மலாட்டம் என்ற ஆட்டம் ஒன்று உண்டு. பொம்மையை ஆட்டுபவர்களின் சாமர்த்தியம் அளவில் அடங்காது. சந்திரமதி பொம்மையின் நடிப்பு துக்கம், சந்தோஷம், ஆச்சரியம் இவற்றை உண்டுபண்ணும். பாஷை முழுமையும் ஜாடையில் அடங்கியுள்ளது. தற்காலத்திலும் பேசும் படக் காக்ஷி எங்கும் உலாவிவருகிறது. மௌனத்திலும் பாஷை நிரம்பியிருக்கிறது அல்லவா?

## ஆரம்பப்பள்ளிக்கூடப் பாஷைத் திட்டத்திற்கு அடிப்படையான ஆராய்ச்சி அவசியம்.

1. ஜனனம் முதல் ஐந்து வயது முடிய பேசப்படும் குழந்தைச் சொற்கள்.

2. ஐந்து வயதுக்குள் சொல்லக்கூடிய கதைகளும் கதைப்பாட்டுகள். ஸ்தோத்திரப்பாடல்கள். (படங்கள் அமைக்கப் பெற்றது)

3. வாசிப்பு பயிலுவதற்கு ஏற்றசாதனங்களும் உபகரணங்களும்

4. ஐந்து வயதுக்கு மேற்பட்டு 8 வயதுக்குட்பட்ட குழந்தை சொற்கள்.

5. குழந்தைகள் கேட்கவும் வாசிக்கவும் உரித்தான கதைகளும் மற்றுமுள்ள விஷயங்களும்.

6. தொங்கவிடும் படங்கள் (வாசிப்புக்கு ஏற்றபடி)

7. தனித்தனியாக வாசித்து உபாத்தியாயர் சொல்லியபடி வார்த்தைகளைச் சேர்த்தும் பிரித்தும் பயிலுவதற்கேற்ற உபகரணங்கள்.

8. பதங்களைத் திரட்டுவதற்கும் பாஷையை அபிவிருத்தி செய்யவும் ஏற்ற மார்க்கங்கள்.



9. 8 வயது முதல் 11 வரையுள்ள வயது குழந்தைகளின் சொல்லகராதி.

10. ஒரே அர்த்தத்தைத் தரும் சுலபமான பதங்கள்.

11. பல அர்த்தத்தைத் தரும் வார்த்தைகள்.

12. பாஷை சம்பந்தமான விளையாட்டுகள்.

13. குழந்தைகளின் கேள்விகள்.

14. குழந்தைகளின் மனதில் தோன்றிப் பறந்து ஓடும் எண்ணங்கள்.

15. விடுகவிகள்.

16. பழமொழிகள்.

17. வாசகசாலைக்கு உரித்தான புஸ்தகங்கள்.
விடுமுறைநாள் வாசக சாலை ஏற்பாடுகள்.

18. குழந்தைகளின் சித்திரப்பத்திரிகை.

19. தினசரிப்பத்திரிகை படித்து அறிதல்.

20. தினசரிப் பத்திரிகை வார்த்தைகளையும் வாசகபாட புஸ்தகங்களிலுள்ள வார்த்தைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தல்.

21. செய்யுள்களைப் பட மூலமாக விளக்கிக் காட்டுதல்.

22. சுய பாஷா ஞானத்தை வருவிக்கக் கூடிய அப்பியாசங்கள்.

23. பாட்டு, சங்கீதம்.

24. நாடகம், சம்பாஷணை.

25. சித்திரங்கள், சிற்பங்கள், படக் காக்ஷிகள்.

26. பாஷைப் பாடங்களில் காணப்படும் தோற்றங்களை உரு அமைத்துக் காட்டுதல்.

27. படங்கள், படப் புஸ்தகங்கள்.

28. புராதன நூல்களிலிருந்து குழந்தைகளுக்கு வாசித்துச் சொல்லக்கூடிய விஷயங்கள், தாங்களே படித்து அறிந்துகொள்ளக் கூடிய விஷயங்கள்.

29. தற்கால பாடபுத்தகங்களிலுள்ள விஷயங்களின் சோதனை.

30. இனி உத்தேசித்து இருக்கும் திட்டப்படி எத்தகையான விஷயங்களையும் பாடங்களையும் சேர்ப்பது.

31. பேச்சு வழக்கம், தமிழ்தவிர மற்றப்பாஷைகளில் உலாவி வரும் பதங்கள் நடைமுறையில் தமிழிலேயே சேர்க்கப்படுதல்.

32. படித்து அல்லது பேசிக் கேட்பதற்கேற்ற விஷயங்கள்,

33. எழுதுவதில் காணப்படும் பிழைகள். பிழைகளைத் திருத்தும் வகைகள்.

34. பேச்சு, வாசிப்பு எழுத்து இவற்றை நன்கு அமைக்கப் போதுமான இலக்ஷண விதிகள்.

சென்ற 25 வருஷங்களாக குழந்தைகளுடன் இருந்து குழந்தைகளுக்காகப் பாடுபடும் ஒருவர் மேலே சொல்லப்பட்ட பல விஷயங்களில் பெரும்பாலும் கவனம்செலுத்தி குறிப்பும் எடுத்து அவற்றைக் குழந்தைக் கல்வியின் தினசரிப் பழக்கத்தில் கொண்டு வந்திருக்கிறார். "கற்றது கை மண் அளவு இனி கற்கவேண்டியது உலகு அளவு, கடல் அளவு" மனிதனுக்குப் பிழைசெய்வது என்பது இயல்பு சர்வ சாதாரணம். ஒரு விஷயத்தைக் குறித்து ஆராய்ச்சிசெய்து முடிவிற்கு வர ஒரு ஆயுசு காலம் போதாது, மேலே சொல்லப்பட்டவை எல்லாம் ஒரு குருவி, அல்லது ஒரு அணிப்பிள்ளையின் வேலைக்கு ஒப்பாகும். குருவிக்கும் மலை உச்சிக்கும் எவ்வளவு தார தம்மியம். அணில் சமுத்திரத்திற்குப் பாலம் கட்ட மணலைக்கொண்டு வந்து உதறிற்று. பாஷை மலை உச்சிக்கும் கடலுக்கு அணைகட்டுவதற்கும் சமானமாகச் சொல்லப்பட்டது. மனிதனது அறிவுக்கும் ஒரு எல்லையுண்டு அல்லவா!

## வித்துவான்களின் சேவையும் உதவியும்

தமிழ் அபிவிருத்தியில் பலர்முன் வந்துநிற்கிறார்கள். ஆங்கிலம் கற்றறிந்த ஆங்கிலப்பாதிரிமார்கள் நிரம்ப உழைத்து வருகிறார்கள். தமிழ் தாய் பாஷையாக இல்லாத பலபெரியார்கள் தமிழ்மொழி பெருகுவதில் சிரத்தையும் ஆர்வமும் கொண்டிருக்கிறார்கள். காலசக்கரம் வெகு வேகமாகச் சுழன்று வருகிறது. பல துறைகளில் சீர் திருத்தங்கள் காணப்படுகின்றன. சீர் திருத்தங்கள் சில சமயங்களில் சுழல் காற்றுபோல் வேகமாய் வருகிறது. பல மேதாவிகள் உன்னதமான விஷயங்களை ஆராய்ச்சி செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். மற்றும் பலபேர் கீழ்த்துறையிலும் இறங்க வேண்டியிருக்கிறது. மேனாடுகளில் சர்வ கலாசாலையில் உயர்ந்த பட்டம்பெற்ற பெரியார்கள் குழந்தைக் கல்வியில் மனம் ஈடு படுத்தியிருக்கின்றனர். அவர்களுக்குக் குழந்தையின் தன்மை, குணாதிசயங்கள் பாஷை கற்கும் முறை இவற்றைக் கண்டறிதலே வாழ்நாள் வேலையாயிருந்து வருகிறது. மேலும் பாஷையை பொதுமக்கள் யாவரும் கற்றுணர்ந்து களிக்கவேண்டும் என்ற உயர்ந்த தர்மம் நாடெங்கும் உலாவி வருகின்றது. தற்காலத்துக் குழந்தைகள் இனிவருங் காலத்துப் பெரிய மனிதர்கள் ஆகும்பொழுது பாஷையில் அபிமானம் உள்ளவர்களாகயிருத்தல் அவசியம். பாஷையின் சுவையை அறிந்து இன்பம் அடைய வேண்டும். சுழல் காற்று வேகமாக அடிக்கிற காலத்தில் எவ்வளவோ பெரிய மரங்கள் கிளைமுறிந்து ஒடிந்து விழுகின்றன. எப்பொழுது தலை வணங்கி நிற்கும் கோரை மாத்திரம் ஆடிக்கொடுத்துக் கொண்டு சமா



ளித்துச் சுழற்காற்றுக்குப் பிறகும் ஓங்கி வளர்கிறது. பாஷையும் பாஷாபிமானிகளும் அந்த உயர்ந்த நிலையை அடைவதே லக்ஷியமாகக் கொண்டிருக்கின்றனர். நமதுதேச பாஷா வித்துவான்களும் பொதுமக்கள் குழந்தைகள், யாவரும் பாஷையைத் தக்கவாறு ஏற்ற விஷயங்களைக் கண்டறிந்து அவற்றைப் பரீக்ஷித்துப் பார்த்துச் சோதனையில் நன்மை தரக்கூடியவற்றைப் பிறருக்கும் விளக்கிக்காட்டுதல் அவசியம். அவர்களது உதவி பல ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களுக்கும் நற்பயனை அளிக்கும். குழந்தையின் கல்வியும் ஒரு சமுத்திரம் போன்றது. பலபேர் ஈடுபட்டால் தான் இக்குழந்தைக் கல்வியின் பெருமை தோன்றும். ஆராய்ச்சியை அஸ்திவாரமாகக்கொண்ட ஆரம்பவாசக புஸ்தகங்கள் கிடைப்பது துர்லபமாயிருக்கிறது. "குழந்தைக்கல்வி" என்பது பலர் ஆராய்ச்சிசெய்ய நல்ல இடமளிக்கிறது. இந்தசந்தர்ப்பத்தைக் கை விடாது பலர் இதை ஏற்றுக்கொள்ளுதல் பொருந்தும்.

## குழந்தைக் கல்வி மத்திய ஸ்தாபனமும் மத்திய நிதியும்

நூறு சுலோகம் தெரிந்தவன் ஒரு பண்டிதன் என்பது நீதி சாஸ்திரத்தில் ஒருவாக்கியம். ஒரு பண்டிதர் அல்லது ஒரு வித்துவான் தமது அறிவை முதன் முதலில் கோயில் கடவுள் சந்நிதியில் பலபேர்முன் அரங்கேற்றுவிப்பது பழைய வழக்கம்; அதே மாதிரி கோயிலில் அரங்கேற்றிய பின் குழந்தைகளைக் கூட்டித் தமது ஞானத்தை விளக்குவார்களானால் தாம் கற்றறிந்ததை எப்படி இலகுவாகப் பிறருக்குச் சொல்லலாம் என்ற முறையைக் கையாளநேரிடும். யோசிப்பின் அம்முறைகளும் எளிதில் புலன்படும். குழந்தைக் கல்வியைப்பற்றி ஆராய்ச்சி செய்யவே ஒரு மத்திய ஸ்தாபனமும் மத்திய நிதியும் இருந்தால் எவ்வளவோ பேர் தெரிந்தும் தெரியாமலும் ஓய்ச்சல் ஒழிவு இல்லாமல் செய்துவரும் உழைப்புகளைச் சேர்த்துப் பார்க்கமுடியும். மேல் நாடுகளில் இம்மாதிரியான விஷயங்களில் தனவந்தர்கள் தக்க உதவியளிக்கிறார்கள். நமது நாட்டிலும் தனவந்தர்களுக்குக் குறைவில்லை. "கார்னிஜி நிதி" என்ற நிதியிலிருந்து மேல் நாடுகளிலும் பல நாடுகளிலும் சரி எவ்வளவோ உபயோகமான துறைகளில் பணம் செலவழிக்கப்பட்டு வருகிறது. புத்தகசாலை இயக்கம். குழந்தைகள் படிப்பு, வைத்திய ஆராய்ச்சி இவைகளுக்குச் சகாயம் அளிப்பதாக நான் படித்ததுண்டு. இம்மாதிரி மத்திய ஸ்தாபனமும் மத்திய நிதியும் இருந்தால் குழந்தைகள் கல்விக்கென்றே தியாகம் பண்ணுகிறவர்கள் விடாமல் உழைக்க இடமுண்டு.

1. பாலர் நந்தவனம்.
2. பாலபோதனை முறைகள்.
3. உபகாரணங்கள்.
4. வாசகசாலைக்கு ஏற்ற புத்தகங்கள்.
5. பத்திரிகைகள்.

6. போதனா முறைப் பாடசாலைகளின் அமைப்பு, பாடதிட்டம்,

7. உபாத்தியாயருக்கு நடு நடுவே முறைகளைக் கையாண்டு வரும் விதங்களைப் புகட்டுதல்: போன்ற பல பெரிய தொண்டுகள் செய்ய முடியும்.

“பாலர் கல்வி” யாவது இதில் கொஞ்சம் ஈடு பட்டிருக்கிறது. அதிர்ஷ்டம் தான் அரியலூர், விழுப்புரம், கோடம்பாக்கம், வில்லிவாக்கம், சென்னை, ஏனங்குடி போன்ற விடங்களில் பல பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுவதை நான் கேட்டிருக்கிறேன், பலபேர் தனித்தனியாக உழைப்பதைவிட ஒன்று சேர்ந்து ஒரே லக்ஷியத்தைக் குறித்து உழைப்பது மேல் அல்லவா?

## ஆரம்பத்தில் குழந்தைச்சொல் ஆராய்ச்சி, அதன் பிறகே அகராதி

குழந்தையின் தாயார் குழந்தை மழலைச்சொற்களிலே மகிழ்ந்து மூழ்கிக் கிடக்கிறாள். அவளுக்கு அதுவே ஸ்வர்க்கம், அதே மாதிரி குழந்தை உபாத்தியாயரும் குழந்தைகள் சொற்களைக் கணக்கிடுதலில் ஊக்கம் கொள்ளவேண்டும். பல பாலர் புஸ்தகங்களிலுள்ள பதங்களுக்கு உபாத்தியாயர்களே அகராதியின் உதவியை நாடவேண்டியிருக்கிறதென்றால் அவை பாலர்களுக்கு எவ்வாறு பயன்படும், ஒருசமயம் அகராதியில் அடங்கியில்லாத வார்த்தையும் பாலர் புத்தகத்தில் காணப்பட்டது. பல பாலர் புத்தகங்கள் அகராதி பிரசுரிப்பவருக்குப் பயன்படும். அரிச்சுவடி புஸ்தகத்திற்கும் அரும்பதவுரை அகராதி எழுதும்படியான பரிதாபகரமான நிலைமையில் இருந்து வருகிறோம் என்று நான் நினைத்ததுண்டு, ஏனென்றால் 2,3,4,5, வகுப்புப் புஸ்தகங்களுக்கு அர்த்த புஸ்தகம், வினாவிடைப் புஸ்தகம் இவை வெளியாகி வருவதுண்டு. அந்த வரிசையில் பாலர் புத்தகம் மாத்திரம் பாக்கியிருந்தது. முன்னமே சொன்ன 34 விஷயங்களிலும் அவைபோன்ற மேற்கொண்ட விஷயங்களிலும் ஆராய்ச்சி செய்வது பொருந்தும். ஆனால் அகராதியின் உதவியும் வேண்டுவது அவசியந்தான். அதைக் கடைசியில் ஒத்திவைத்துக் கொள்ளவேண்டும். உபாத்தியாயர் ஒவ்வொருவரும் ஒரு சொல்லகராதி வைத்துக் கொண்டுத்தமது ஞானத்தைப் பெருக்க வைத்துக்கொள்ளக் கூடும். மாக்மில்லன் கம்பெனியார் ஒரு ரூபாய்விலைக்கு ஒரு அகராதியை வெளிக் கொணர்ந்திருக்கிறார்கள். 6,7,8, வகுப்புப் பிள்ளைகள் ஏன் அதை உபயோகிக்கக்கூடாது என்று நான் எண்ணுவதுண்டு. ஆரம்ப வகுப்புகளில் வஸ்துக்கள் இயற்கைத் தோற்றங்கள் மூலமாகவே பாஷை அதிகரிக்க வேண்டும்.

## நித்தியப்பட்டி பாடத்தில் அனுசரிக்க வேண்டிய விஷயங்கள்

| | |
|---|---|
| ஒவ்வொரு பாடத்திலும் | (1) பேச்சுப் பழக்கம் |
| (2) வாசிப்புப் பழக்கம் | (3) எழுத்துப் பழக்கம் |



(4) பாஷா ஞானம் அபிவிருத்தி யடைவதில் ஏற்ற பயிற்சி (5) சுய அப்பியாசப் பழக்கம் பாஷாபிவிருத்தி விளையாட்டுகள், இவைகளில் பழக்கம் கொடுப்பது அவசியமாகும்.

மேலே சொல்லப்பட்ட விஷயங்களில் எவைகளை சமயத்திற் கேற்ற படிகையாளக்கூடுமோ அவற்றை அநுஷ்டிப்பது சரியாகும், ஒவ்வொரு பிள்ளையும் இவ் விஷயங்களில் பயிற்சி பெறுதல் அவசியம். வாசக பாடம் செய்யுள் இவற்றைப் பார்த்து எழுதுவது, சொல்வது எழுதுவது இப் பழக்கங்கள் அவசியமே. சம்பாஷணை, நடித்துக்காட்டுதல் இவைகளை பொருத்தமான பாடங்களில் அமைத்துப் பாடம் சொல்லுதல் ஏற்றதே!

## பாட புத்தகத்தையே ஒரு எல்லையாக வைத்திருக்க முடியாது

பாட புத்தகத்தையே மாத்திரம் ஒருவர் நம்பியிருந்தால் எல்லா வித பாஷைப் பயிற்சிகளைக் கொடுக்கக்கூடாமல் அவர் ஏமாற்றம் அடைவார். ‘புஸ்தகம் ஹஸ்தபூஷணம்’ என்றபடி ஒரு புஸ்தகத்தையாவது படிப்பதற்காக அது ஏற்பட்டிருக்கிறது. வாசிப்புப் பழக்கம் பல புஸ்தகங்களைப் படித்தால் அல்லவோ ஏற்படும்.

### A கேள்விப்பழக்கம், பேச்சுப்பழக்கம்

| | |
|---|---|
| கதை சொல்லுதல். | கண்ட நடவடிக்கையை உரைத்தல் |
| திரும்பத் திரும்பச் சொல்லுதல் | செய்யுள் ஒப்புவித்தல் |
| கேள்விக்குப் பதில் அளித்தல் | பாட்டுப் பழக்கம் |

### B வாசிப்பு

1. ஒருதரம் படித்த அல்லது இதுவரையில் படிக்காத விஷயங்களைப் படித்தல்.
2. மனதினுள்ளேயே படித்து அறிதல்.
3. நீண்ட கதைகள்.
4. செய்யுள், பாட்டு முதலியன.

### C எழுத்து

1. பார்த்து எழுதுதல்
2. சொல்வதெழுதுதல்
3. கேள்விக்குப் பதில் எழுதுதல்
4. பாட்டுகளைப் பாராமல் எழுதுதல்
5. படப் புஸ்தகம் தயார் செய்து வார்த்தை வாக்கியம் அமைத்துக் காட்டுதல்.

### D பாஷைப் பயிற்சி விளையாட்டுகள்

| | |
|---|---|
| வார்த்தைகள் பொறுக்குதல் | பழமொழிகள் |
| வார்த்தைச் சதுரங்கள் | வார்த்தை விளையாட்டுகள் |

| | |
|---|---|
| ஒரு அர்த்தப் பதங்கள் | உல்லாசப் பேச்சு |
| விடுகவிகள் | உல்லாச நாடகம் |
| கூட்டுப் பதங்கள் | |

மேலே சொல்லப்பட்ட விஷயங்களில் பயிற்சிகொடுக்க பாட புஸ்தகம் இடந்தராது. பாஷைப் பயிற்சிக்காகவே சில நேரம் எடுத்துக் கொண்டு அக்காலங்களில் கட்டாயம் பழக்கம் கொடுத்தால்தான் பாஷையில் நன்கு அபிவிருத்தி செய்யக்கூடும்? உபாத்தியாயரே மேலே சொல்லப்பட்ட விஷயங்களில் வழிகாட்ட சில பிரத்தியேகமான முறைகளையும் கையாளவேண்டும்.

## வார்தா ஆரம்பக்கல்வி திட்டத்தின்படி பாஷையின் எல்லை

இது சம்பந்தமாக தற்சமயம் பலரால் போற்றப்பட்டு வரும் வார்தா ஆரம்பக்கல்வி திட்டத்தின்படி பாஷையின் எல்லையை அறிதல் பொருத்தமானது. பலருக்கும் இது பயன்படக்கூடியது.

1. வஸ்துக்கள் ஜனங்கள் தினசரி வாழ்க்கையில் ஏற்படும் சம்பவங்களைப்பற்றித் தாராளமாயும், இயல்பாயும் தைரியமாயும் பேசப் பழக்கம்.

2. இப்பழக்கத்தைக்கொண்டு கொடுக்கப்பட்ட தினசரி சம்பவத்தைக் குறித்து தெளிவாயும், கோர்வையாயும், பொருத்த மாகவும் பேசப் பயிற்சி.

3. சாதாரண கடினமாயுள்ள சில விஷயங்களை மனதினுள் புத்திசாலித்தனமாயும் வேகமாயும் படித்து அறிந்து கொள்ளுதல்.

(இப்பயிற்சியைக்கொண்டு தினசரி நடவடிக்கைகளை வெளியிடும் தினசரிப்பத்திரிகை, மாத சஞ்சிகைகளைப் படித்து அறிந்து கொள்ளும் திறமையாவது ஏற்படவேண்டும்)

4. தெளிவாயும், உணர்ச்சியுடனும் ஊக்கத்துடனும், அனுபவித்துப் படித்தல் (உரக்கப் படித்தல்) (சாதாரணமாய்க் காணப்படும் உயிரற்ற, கண்மூடித்தனமான குருட்டுப் படிப்பும் காதைத் தொளைக்கும் படிப்பு வழக்கமும் கைவிடப்பட வேண்டும்.)

5. புஸ்தகங்களின் அட்டவணை, குறிப்புகள் முதலியவற்றை அறிதல், அகராதிகளை உபயோகிக்கத் தெரிந்து கொள்ளுதல், தேவையான விஷயங்கள் கிடைக்கும் புஸ்தகங்களைப் புரட்டி விஷயங்களைக் கிரகித்தல், பொதுவாக வாசகசாலையிலிருந்து தேவையான சமாசாரங்களைக் கிரஹித்தல், வாசகசாலையை இன்பமாக அனுபவித்தல்.

6. தெளிவாயும் சரியாயும், கூடியவரையில் வேகமாகவும் எழுதத் திறமை.

7. சமூக வாழ்க்கைக்காக நடக்கும் பொது ஏற்பாடுகளைப்பற்றி பத்திரிகைக்கு விஷயதானம் செய்வதற்கு ஏற்றபடி அச்சம்பவங்களைப் பற்றி எளிய தெளிவான நடையில் விவரித்து எழுதப் பழக்குதல்.



8. வீட்டு அலுவல், வியாபார அலுவல் சம்பந்தமான சில நேரடியான போக்குவரத்துக் கடிதங்களை எழுதப் பழக்கம்.

9. தகுந்த ஆசிரியர்கள் எழுதிய விஷயங்களைப் படிப்பது அல்லது அவற்றில் சில பகுதியை மாத்திரம் படிப்பதிலிருந்து அம்மாதிரி விஷயங்களை மேன் மேலும் படித்து அறிய ஆசை கொள்வது.

**1937 டிசம்பர் 11உ ஹரிஜன பத்திரிகையில் இத்திட்டம் ஆங்கிலத்தில் வந்துள்ளது. பாஷைப்பாட திட்டத்தின் சாராம்சம் மேலே காட்டப்பட்டிருக்கிறது. சமீபத்தில் நடந்த டில்லி கல்வி மகாநாட்டில் மீண்டும் இத்திட்டம் பல அறிஞர்களால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.**

## சித்திர ஆசிரியர்கள் செய்யக்கூடிய சேவை

தற்காலம் அவர்கள் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஏற்பட்ட பாட திட்டம் பிரகாரம் சிற் சில சித்திரங்களை வரையச் சொல்லித் தருகிறார்கள், சித்திரம் வரைவது கடினம் அழகான சித்திரங்களை முதன் முதலில் பார்த்துச் சந்தோஷப்பட வேண்டுவது அவசியம், ஆகவே பள்ளிக்கூடம் முழுமையும் சித்திர உருவமாகவே நிரம்பியிருத்தல் அவசியம். அப்படியாயின் சித்திர ஆசிரியர்கள் செய்யக்கூடிய சேவை பின்வருமாறு

1. மனதில் ஏற்படும் அரிய தோற்றங்களைச் சித்திரங்கள் மூலமாய் விளக்கிக் காட்டுவது.

2. இயற்கைக் காட்சிகளைச் சித்திரங்களில் அமைப்பது.

3. கதை, செய்யுள் இவற்றை விளக்கத்தக்க சித்திரங்கள் வரைந்து வகுப்பு உபாத்தியாயர்களுக்கு உதவி புரிவது

4. களிமண், அட்டை, மெழுக்கு இவைகளைக் கொண்டு உருவமைத்துக் காட்டுதல்.

பாஷையையே சித்திர ரூபமாக்கிக் குழந்தைகளின் சக்தியை ஓங்கச் செய்வது அவர்களது பொறுப்பு.

## பாஷை அபிவிர்த்தியில் மற்றும் பொறுப்பு வாய்ந்தவர்கள்

(a) பத்திரிகை ஆசிரியர்கள் குழந்தைகளுக்காகவென்றே சில பக்கங்கள் ஒதுக்கி, குழந்தைகளுக்கேற்ற விஷயங்களைப் பெருக்கிக் கொண்டு வருகின்றனர். நடை முறையில் வழங்கும் பேச்சுப் பதங்களையும் வேறு பாஷைப் பதங்கள் நடை முறையில் வந்துள்ளதால் அவைகளைத் தமிழிலேயே எழுதிப் பலரும் விஷயங்களை அறியும்படி செய்து வருகிறார்கள். நம் நாட்டிலே குழந்தைகளுக்கென்றே தனிப் பத்திரிகை ஒன்று இல்லாதது ஒரு குறைவுதான்; ஆயினும் சமீபத்தில் கோடம் பாக்கத்திலிருந்து "பாலர் பத்திரிகை" என்று பெயருள்ள ஒரு மாத சஞ்சியைக்காண சந்தோஷம் உண்டாயிற்று.

(b) புத்தகப் பிரசுரகர்த்தர்களும் வாசக சாலைக்குரித்தான் புத்தகங்களையும், வகுப்பில் தொங்கவிடுவதற்கேற்ற படங்கள், கதைப்படங்கள்

இவற்றைத் தயார் செய்து கொடுக்கவும், குழந்தைகளின் பத்திரிகை வெளியிடவும் முன்வர வேண்டும்.

(c) சங்கீத வித்வான்கள் குழந்தைகளைக் கூட்டி அரிய பாடல்கள் பாடி பக்தி, அன்பு, இரக்கம், ஆசை உள்ளவர்களாக அவர்கள் மன நிலையை மாற்ற வேண்டும். பசுக்களும் பாம்புகளும் சங்கீதத்தைக் கேட்டு பரவசமாகுமானால் பிள்ளைகளும் அதற்குமேல்தான். ஒரு வருஷத்தில் பன்முறை வித்துவான்கள் பள்ளிக்கூடத்துப் பையன்களுக்கு நற்பாட்டுகளைப் பாடிக்களிக்கச் செய்வது போற்றத் தக்கதாகும். அவர்களுக்கேற்ற நாடகங்களை நடித்துக் காட்டிப் பழக்குவதும் மெச்சத்தக்கதே. பாஷை வளர்ச்சிக்குமேலே சொன்ன யாவரும் பங்கு எடுத்துக் கொண்டு உபாத்தியாயர்களுக்கு உதவிபுரிதல் வேண்டும். உபாத்தியாயரும் அவர்களின் உதவியைப் பன்முறை நாடுதல் அவசியம்.

**பாஷையின் உயர்ந்த நிலை**

இராமலிங்க சுவாமி திருவாய் மலர்ந்து அருளிய செய்யுளில் பாஷையின் உன்னத நிலை விளக்கப்பட்டிருக்கிறது.

**ஒருமையுடனினது திருமலரடி நினைக்கின்ற**
**உத்தமர்த முறவு வேண்டும்**
**உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்**
**உறவு கலவாமை வேண்டும்**
**பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும், பொய்மை**
**பேசாதிருக்க வேண்டும்**
பெருநெறி பிடித்தொழுகவேண்டும் மதமானபேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவுபெண்ணாசையை மறக்க வேண்டு முனை
மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வினான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத் துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே !

பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்ட வரிகளே பாஷையின் உன்னத நிலையை எடுத்துக் காட்டுகின்றன. சொல்வாக்கு என்பதிலே ஸத்தியம் உண்மை என்பதும் அடங்கியிருக்கிறது. ஸ்ரீராமர் ஒரே சொல், ஒரே தாரம், ஒரே பாணம் இவற்றுடன் கூடியவர். கொடுத்ததைக் கூடத் திரும்பப் பெறக்கூடாது. தானே தியாகம் செய்து தகப்பனார் வார்த்தையானது ஸத்தியமான சொல் என்று ருஜுப்படுத்தக் கானகம் சென்று கஷ்டங்களை அனுபவித்தவர். ஹரிச்சந்திரன்கொடுத்தவாக்கைக்காக்கவே



மயானம் காத்தான் சொந்த மனைவியையும் தன் கைவாளால் வெட்டத் துணிந்தான். ஆகவே இராமனைப்போல் பிள்ளை உண்டா, ஹரிச்சந்திரன் சத்தியத்தைக் காக்கப்பிறந்தவன் என்ற வசனங்கள் சாதாரணமாய் ஏற்பட்டு விட்டன.

**கால நிலைமை** காலநிலைமையிலோ நிரம்ப வித்தியாசம் ஏற்படுகிறது. “உள்ளத்தைச் சொன்னாள் பொலொப்பு” “யதார்த்த வாதி பஹுஜன விரோதி” என்ற பழமொழிகள்சொல்லிக்காட்டப்படுகின்றன. ஸத்தியத்தைச் சொல்லுவதனாலே பெரும்பாலும் தீங்கும் தொந்தரவும் உண்டாகிறது. உண்மையை ஒளித்துச் சொல்லுவதே இகலோகத்தில் காரியம் கைகூடும் மார்க்கமாயிருக்கிறது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் “ஒரு தந்திரம் பண்ணினேன். மெதுவாக ஒரு சால் சாப்பு சொன்னேன். தப்பித்துக்கொண்டேன்” என்று மார்தட்டிக் கொள்ளுகிறார். இவர்களைப் பின்பற்றும் குழந்தைகளும் இவ்வழிகளையே எடுத்துக்கொள்கிறார்கள். நிஜத்தைச் சொல்லி தொந்தரவுக்கு ஆளாகிறதைவிட உண்மையை மறைத்து தற்கால சௌக்கியத்தை நாட உள்ளம் பிரயத்தனப்படுகிறது. உபாத்தியாயர்கள் அன்றி குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்க்கும் தாய் தந்தையர்களும் சமூகத்தாருமே பாஷையைச் சரிவரப் பிரயோகிப்பதில் பிரசாரம் செய்து வரவேண்டும். சொல் வாக்கு ஸத்தியம் கடவுள் எல்லாம் ஒன்றே.

அகங்காரம், பிறர் நிந்தனை, சகோதரபாவம் இல்லாமை இவைகளைக் காட்டும் பாஷை படிப்பின் மேன்மையைக் காட்டுமா? சில பேர் ‘ஒரு நாக்கா, இரண்டு நாக்கா?” என்று கேட்கிறதுண்டு. முன் ஒன்று சொல்லி அதை மறுத்து பின் ஒன்று வேறாகச் சொல்லுகிறவர்களுக்கு இது பொருத்தமானது. “துவிபாஷி” என்றால் ஒரு பாஷையை மற்றொரு பாஷையில் எடுத்துச் சொல்பவர் ஆகும். இப்பொழுது துவிபாஷிகள் திரிபாஷிகளும் அனேகர் இருக்கிறார்கள். மனம் ஒன்று வாக்கு அதே. செய்கை அதே எல்லாம் ஒன்றாக இருந்தால் திரிகரண சுத்தியாக ஒரு காரியம் நடக்கும். இம்மூன்றும் வெவ்வேறாக இருப்பின் அவர் திரிபாஷிதான். சொல்லொன்று செய்கையொன்று உள்ளவர் துவிபாஷி “ஆஹா! அப்படியா, ஞாபகமேயில்லை. மெதுவாகத் தட்டிக் கழித்தேன்” என்ன சாப்பாடு போங்கோ எல்லாம் நளபாகம் வீட்டில் வந்த பிறகு “கால் சாப்பாடுதான் உட்கார்ந்தவர்கள் மூஞ்சியைப் பார்க்கவே முடியவில்லை. கால் வயிறுகூட கிடையாது” என்றெல்லாம் நாம் கேள்விப்படுகிறதும் சகஜம்தான்.

யாராவது தட்டுக்கெட்டு ஒரு நிஜத்தைச் சொல்லிவிட்டால் ‘ஹரிச்சந்திரன் உங்காத்துக்கொல்லை வழியாய்த்தான் போனானோ, சரிதாண்டா ரொம்ப ஸத்தியஸந்தன் தெரியுமே” என்று ஏளனம் பண்ணுகிறதும் உண்டு. நீதி சாஸ்திரமும் கொஞ்சம் இடந்தருகிறது. “ஆயிரம் பொய் சொல்லி ஒரு தாலி கட்டவேண்டும்”: ஆயுசு, செல்வம் வீட்டுச்

சச்சரவு மனைவியுடன் தனித்து இருத்தல், மருந்து, தபசு, தானம, மானம், அவமானம் இந்த ஒன்பதையும் பிரயத்தனப்பட்டாவது மறைத்துக்கொள்ளவேண்டும் என்கிறார்கள்.

"மௌனம் ஸர்வார்த்த சாதகம்" பாஷைப் பயிற்சியினால் பாஷையும் பெருகவேண்டும். பிறகு பல எண்ணங்கள் தோன்றி எது சரி, எது நியாயம் என்று மனதினுள் தர்க்கம் வரும்போது சரியான தீர்ப்பு கூற முடியாதவரையில் மௌன விரதத்தை அனுஷ்டிப்பதே நல்லது. பெரிய ஞானிகள் மௌனமாயிருப்பது ஒரு ஆச்சரியத்தைத் தரும், இந்திரியங்களைப் பழக்குதலும் வேண்டும் அவற்றை அடக்குதலும்வேண்டும் என்றபடி. பாஷையும் மௌனமும் பொருத்தமாக அமைந்துள்ளது.

## முடிவுரை

மனிதனுக்குப் பாஷையும் பகுத்தறிவும் கடவுளால் அளிக்கப்பட்டிருக்கின்றன, பகுத்தறிவு இருந்தும் சர்வ சந்தேகப்பிராணி. ஆயுசு வரையில் தீராச்சந்தேகம். இரவு பகல், தெளிவு சந்தேகம், மெய், பொய், இவை கலந்தே வருகின்றன. பகுத்தறிவினால் ஏற்படக்கூடிய ஞானத்தினால் உண்மையை அறியமுடியும். ஒன்றை மாத்திரம் லக்ஷியமாக வைப்போம். ஸத்தியம் கடவுள் இரண்டும் ஒன்று. குழந்தையும் தெய்வமும் ஒன்று. குழந்தை நிஷ்களங்கமான மனது உடையது. அதன் முகத்தில் தெளிவு, பிரகாசம், அன்பு, ஸத்தியம் இவை ததும்பி நிற்கின்றன. அதற்கேற்ப நமது பாஷைகளை அமைத்துக்கொள்ளுதல் அவசியம். பாஷை உள்ளத்தின் ஒளியை விளக்குகிறது. உள்ளத்தில் நிர்மலமான காக்ஷிகளும் தோற்றங்களும் உதிக்கவேண்டும். அவரவர்கள் வந்த வழியின்படி நடக்கும் என்று ஒருவர் சொன்னார். இதில் நமக்குப் பகவானின் கடாக்ஷம் வேண்டும். அவரைப் பேசாத நாக்கும் நினையாத நாளும் பயனற்றவை. அவர் புகழைப் பேசாத பாஷை பாஷை ஆகாது. ஆகவே மறுமுறை மேலே சொல்லப்பட்ட பாட்டில் நான்கு ஐந்து வரியை ஞாபகப்படுத்தி முடித்துக்கொள்ளுகிறேன்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
    உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும்; பொய்மை
    பேசாதிருக்க வேண்டும்
    ........................................
உனைமறவா திருக்க வேண்டும்

சுபம்! சுபம்!! சுபம்!!!

# வார்தா கல்வித் திட்டம்*

சென்ற அக்டோபர் 23-உ யன்று வார்தாவில் மகாத்மா காந்தியின் தலைமையில் கூடிய கல்வி மகா நாட்டின் முடிவில்' ஆரம்பக் கல்வித்திட்டத்தைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு டாக்டர் ஜகீர் ஹுஸெய்ன் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

அக்கமிட்டி பின்கண்ட அறிக்கையை மகாத்மா காந்திக்கு சமர்ப்பித்து இருக்கின்றது.

## தற்காலத்துக் கல்வி முறை

தற்போது இந்நாட்டிலிருக்கும் கல்வி முறையை இந்தியாவில் எல்லோரும் ஏக மனதாக கண்டிக்கிறார்கள். கடந்த காலத்தில் இக் கல்வி முறை தேசீய வாழ்வின் முக்கியமான தேவைகளை பூர்த்தி செய்யவில்லை; தேசத்தின் வேகத்தையும் போக்கையும் சரியான பாதையில் செலுத்தத் தவறியிருக்கிறது. தேசீய வாழ்விலும், சர்வதேசீய வாழ்விலும் பெரிய மாறுதல்கள் வேகமாக ஏற்பட்டுவரும் இக்காலத்திலும், தேசப் பிரஜைகளிடமிருந்து பல குண விசேஷங்கள் எதிர்பார்க்கப்படும் இக்காலத்திலும், பழைய கல்வி முறை, உண்மையான வாழ்க்கைப் பிரசனைகளுக்கு சம்பந்தமற்ற முறையில், புதிய நிலைமைகளுக்கேற்றவாறு தன்னை சீர்பெற அமைத்துக்கொள்ளாமல், "தான் போன போக்காக" நடந்துவருகிறது. உயிரூட்டும் லக்ஷிய வேகமோ, உண்மைப் பிரச்னைகளின் தொடர்போ இல்லாமல் உயிரற்றுப் போய்விட்டது. மக்களை சரியான பிரஜைகளாகவும், சமூகத்துக்கு பயனுள்ளவர்களாகவும் ஆக்கும் துறையில் அக்கல்வி முறை எவ்வித பயிற்சியும் அளிக்காதிருக்கிறது. போட்டி, பலாத்காரம், பொருளாதாரச் சுரண்டல் இவற்றைத் தொலைத்து கூட்டுறவு மனப்பான்மையை அடிப்படையாய்க் கொண்ட சமூக தர்மத்தை ஏற்படுத்துவதற்கு உதவி செய்வதே கல்வியின் தொண்டு என்ற உணர்ச்சியோ, அப்பொறுப்பின் தன்மையைப் பற்றிய திருஷ்டியோ தற்காலக் கல்வி முறையில் இல்லை.

ஆகையால், தற்காலக் கல்வி முறையை மாற்றி செயல் முறையில் நல்ல பயனளிக்கத்தக்க ஒரு கல்வியமைப்பு ஏற்படவேண்டும் என்று, எல்லாரும் கோருகிறார்கள். புதிதாக ஏற்படும் கல்வி முறையானது, தேசீய வாழ்க்கையின் தேவைகளையும் லக்ஷியங்களையும் பூர்த்தி செய்வதாய், சமூகத்தின் அவசரமான கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதாய் இருக்கவேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறார்கள்.

இந்தியக் குழந்தைகளுக்கென்று தயாரிக்கப்படும் எந்த கல்வித் திட்டமும், சில விஷயங்களில் மேல் நாட்டுத் திட்டங்களிலிருந்து மாறுபட்டதாகவே இருக்கும். ஏனெனில். மேனாடுகளைப் போலல்லாது இந்

* 'தின மணி'யிலிருந்து எடுக்கப்பட்டது.

தியாவானது, அஹிம்சையே எல்லாத் துறைகளிலும் விடுதலை மார்க்கமாக கொண்டிருக்கிறது. ஆகையால் நம் சிறுவர்களுக்கு அஹிம்சையின் சிறப்பை,—பலாத்காரத்தைவிட அஹிம்சையே சிறந்ததென்பதை—போதிப்பது அவசியமாகிறது.

### காந்திஜீயின் கருத்து

வேறு பல துறைகளைப் போலவே இத்துறையிலும், இந்த நெருக்கடியான சமயத்திலும், மகாத்மா காந்தி தீர்க்க திருஷ்டியுடன் வழிகாட்ட வந்திருக்கிறார். இந்திய மக்களின் மனோபாவத்துக்கும் மனப்பக்குவத்துக்கும் பொருத்தமான முறையில் ஒரு கல்வித் திட்டத்தை வகுக்கும் பிரச்னையில் அவர் கருத்தைச் செலுத்தி வருகிறார். மிகக் குறைந்த காலத்தில், காரிய சாத்தியமான முறைகள் மூலம், பொது ஜனக் கல்வியைப் பெருக்குவதற்கு திட்டம் போடும் பிரச்னையில் அவர் கவனம் செலுத்திவருகிறார். "ஹரிஜன்" பத்திரிகையிலும் வார்தா கல்வி மகாநாட்டிலும் அவர் விளக்கிக்காட்டின கல்வித் திட்டத்தின் அடிப்படைத் தர்மம், யாதெனில், "கல்வியானது சரியான கொள்கைகளின்படி போதிக்கப்படுவதாயின், பொருளுற்பத்தி செய்யும் ஒரு உழைப்பின் மூலமே போதிக்கப்படுதல் வேண்டும்" என்பதே. பள்ளிக்கூடத்தில் போதிக்கப்படும் எல்லா விஷயமும், ஏதாவது ஒரு தொழிலுடன் சம்பந்தப்பட்ட உண்மைகளாக இருக்கவேண்டும். ஏதாயினும் ஒரு தொழில் திறமையுடனும் பூர்ணமாகவும் போதிக்கப்படுவதாயின் அதன் மூலமே போதகாசிரியரின் சம்பளமும் கிடைத்துவிடும். உடனே கட்டாய இலவசக் கல்வி திட்டம் ஏற்படுத்துவதற்கு இதன் மூலம் சர்க்காருக்கு உதவிசெய்ய முடியும். இப்படியொரு முறை இல்லையாயின் தேசத்தின் இப்போதைய நிலைமையில் கல்வியின் செலவு சமாளிக்க முடியாத விஷயமா இருக்கிறது.

### இதிலுள்ள நன்மைகள்

உற்பத்தித் தன்மையுள்ள ஒரு உபயோகமான தொழில் மூலம் சிறுவர்களுக்கு அறிவு புகட்டுவது என்ற முறை பொதுப்படையாக, கல்வி முறையறிவாளரால் ஒப்புக்கொள்ளப்படுகிறது வாழ்க்கையில் எல்லா அம்சங்களின் தேவையையும் சமாளிக்கும் முறையில் கல்வியறிவு போதிக்கப்படுவதற்கு இது நல்ல உபாயம் என்பது பொதுவாக அங்கீகரிக்கப்பட்டு வருகிறது.

### குழந்தைகளின் ஆரோக்கிய வளர்ச்சி

தேகாரோக்கிய சம்பந்தமாகப் பார்த்தாலும் இந்த முறை விரும்பத்தக்கதே. வெறும் ஏட்டுச் சுரக்காயான சித்தாந்தங்களை போதித்தால் குழந்தைகள் ஏதோ துன்பத்துக்காளாவது போலவே நினைக்கிறார்கள். அவர்களது இயற்கையமைப்புக்கு அது பிடிப்பதில்லை.' இந்த கொடுமையுணர்ச்சியிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு "தொழில் மூலம் கல்வி போதிப்பது" மிகவும் நல்லது. மூளையில் வளர்ச்சி, அனுபவப்



பெருக்கு, இரண்டையும் ஒன்றோடொன்று பொருந்த வைப்பதற்கும் இம்முறை உதவியாயிருப்பதோடு, மனதும் உடலும் ஏக காலத்தில் பயிற்சி பெறுவதால் குழந்தைகள் வெறும் எழுத்து வாசனையோடு நின்று விடுவதில்லை. அச்சிட்ட எழுத்தை படிப்பதல்ல கல்வி யறிவின் லக்ஷியம். கையையும் மூளையையும் பயன்தருமாறு உபயோகிப்பது கல்வி யறிவின் லக்ஷியம். இந்தக் கல்வி முறையைக் குறிப்பதற்கு ஏதாவது ஒரு வார்த்தை சிருஷ்டிப்பதாயின் "பூர்ண மனிதத்வ கல்வி யறிவு" என்றுசொல்லலாம்.

### சமூகத் தேவை

சமூக அமைப்பு சம்பந்தமான தேவைகளைக்கொண்டு இத்திட்டத்தை பரிசீலனை செய்வோம். தேசத்தின் குழந்தைகளெல்லோருமே உற்பத்திக்கான உழைப்பின் மூலம் கல்வி பெறுகிறார்கள் என்று ஏற்படும் போது சரீர உழைப்பிற்கும் மூளை யுழைப்பிற்கும் ஏதோ உயர்வு தாழ்வு வேற்றுமை இருப்பதாக தற்காலம் பொதுப்படையாக சமூகத்திலுள்ள மனக்கோளாறு ஒழிந்துபோகும். உழைப்பின் உயர்வும், மனித சமூகத்தின் கூட்டுறவுணர்ச்சியும் எல்லோர் மனதிலும் நன்கு படியும். இதனால் தேசத்தின் ஒழுக்கத்திலும் நீதி தர்ம உணர்ச்சியிலும் ஏற்படும் லாபம் மிகவும் முக்கியமானதாகும்.

### பொருளாதாரத் தேவை

பொருளாதாரப் பிரச்னைகளை கருத்தில் கொண்டு இக் கல்வித் திட்டத்தை பரிசீலனை செய்வோம்:—

இத்திட்டம் விவேகத்துடனும், திறமையுடனும் நடத்தப்படுமாயின் நம் தேசத்துக்கு தொழிலாளரின் உற்பத்தித்திறன் அதிகரிக்கும். ஓய்வு நேரத்தை நன்கு பயன்படுத்தவும் அவர்கள் தெரிந்து கொள்வார்கள்.

### கல்வி பிரச்னையாக பார்த்தாலும் இதுசிறந்ததிட்டமே

கல்வி யறிவு என்ற ஒரே திருஷ்டியுடன் கவனித்தாலும் பயனுள்ள ஒரு தொழிலை அடிப்படையாகக்கொண்டு போதிக்கப்படும் அறிவு, பிரத்தியக்ஷமான அனுபவத்தின் மூலம் போதிக்கப்படுவதால் காரிய உணர்ச்சியுடன் பொருந்தியதாக அமையும். அறிவுக்கும் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கும்.

### இரண்டு முக்கிய நிபந்தனைகள்

மேலே விவரிக்கப்பட்ட அனுகூலங்கள் சித்திக்க வேண்டுமானால் இரண்டு விஷயங்கள் கவனமாக கருத்துடன் அனுஷ்டிக்கப்படவேண்டும்.

**ஒன்று :** போதிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படும் தொழில், கல்வி யறிவு போதனைகளுக்கு ஏராளமான சந்தர்ப்ப மளிப்பதாக இருக்கவேண்டும். மனிதரின் பல முயற்சிகளுக்கும் அத் தொழிலுடன் நெருங்கிய சம்பந்தம் ஏற்படுவதாக இருக்கவேண்டும். **இரண்டு:** பள்ளிக்கூடத்தில் போதிக்கப்படும் எல்லா அறிவுவிஷயப் பிரிவுகளுக்கும் அத்தொழிலில் தொடர்பு இருக்க வேண்டும்.

இவ் வறிக்கையின் பிற்பகுதியில், எந்தொழில்கள் அடிப்படைத் தொழில்களாகப் போதிக்கப்படலாமென்பது பற்றி சிபார்சு செய்திருப்பதில் இந்த முக்கியமான தேவைகளை கருத்தில் வைத்தே சிபார்சு செய்திருக்கிறோம். இக்கருத்துக்கள் முக்கியமானவை. கல்வித் திட்டத்தில் சிரத்தை யுள்ளவர்கள் இப்பகுதியை நன்கு கவனிப்பார்களாக.

### நோக்க மென்ன ?

இப்புதிய கல்வித் திட்டத்தின் முக்கிய நோக்கம், யந்திரத்தைப் போல சில பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய திறமையான தொழிலாளரை சிருஷ்டிப்பதல்ல.

செய்யும் கைத்தொழிலுடன் இணைப்புற்று காணப்படுகிற கல்வி வசதியை பூர்ணமாக பயன்படுத்துவதே இக்கல்வித் திட்டத்தின்நோக்கம்.

ஆகையால், பள்ளிக்கூடத்திலுள்ள கைத்தொழில் வேலையானது பாடத் திட்டத்தின் ஒரு அம்சமாக இருப்பது மட்டுமல்லாது மற்றவிஷய அறிவை போதிப்பதிலும் இவ்வடிப்படைத் தத்துவமே போதனைமுறையிலும் காணப்பட வேண்டும்.

கூட்டுறவு முயற்சி, திட்டங்கள் போடுதல், தொழில் நுணுக்கம் ஒன்றை புதிதாக ஆரம்பிக்கும் துணிவு, பொறுப்பு, இக் குணங்கள் யாவும் முக்கியமாக மதிக்கப்படவேண்டும்

'ஒவ்வொரு தொழிலும் இப்போதைப்போல கண் மூடித்தனமாக யந்திரம் போல செய்யப்படாமல் சாஸ்திர உணர்ச்சியுடன் நுட்ப அறிவுடன் போதிக்கப்படவேண்டும்

"ஒரு தொழிலில் ஏன் இதை இவ்வாறு செய்கிறோம் என்ற அறிவு ஏற்படவேண்டும்."

என்று மகாத்மா காந்தி கூறுவதன் கருத்து இதுவே யாகும்.

இப்போதுள்ள பள்ளிக்கூடத்துப் பாட ஜாப்தாவில் ஏதாவதுஒரு தொழிலையும் — உதாரணமாக நெசவு தச்சு, வேலை, முதலியவற்றை-சேர்த்துவிட்டு மற்றெல்லா பாடங்களையும் முன்போலவே போதப்பதாயிருந்தால், இத்திட்டத்தின் நோக்கமே தொலைந்துவிடும். தொழிற் பயிற்சி வேறு, கல்வி யறிவு வேறு, என்ற வேற்றுமையை ஒழிப்பதே வார்தா திட்டத்தின் முக்கிய நோக்கம்.

### சமுதாய உணர்ச்சி

இத்திட்டத்தில் வேலை செய்ய முன்வரும் உபாத்தியாயர்களும் கல்வி நிபுணர்களும், சமுதாயத்தின் பிரஜைகள் என்ற ஹோதாவில் மக்கள் கைக்கொள்ள வேண்டிய லக்ஷியங்களைப்பற்றி .இத்திட்டத்திலுள்ள தத்துவங்களை மனதில் உணருவது அவசியம். இந்நாட்டின் சமூக வாழ்வு அரசியல் வாழ்வு, பொருளாதாரவாழ்வு, கலாசாரம் எல்லாவற்றிலும், ஜனநாயகத் தன்மை ஏற்பட்டே தீரும். ஆகையால் புதிய தலைமுறையிலுள்ளவர்கள் தமது பிரச்னைகளையும், உரிமைகளையும், பொறுப்புகளையும்



147646 சென்னை-600 008.

தெரிந்துகொள்ள சந்தர்ப்ப மளிக்கவேண்டும். சமுதாய பிரஜா உரிமைகளையும், பொருப்புகளையும் உணரும் அவசியமான அளவு கல்வியாவது புதிய கல்வித் திட்டத்தில் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும். இரண்டாவதாக, விவேகமுள்ள ஒவ்வொரு பிரஜையும் தன் சமுதாயத்தின் காரியங்களில் செயலுடன் கலந்துகொள்பவனாக, சமூகத்துக்கு தன் தொண்டுகளை நல்குதல் அவசியம். பணக்காரனாயினும் சரி, ஏழையாயினும் சரி சமூகத்துக்கு பாரமாக பிறர் உழைப்பில் வாழ்பவனாக யாரும் இருக்கலாகாது. பரசிரம ஜீவிகளை சிருஷ்டிக்கும் எந்தக் கல்வி முறையும் வெறுப்புக்கே உரியது. அந்தக் கல்வி முறையானது, சமூகத்தின் செல்வ உற்பத்தியையும் திறமையையும் சிதைப்பது மட்டுமல்லாமல், ஆபத்து நிறைந்ததும் நீதி தர்மத்துக்கு மாறுபட்டதுமான ஒரு மனப்பான்மையை சிருஷ்டித்துவிடும். அந்தக் கல்வி முறை வெறுப்புக்கே உரியது.

வார்தா கல்வி முறையானது, எந்த தொழிலும்-சாக்கடை வாரும் தொழில் உட்பட - கவுரவமுள்ளதே யென்று நினைக்கும் தொழிலாளரை தயாரிக்கும். இத்திட்டத்தில் பயிற்சி பெற்றவர்கள் பிறர் மீது பாரமாக வாழ்வதில் விருப்பற்று, தன்னம்பிக்கையுடன் வாழ்வதில் பிரியம் கொள்வார்கள். அந்த உத்தேசத்துடனேயே இத்திட்டம் தயாரிக்கப்படுகிறது.

### பிரஜா தத்வம்

பள்ளிக்கூடத்தில் செய்யும் வேலைக்கும், வெளியே சமூகத்தில் நடக்கும் வேலைக்கும் இவ்வாறு நெருங்கிய சம்பந்தமிருப்பதால், பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் பெற்ற பயிற்சியும் மனப்பான்மையும் எளிதில் சமூகத்தில் பரவுவதற்கு வசதியாகிறது. ஆகவே எங்களது இந்தப் புதிய திட்டம், பிற்காலத்து பிரஜைகளுக்கு ஒரு சொந்த கவுரவ உணர்ச்சியைத் தருவது மட்டுமல்லாமல், தாமாகவே தம் வாழ்க்கையை உயர்த்திக்கொள்வதிலும் கூட்டுறவு முறையிலுள்ள சமுதாயத்தில் சமூக சேவை செய்வதிலும் பற்றுதல் ஏற்படுத்துகிறது.

குழந்தைகளின் மனது பண்பு பெறுவதற்கு ஏற்றதான இளம் வயதில் சமூக சேவை உணர்ச்சியும் கூட்டுறவு சமுதாய லக்ஷியமும் அவர்கள் மனதில் படியும்படி செய்யவேண்டுமென்பதும் இக்கல்வித் திட்டத்தின் உத்தேசமாகும்.

மாணவர்கள் கல்வி பயிலும் காலத்தில் அவர்கள் தேசீயக் கல்வி வளர்ச்சிக்கு நேரில் தொண்டு செய்வார்கள். இவ்வுணர்ச்சியின் பெருமையும் அவர்கள் மனதில் தோன்றும்.

### " தன் செலவையும் மீட்கும் கல்வி முறை "

"கல்வியின் செலவு கல்வியின் மூலமே மீட்கப்படும்" என்பது வார்தா திட்டத்தில் ஒரு அம்சம். இதைப்பற்றி தப்பெண்ணங்கள் ஏற்பட்டிருப்பதால் உண்மைக் கருத்தை விளக்கி சில வார்த்தைகள் கூறுவது அவசியமாகிறது.

வார்தா மகாநாட்டில் தயாரிக்கப்பட்ட கல்வித்திட்டம் மொத்தத்தில் சரியான திட்டமே என்ற எங்களது முடிவான அபிப்பிராயத்தை முதலில் தெளிவாகச் சொல்லிவிடுகிறோம். அந்த திட்டம் "செலவை மீட்கத்தக்க" திட்டமல்லவென்றே ஏற்பட்டாலும்கூட, தேசிய புனருத்தாரணத்துக்கு அந்தக் கல்வி முறைதான் சிறந்தது. இந்தச் சிறந்த கல்வி முறையால் அதன் செலவையும் மீட்கும் முறையில் வருமானம் வருமாயின், அது அக்கல்வி முறையில் ஒரு அதிகப்படியான நன்மை. வார்தா கல்வித் திட்டத்தை நடத்திவைப்பதில் கல்விச் செலவை மீட்க முடியுமா வென்பதை இந்த அறிக்கையின் இறுதியில் (அநுபந்தமாக) புள்ளி விவரங்களுடன் காட்டியிருக்கிறோம். நூல் நூற்பதும், நெய்வதும் அடிப்படைத் தொழிலாக வைத்து கல்வி போதிக்கப்படுமாயின் தொழிலின் மூலம் கிடைக்கும் வருமானம் கல்விச் செலவில் எவ்வளவு பகுதியை சமாளிக்க உதவுகிறதென்பது அனுபந்தத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட இந்தத் தொழில் (நூற்பதும் நெய்வதும்) சம்பந்தப்பட்ட மட்டில், புள்ளி விவரங்கள் தயாரிப்பதில் எங்களுக்கு சிரமமேயில்லை. ஏனென்றால் சென்ற 17 வருஷ காலமாக மகாத்மா காந்தியின் மேற் பார்வையில் இந்த முறையில் நிபுணத்துவம் நிறைந்த முயற்சி நடைபெற்றிருக்கிறது. இத்தொழிலில் உழைப்புக்கு ஊதியம் கணக்கிடுவதில், அகில பாரத சர்க்கா சங்கத்தார் சமீபத்தில் நிச்சயித்துக்கொண்ட ஊதிய விகிதப்படி கணக்குப் போடப்பட்டிருக்கிறது. மற்றத் தொழில்களில் தற்காலம் மார்க்கெட்டிலுள்ள சாதாரண விகிதப்படி. கணக்கு போட்டிருக்கிறோம்.

பள்ளிக்கூடங்களில் சிறுவர்கள் தயாரிக்கும் பொருள்களை சர்க்கார் வாங்கிக்கொள்வதாக விருக்கவேண்டுமென்று மகாத்மா காந்தி தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

இதை நாங்கள் பூர்ணமாக ஆதரிக்கிறோம். "பள்ளிக்கூடத்தில் தயாரிக்கும் பொருட்களை சர்க்கார் விற்பனைக்கு எடுத்துக்கொள்ளுமாயின் ஒவ்வொரு பள்ளிக்கூடம் தன் செலவை சமாளித்துக்கொள்ள முடியும்" என்று மகாத்மாஜி கூறுவதை நாங்கள் பூர்ணமாக ஏற்றுக்கொள்கிறோம்.

## ஒரு எச்சரிகை

பணம் சம்பந்தப்பட்ட பிரச்னை ஒரு பக்கமிருக்க, எப்படியும் போதனையும் பயிற்சியும் சரியாக நடைபெறுகிறதா என்பதை நன்கு தணிக்கை செய்ய திறமையான ஏற்பாடுகள் செய்வது மிகவும் அவசியம். இவ்வாறு திறமையான தணிக்கையில்லையாயின் பல சீர்கேடுகள் ஏற்படுமென்பது ஏற்கனவே மற்றப் பாடங்களுடன் "தொழில்படிப்பு"ப் பாடங்களும் ஏற்படுத்தின பள்ளிக்கூடங்களின் அனுபவமாக காணப்பட்டிருக்கிறது.



## லாபம் பெரிதல்ல கல்வியே பெரிது

ஆனால் ஒரு முக்கியமான எச்சரிக்கை:—கண் காணிப்பை அமுல் நடத்துவதில் பொருளாதார நோக்கமே பெரிதாகி, கல்வி நோக்கம் குறைந்துவிடலாகாது. இவ்வாபத்து தடுக்கப்படவேண்டும். மாணவர்களின் பயிற்சி மூலம் பள்ளிக்கூடத்துக்கு லாபம் வருவதைவிட, மாணவர்களுக்கு பயிற்சியும் அறிவும் ஏற்படுவதுதான் மிக மிக முக்கியம். மாணவர்களிடம் அதிகமாக வேலை வாங்குவதிலேயே உபாத்தியாயர்கள் தமது கவனத்தைச் செலுத்தி, மாணவரின் மூளை வளர்ச்சி, ஒழுக்க உணர்ச்சி முதலியவற்றில் கவனத்தை குறைத்துவிடலாகாது.

இத்திட்டத்துக்கு உபாத்தியாயர்களை தயாரிப்பதில் இவையெல்லாம் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

வார்தா கல்வி திட்டப்படி, ஒவ்வொரு இந்தியச் சிறுவனுக்கும் 7 வருஷம் கல்வி போதிக்கப்படவேண்டும். இந்த 7 வருஷத்துக்கும் வருஷவாரியாக விரிவாக திட்டம் போடுவதற்கு வேண்டிய அவகாசம் எங்களுக்கு கிடைக்கவில்லை. ஆனாலும் ஒவ்வொரு தலைப்பின் கீழும்; புதிய பள்ளிக்கூடங்களில் என்ன லக்ஷியம் கைக்கொள்ளப்பட வேண்டுமென்பதை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.

இனிமேல் ஒவ்வொரு "மாகாண கல்வி போர்டி"லும், பாடத்திட்டம் தயாரிப்பதற்கென்று ஒருநிபுணர் இருக்கவேண்டும். 7 வருஷத்துக்குப் பொருத்தமாக, பாடமுறை திட்டம் வகுக்க வேண்டியது அவரது பொறுப்பாக இருக்கவேண்டும். புதிய பள்ளிக்கூடங்களை மேற்பார்வையிட்ட அநுபவத்தின் மீதும் அவ்வப்போது உபாத்தியாயர்கள் தரும் யோசனைகள் மீதும் அந்த நிபுணர்கள் விரிவான திட்டம் போட முடியும்.

இங்கு நாங்கள் பொதுப்படையாக ஒரு 7 வருஷத் திட்டத்தின் அம்சங்கள் மட்டும் குறிப்பிடுகிறோம்:—

## அடிப்படைத்தொழில்

பள்ளிக்கூடப் படிப்பு முடிந்த பிறகு, மாணவன் அந்த தொழிலை ஒரு ஜீவனோபாயமாகக் கைக்கொண்டு வாழ்வதற்கு தேவையான அளவு பள்ளிக்கூடத்தில் தொழிற் பயிற்சி பெற்றுவிடவேண்டும்.

பின்வரும் தொழில்களை அடிப்படைத் தொழில்களாகக் கொள்ளலாம்:—

(1) நூற்பதும், நெய்வதும்.
(2) தச்சு வேலை.
(3) விவசாயம்.
(4) பழத் தோட்டங்கள்; காய்கறித் தோட்டங்கள்.
(5) தோல் செப்பனிடுதல் முதலியன.
(6) ஸ்தல வசதிகளும் இயற்கை வசதிகளுமிருக்கக்கூடிய வேறு தொழில்கள்.

நூற்பதும் நெய்வதும் அடிப்படைத் தொழிலாக வைக்கப்படாத பள்ளிக்கூடங்களிலும், ஒவ்வொரு மாணவனும் பஞ்சு வெட்டுதல், தக்ளி மூலம் நூல்நூற்றல். சில விவசாய வேலைகள், ஆகியவற்றில் சிறிதாவது டயிற்சி பெறுவது கட்டாயமாக இருக்கவேண்டும்.

## (2) தாய் பாஷை

எல்லா எழுத்தறிவுக்கும் அடிப்படை தாய்பாஷையை சரியாக போதிப்பதுதான். திறமையுடன் பேசவும், தவறின்றி படிக்கவும், எழுதவும் தெரியாவிட்டால், தெளிவான அபிப்பிராயங்கள் கொள்வதோ, சரியான முறையில் சிந்தனை செய்வதோ முடியாத காரியம். தவிரவும், தன் மூதாதையரின் பரம்பரை செல்வமாகிய அபிப்ராயங்களும், உணர்ச்சிகளும், மாணவர்கள் மனதில் படிவதற்கும் தாய் பாஷைப் பயிற்சி மிகமிக முக்கியம். ஆகவே சமுதாயக் கல்விப் பயிற்சியுடன், சரியான ஒழுக்கமும் நீதி தர்ம லக்ஷியங்களும் இளைஞர்கள் மனதில் குடி புகுவதற்கு தாய் பாஷையில் சரியான பயற்சி அவசியம். தவிரவும், சிறுவர்களின் இயற்கையான ஸௌந்தர்ய நவிற்சி வெளிப்படுவதற்கு தாய் பாஷையே சரியான கருவி. சரியான முறையில் போதிக்கப்படுமாயின், இலக்கியம் படிப்பது ஆனந்தத்தின் ஊற்ருக அமையும்.

7 வருஷத்துப் படிப்புக்குள்ளாக (தாய்பாஷை விஷயத்தில்) பின்வரும் லட்சியங்கள் கைகூடவேண்டும்:—

(1) சிறுவர்கள், தம்மைச் சுற்றிலும் காண்கின்ற சம்பவங்களைப்பற்றி இயற்கைத் தொனியில், நம்பிக்கையுடன். தங்குதடையின்றி தட்டுத் தடுமாருமல் சம்பாஷணை நடத்தும் திறமை பெறவேண்டும்.

இதன் பயனுக:—

(2) அன்ருட வாழ்க்கைக்கு சம்பந்தமுள்ள எந்த விஷயத்தைக் குறித்தும், தெளிவாக, விஷய சம்பந்தம் தவருமல், கோர்வையாக, பேசும் வாக்கு வன்மை ஏற்பட வேண்டும்.

(3) சப்தமில்லாமல், அர்த்தக் கோர்வையுடன், கையெழுத்து, அச்சு பிரதிகளை வேகமாக படிக்கும் திறமை வேண்டும். (சாதாரணமான எந்தப் பத்திரிகையும் படிக்க திறமை பெறவேண்டும்.

(4) சப்தத்துடன், தெளிவாக அநுபவித்து, அர்த்தத் தொனியுடன் பாட்டுகளையும், உரைநடை காவியங்களையும் கேட்போருக்கு ருசியாக படிக்கும் திறமை. (உயிரற்று கேட்பவர்களுக்கு புளித்துப்போகும் படி படிக்கும் மோசமான நடை தவிர்க்கப்பட வேண்டும்.)

(5) புஸ்தகத்தின் அட்டவணை சூசிகை. பொருளடக்கம் முதலிய பகுதிகளை உபயோகிக்கவும், அகராதியையும் விஷய ஆராய்ச்சிக்கு உதவியான புத்தகங்களையும், புத்தகாலய (லைப்ரரி) வசதிகளையும் பயன்படுத்தவும் தெரியவேண்டும்.

(6) தெளிவாக, தவறின்றி, வேகமாக எழுதத் தெரியவேண்டும்.



ளிக்கூடத்திலோ மெட்ரிகுலேஷன் படிப்பு வரையிலாவது படித்திருக்க வேண்டும். இல்லாவிடில் "வெர்ஞகுலர் பைனல்" என்ற படிப்பில் தேறிய பின் 2 வருஷம் உபாத்தியாயராக அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

## உபாத்தியாயர் பயிற்சிக்கான பாடத்திட்டம்

(3 வருஷத்தில் முடியவேண்டியது)

(1) (ஏ) பருத்தி விளைவித்தல், பொறுக்குதல், அரைத்து பஞ்சு வெட்டி பட்டை போடுதல், நூல் நூற்றல், பாவு ஓடுதல். (பருத்தி அல்லது கம்பிளி).

(பி) கைராட்டினத்தின் 'யந்திர' அமைப்பு. (நூற்றலுக்கு பதில் வேறு தொழில் பொறுக்கப்பட்டால், அதற்கான கருவிகள்).

(ஸி) கிராம தொழில்களைப்பற்றி பொருளாதார அறிவு. (குறிப்பாக அந்த பிரதேசத்திலுள்ள அடிப்படைத் தொழிலைப்பற்றி)

(டி) சிறு தச்சு வேலைகள்; (பொறுக்கப்பட்ட கைத்தொழில் சம்பந்தமாக)

(2) பின்வரும் "அடிப்படைத் தொழில்களில்" ஏதாவதொன்றில் பயிற்சி;—

(ஏ) நூற்றல், நெசவு.

(பி) விவசாயம்.

(ஸி) காய் கறி, பழத் தோட்ட வேலைகள்.

(டி) தச்சு வேலை.

(இ) விளையாட்டு சாமான்கள் செய்தல்.

(எப்) தோல் வேலைகள்.

(ஜி) காகிதம் செய்தல்-அல்லது - அந்தந்த பிரதேசத்திற்கேற்ற வேறு ஏதாயினும் ஒரு தொழில்.

(3) கல்விக் கொள்கைகள் என்ற தலைப்பில் பின்வரும் விஷயங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(ஏ) உற்பத்திக்கான உழைப்பின் மூலம் கல்விபோதிப்பது என்ற அடிப்படைக் கொள்கை.

(பி) பள்ளிக்கூடத்துக்கும் சமூகத்துக்குமுள்ள தொடர்பு.

(ஸி) குழந்தைகளின் மன அமைப்பைப்பற்றிய அறிவு. ஒருபுதிய திறனை சம்பாதிப்பதுபற்றிய மனோதத்துவம்.

(டி) திட்டம் வகுத்து உருவகப்படுத்துவதுபற்றிய போதனு முறைகள்.

(இ) தேசத்திலுள்ள வாழ்க்கை நிலைமையையும், வாழ்க்கைமுறையையும் பொறுத்து இப்புதிய கல்வித் திட்டத்தின் லட்சியங்கள்.

(4) உடலமைப்பு சாஸ்திரம், சுகாதார சாஸ்திரம், நல்லுணவு பற்றிய விஷயங்கள் முதலியன. (காரியத்தில் பயன்படக்கூடிய விஷய அறிவு முக்கியம்.)

(5) சமூக விஷயங்கள் பற்றி ஏற்கனவே படித்துள்ளதை மறுபடியும் புதுப்பித்து, உபாத்தியாயரின் சமூக மனப்பான்மையானது புதிய சமூக வளர்ச்சி பற்றிய உணர்ச்சியைப் பெறும்படி, பல பிரச்னைகள் கவனிக்கப்பட வேண்டும். சென்ற 50 வருஷத்தில் இந்திய சமூகத்தில் ஏற்பட்டுள்ள, வளர்ச்சி, மாறுதல், முதலியவற்றை உபாத்தியாயர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

(6) ஹிந்துஸ்தானி பாஷையை ஹிந்தி உர்தூ ஆகிய இரண்டு எழுத்துக்களிலும் படிக்கவும் எழுதவும் தெரிய வேண்டும்.

(ஹிந்துஸ்தானி பேசப்படும் இடமாயினும், பேசப்படாத இடமாயினும் சரி, உபாத்தியாயர்களுக்கு இந்தப்பாடம் உண்டு.) எல்லா சர்க்கார் பள்ளிக்கூடங்களிலும் இக்கல்வியால் எதிர்பார்க்கப்படும் சமூக லக்ஷியங்கள் நிறைவேறுவதற்கு இது அவசியம்.

(8) பிளாக்போர்டில் எழுதவும் சித்திரம் போடவும் தெரிய வேண்டும்.

(9) தேகாப்பியாசம், டிரில் விளையாட்டுகள்.

(10) பிரத்யக்ஷ பழக்கம் மூலமும் பயிற்சி மூலமும் மேற்பார்வையநுபவம் ஏற்படுத்துதல். மேலே விவரிக்கப்பட்ட முறையில் உபாத்தியாயரை பயிற்றுவிக்கும் பள்ளிக்கூடங்கள், உபாத்தியாயரும் மாணவரும் சேர்ந்து பரஸ்பரம் நெருங்கி வாழும் 'ஹாஸ்டல்' பள்ளிக்கூடங்களாகவே இருக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மாணுக்கரும் ஆசிரியர்களும் கூட்டுறவாக பல துறைகளில் சமூக வாழ்க்கையில் ஒன்றுபட்டு பங்கெடுத்துக் கொள்வதன் மூலம் உபாத்தியாயராக பயிற்சிபெறும் ஒவ்வொருவரின் தனித்திறனும் ருசியும் விகாஸமடைய வசதியுண்டாகும். ஆகையால் பயிற்சிக் காலத்திலேயே உபாத்தியாய மாணவர்களும் ஆசிரியர்களும் அவரவர்களது ருசிக்கேற்ற பல முயற்சிகளில், பள்ளிக்கூட வாழ்வின்போதே ஈடுபட ஊக்கமளிக்க வேண்டும்.

"உபாத்தியாயர் பயிற்சி"ப் பள்ளிக்கூடங்களில் இம்மாதிரி சமூக முயற்சிகளும், அவரவர் ருசிக்கேற்ற சில தொழில்கள். (செடி வளர்த்தல், சித்திரம் எழுதுதல், தச்சு வேலை, போன்ற).

இவையெல்லாம் எவ்வளவு குதுகலத்துடனும், ஊக்க உற்சாகத்துடனும் நடக்கிறதோ அதைப் பொறுத்துத் தான் பயிற்சியின் உண்மையான வெற்றியும் பயனும்.

மேலே சொல்லப்பட்ட பாடத்திட்டம் மிகவும் பளுவானது என்றும் ஆகையால் காரிய சாத்யமல்ல வென்றும் சிலர் நினைக்கக்கூடும்,



அந்த அபிப்பிராயத்தை நீக்குவது மிகவும் அவசியம். சரியான மனப்பான்மையுடன் அம்முயற்சியை கவனித்தால் அந்த பாடத் திட்டத்தை பூர்த்தி செய்வதில் அசாத்திய மெதுவுமிருக்காது.

இது சேர்ந்தார்ப்போல 3 வருஷத்தில் அமுலுக்கு வரவேண்டிய விஷயம். அநுபவத்தின் மீது இந்த 3 வருஷத்துக்குள்ளாகவே ஒரு தெளிவான திட்டம் போட்டு அதை நடத்தலாம். அநுபவத்தின் மீது போடவேண்டிய அத்திட்டத்தின் நுணுக்கம் இப்போது வெறும் காகிதத் திட்டமாக தயாரிக்கப்படுவது எளிதல்ல.

தவிரவும் கல்வித் திட்டம் முழுதும் அமுலுக்கு வந்த பிறகு சில வருஷத்துக்கப்பால், உபாத்தியாயர் பயிற்சிக்கு வருபவர்கள், தமது சாதாரணப் படிப்பிலேயே, இப்பாடத் திட்டத்திலுள்ள பல விஷயங்களை ஏற்கனவே கற்றவர்களாக இருப்பார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. (அதாவது வார்த்தா திட்டப்படி சிறு வயதில் 7 வருஷ காலம் கல்வி கற்றவர்கள், வாத்தியார் வேலைக்கான பயிற்சியின் போது புதிதாக கற்றுக்கொள்ள வேண்டியதாக மீதமிருக்கும் விஷயங்கள் மிகவும் குறைவாகவே இருக்கும். உதாரணமாக கைத்தொழில் அதன் நுணுக்க அறிவு இதெல்லாம் அவர்களுக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கும்.) உபாத்தியாயர் பயிற்சிக் கூடங்களில் புதிதாக படிக்கவேண்டிய "பாடவிஷயங்கள் அதிகமிருக்காது. ஏற்கனவே படித்ததை "உபாத்தியாயர்" ஹோதாவில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கான பயிற்சிதான் "டிரெய்னிங் ஸ்கூல் படிப்பு."

மூன்றுவதாக இந்த பாடத்திட்டத்திலுள்ள ஒவ்வொரு விஷயத்திலும் உபாத்தியாயருக்கு பூர்ணமான பாண்டித்யம் ஏற்படுத்துவதல்ல இதன் நோக்கம். இவ்விஷயங்களை போதிக்கும்சிறுவர்களுக்கும், சிறுவர்கள் தம்மைச் சுற்றிலும் காண்கின்ற பொருள்களுக்கும் வாழ்க்கைக்கும், சம்பந்த மிருப்பதாக உணரும்படி செய்வதற்கான பயிற்சியை உபாத்தியாயருக்கு ஏற்படுத்துவதே பயிற்சியின் முக்கிய நோக்கம். பயிற்சிபெறும் மாணவ உபாத்தியாயர் உண்மையிலேயே தன் உத்தியோகத்தைப் பற்றி பெருமை யுணர்ச்சி கொள்வாரானால், அறிவில் அபிலாஷை யிருக்குமானால், தன் முயற்சி மூலமே அவர் பல விஷயங்களைப் பற்றியும் நுட்பமான அறிவும் பாண்டித்யமும் வளர்த்துக்கொள்வார். ஆனால் பயிற்சி பள்ளிக்கூடத்துப் பாடம் சம்பந்தப்பட்ட மட்டில், அவர்களை பெரிய பண்டிதர்களாக்குவதல்ல நமது உத்தேசம். திறமையும் அறிவுமுள்ள உழைப்பாளராக சரியான புதிய மனப்பான்மையுள்ள உபாத்தியாயர்களை தயாரிப்பதே முக்கிய நோக்கம். சமுகத்துக்கு சேவை செய்து புதிய தலைமுறைகள் நல்ல நிலை எய்துவதற்கு உதவுவதே உபாத்தியாயரின் லக்ஷியமாக இருக்கவேண்டும். இக்கல்வித் திட்டத்தை அவர்கள் நன்கு உணரும்படி செய்யவேண்டும்.

### தாமதத்தை தவிர்க்க

*குறைந்த காலத்துக்குள் பயிற்சி அளிப்பதற்கு ஒரு பாடத்திட்டம்.*

வார்தா கல்வித் திட்டம் தாமதமின்றி கூடிய சீக்கிரம் அமுலுக்கு வரவேண்டுமென்பதற்காக ஒரு வருஷத்துக் குள்ளேயே பயிற்சி முடிந்து போகும் முறையில் ஒரு பாடத்திட்டம் போடுகிறோம்.

இப்போதுள்ள சாதாரண பள்ளிக்கூடங்களிலிருந்தும், தேசியப் பள்ளிக்கூடங்களிலிருந்தும், ஆசிரமங்களிலிருந்தும், சில உபாத்தியாயர்களைப் பொறுக்கி யெடுத்து அவர்களுக்கு பயிற்சி யளிக்கலாம்.

அவ்வாறு பொறுக்கப்பட்ட உபாத்தியாயர்கள் ஏற்கனவே வாத்தியார் வேலையில் அனுபவம் பெற்றிருக்கவேண்டும்; அல்லது ஒரு தொழிலில் பயிற்சி பெற்றிருக்கவேண்டும்; அதோடு இந்தக் கல்வித் திட்டத்தை சரியான மனப்பான்மையுடன் ஊக்கத்துடன் லக்ஷியத்தை நன்கறிந்து சேவை செய்யக்கூடியவர் தான் என்ற நம்பிக்கைக்கு பாத்திரராக இருக்க வேண்டும்.

இவர்களுக்கு கொடுக்கும் பயிற்சியின் பாடத்திட்டத்தில் பின்வரும் அம்சங்கள் இருக்கவேண்டும்.

(ஏ) பஞ்சு வெட்டிப் பட்டை போடுவதும்; தக்ளியில் நூல் நூற்பதும். (பொறுக்கப்பட்ட அடிப்படைத் தொழில் வேறு ஏதாயிருந்தாலும் நூல் நூற்றல் கட்டாயப் பாடமாகும்).

(பி) மேலே விவரிக்கப்பட்டுள்ள அடிப்படைத் தொழில்களில் ஏதாவது ஒன்றில் பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு ஆரம்பத்தில் 3 வருஷத்தியப் படிப்புக் குள்ளதாவது சொல்லிக்கொடுக்க சக்தி யிருக்கும்படி உபாத்தியாயருக்கு பயிற்சி யளிக்கப்படவேண்டும்.

(ஸி) உடலமைப்பு சாஸ்திரம், சுகாதார சாஸ்திரம், நல்ல உணவு முதலியவைகளைப் பற்றிய அறிவு.

(டி) தொழிற் பள்ளிக்கூடத்தைப்பற்றிய அடிப்படைக் கொள்கைகள்; அதற்கும் சமுகத்துக்குமுள்ள சம்பந்தம்

(இ) கைத்தொழில், வாழ்க்கை, படிப்பு மூன்றுக்கு பரஸ்பரம் சம்பந்தமுள்ள முறையில் கல்வி கற்பிக்க ஒரு திட்டம் வகுத்து உருவகப்படுத்துதல்.

(எப்) இந்திய தேசியக் கிளர்ச்சியின் சரித்திரமும் இந்த நூற்றுண்டில் உலகில் ஏற்பட்ட முக்கியமான உலக இயக்கங்களும்

(ஜி) உதாரணமாகப் பள்ளிக்கூடத்தில் 25 பாடங்கள் சொல்லிக் கொடுக்கச் சொல்வது.

## வார்தா கல்வித் திட்டம்—சிபார்சுகள்*

குறிப்பு:—வார்தா திட்டம் நடைபெறுமா, பெருதா என்ற கவலையை விட்டு விட்டு ஆராய்ச்சி முறையிலும், பள்ளிக்கூடம் திருத்தியமைக்கப்படுவதற்கு வேண்டிய புள்ளி விவரங்களாலும், அனுபவ பூர்வமாகவும், மானேஜர்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரிய சங்கங்கள், பெற்றோர்கள் அனைவரும் இத் திட்டத்தை பரிசீலனை செய்யவேண்டும். அப்படிச்செய்து கடைசியில் பரிசீலனைக்காக கொடுக்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடை தயாரித்து தென் இந்திய ஆசிரியர் சங்கக் காரியதரிசிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அவ்விடைகளை ஒட்டி ஓர் யாதாஸ்து தயாரித்து மார்ச்சு மாதமுடிவில் சர்க்கார் காரியாலயத்திற்கு ஓர் மனு அனுப்பப்படும்.

**சாக்கிர் ஹுசேன் கல்விக்கமிட்டி செய்துள்ள சிபார்சுகள்:—**

1. சிறுவர் சிறுமிகளுக்குப் போதிக்கும் பிரதம கல்வி ஏழு வருஷங்களிருக்க வேண்டும்; **(Seven years'course)**.

2. கல்வி ஏதேனும் ஒருகைத்தொழில் மூலமாகவோ, அல்லது உற்பத்தி வேலை மூலமாகவோ, போதிக்கப்பட வேண்டும் **(Education through a basic craft)**.

3. உற்பத்தி வேலையானது எல்லா கல்வி போதனைகளுக்கும் அஸ்திவாரம் போலிருக்கவேண்டும். அதாவது கைத்தொழில் வேலையில் அடங்கியிருக்கும் மூலாதாரங்களைக் கல்வி வேலைக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்தைக் கொள்ளவேண்டும். பாடதிட்டத்தில் இவ்வேலை ஒரு முக்கியப்பகுதியாக இருக்கவேண்டும். **(Craft the foundation-not the only education)**.

4. இதில் கூட்டுமுறை, திட்டப்படி வேலை செய்யும்முறை, நேராக தானகவே முயற்சி எடுத்துக்கொள்ளும் முறை, கல்வி கற்பதில் பொறுப்புக்காட்டும் முறை, பிரஜா உரிமை இலக்ஷியம் போன்ற கொள்கைகள் முன்னணியில் நிற்கவேண்டும். **(Co-operative, planned, project, work for citizenship)**.

5. குழந்தைகள் சுயமதிப்பு கண்ணியம் சுயத்திறமை உணர்ச்சிகள் உள்ள எதிர்காலப் பிரஜைகளாகவேண்டும். அதாவது சுய அபிவிருத்தியும் கூட்டுறவிலமைந்த சமூகசேவையும் குழந்தைகளின் கல்வி இலக்ஷியங்களாக வேண்டும். **(Self-improvement and citizenship in a co-operative community.)**

6. நூல் நூற்றல்; நெசவு செய்தல்; தச்சு வேலை; விவசாயம்; பழம் காய்கறி உற்பத்தி வேலை; தோல் சாமான்கள் செய்தல்; ஸ்தல பிரதேச நிலைமைக்கு ஏற்ற கைத்தொழில் போன்ற மூலத்தொழில் மூலம் கல்வி கற்பிக்கப்படவேண்டும். **(Typical basic crafts)**.

7. மூலத்தொழில், தாய் பாஷை, ஆரம்பகணிதம், சமூக விஷயக்கல்வி, பொது விஞ்ஞான சாஸ்திர அறிவு, இயற்கைப்பாடம், தாவர

* (திருச்சி ஜில்லா ஆசிரிய சங்க விளக்கமும் விசாரணையும்)

சாஸ்திரம்; ஜீவதத்துவ சாஸ்திரம்; சுகாதாரம், தேகாப்பியாசம் வான சாஸ்திரம்; ரசாயன சாஸ்திரம்; சித்திரக்கலை; சங்கீதம்; ஹிந்துஸ்தானி இவை போதிக்கப் படவேண்டும். **(Subjects of Study)**

8. பிரதம கல்வி ஏழு வயது முதல் பதினான்கு வயதுவரை போதிக்கப்பட வேண்டும். **(7—14 School age).**

9. பாடதிட்ட விஷயத்திற்குக் கீழ்கண்டபடி அவகாசம் தினசரி கொடுக்கப்படுதல் வேண்டும் :—மூல தொழில் படிப்பு 3-மணி 20-நிமிஷம்; சங்கீதம், சித்திரம், கணிதம் 40-நிமிஷம்; தாய் பாஷை 40-நிமிஷம்; சமூக அறிவு, விஞ்ஞான சாஸ்திர அறிவு 30-நிமிஷம்; தேகாப்பியாசம் 10-நிமிஷம்; ஓய்வு 10 நிமிஷம். **(Daily routine).**

10. பிரதமக் கல்விப் பள்ளிக்கூடம் மாதம் 24 நாட்கள் வருஷத்தில் 288 நாட்கள் வேலை செய்யவேண்டும். **(288 working days in a year).**

11. வகுப்பு ஒன்றுக்கு சராசரி 30-க்கு மேல் பிள்ளைகள் இருக்கக்கூடாது. **(30 average strength).**

12. பள்ளிக்கூடங்களின் வேலைகளை நிர்ணயித்து சீர்தூக்க, புதிய முறை பரீக்ஷைகள் ஏற்பட வேண்டும். **(New tests)**

13. ஏழு வயதுக்குள்பட்ட குழந்தைகளுக்கும், சிறப்பாக மூன்று வயதிலிருந்து ஏழு வயதுக்குள்பட்ட சிசுக்களின் படிப்புக்கும் சர்க்கார் ஓர் திட்டம் போடவேண்டும். இப்படிச்செய்ய உடனே முடியாவிட்டாலும், வயது முதிர்ந்த எழுத்தறிவில்லாத பெற்றோர்கள் படிப்பை வளர்த்து அவர்கள் மூலம் சிசுக்களின் வீட்டுப்பயிற்சி ஒழுங்காக இருக்கும்படி செய்யவேண்டும். **(Nursery & Home Education for Pre- school-children)**

14. கட்டாய இலவச கல்வி ஏழு வயதுக்குமேல் தான் ஆரம்பிக்கப்படவேண்டும். இப்படிக் கட்டாயக் கல்வி ஏழு வருஷத்திற்கு நடக்க வேண்டும். பெண்களுக்கு அவசியமானால் 12 வயதில் இந்தக் கல்வித்திட்டம் முடியும்படி செய்யலாம். **(7+ age of compulsion—Education of girls may end at 12)**

15. ஒவ்வொரு பள்ளியிலும் ஓர் தோட்டமும் ஓர் விளையாட்டிடமும் இருத்தல் வேண்டும். **(Garden & Playground)**

16. படிப்பின் தேக்கத்துக்கும் வியர்த்தத்துக்கும் உணவின்மை ஓர் முக்கிய காரணமாயிருப்பதால், பள்ளிக்கூட காலத்தில் குழந்தைகளுக்கு சிற்றுண்டி அளிக்க ஏற்பாடு சர்க்கார் பொதுமக்கள் ஒத்துழைப்பால் செய்யப்படவேண்டும். **(Light refreshments by State effort.)**

17. பள்ளிக்கூடப் பாடதிட்டம் முன்னேற்ற மடைந்திருப்பதைப் பரீக்ஷிக்க, தற்போதுள்ள பரீக்ஷை முறையை மாற்றி தனி நபர் வளர்ச்சியையும் பாடத்திட்டம் உபயோகப்படுத்தியிருக்கும் முறையையும், நிர்ணயிக்க நிபுணர்களால் பரீக்ஷை ஏற்படவேணும். கீழ் வகுப்பி



லிருந்து மேல் வகுப்புக்குப் போக அனுமதிப்பது அந்தந்த பள்ளிக்கூட ஆசிரிய சமுதாயத்தால் நிர்ணயிக்கப்படவேண்டும். **(Measurements and Promotions by the Teacher faculty.)**

வகுப்பில் அநேக குழந்தைகள் தேக்கமுற்றிருந்தால் ஆசிரியர்களின் வேலையை உற்று நோக்கவேண்டும். ஓர் பள்ளி முன்னேறவில்லையானால், அதன் நிர்வாக ஊழல்களை கவனிக்கவேண்டும். பாடதிட்டமே முன்னேறவிட்டால் அதைப் பரிசீலனை செய்து திருத்தியமைக்கவேண்டும். **(check-up of School work and School contribution.)**

18. திறமைப்பள்ளி என்பதை நிர்ணயிக்க கீழ்க்கண்ட விஷயங்களைப் பரீக்ஷை செய்யவேண்டும்; பாட பரீக்ஷை திட்டங்கள்; தொழிற்கலைப் பயிற்சி; ஆசிரியரின் பிரத்யேக நுட்பமான ஆராய்ச்சி பூர்வமான சேவை; பள்ளிக்கூடப் பிரதேசத்திற்கு பள்ளிக்கூடம் செய்யும் தொண்டு; இவைகளை ஒட்டி வருஷ மொருமுறை கல்விப் பொருட்காட்சி ஒன்று ஸ்தாபிக்கவேண்டும். **(Efficiency in Schools and Educational Exhibitions.)**

19. பிரதம கல்வி ஆசிரியர்களுக்கு மூன்று வருஷப் பயிற்சி வேண்டும்; **(Three Years, Teacher- Training)**

20. ஆசிரியர்களுக்கு 25 ரூபாய் மாதச் சம்பளமாகக் கொடுக்கலாம். ரூ. 20 கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டும். உயர்தர ஆசிரியர்களுக்கு யோக்கியதையைப் பொறுத்து அதிகச் சம்பளம் கொடுக்கப்படலாம். **(Minimum salary for teachers)**

21. ஆசிரியர்களைப் பொறுக்கி எடுப்பதில் சமூக சேவை குணங்கள் வாய்ந்தவர்களைப் பொறுக்கவேண்டும். பெரும்பாலும், ஆசிரியர்கள் அந்தந்த பிரதேசத்திலிருந்து பொறுக்கப்படவேண்டும். **(Principles of Teacher selection)**

22. ஆசிரியப் பயிற்சிக் கழகங்கள் எல்லா வகுப்பினருக்கும் பயிற்சிபெற இருப்பிடமாக வேண்டும். தீண்டாமை, சேர்ந்து உண்ணுமை போன்ற இடையூறுகள் இவ்விடங்களில் இல்லாமல் இருத்தல் வேண்டும். இக்கழகங்களில் உள்ளூர் தொழிலாளிகளைக் கொண்டு தொழிற்படிப்புக் கற்றுக்கொடுக்கப் படலாம். **(Training Institutions)**

23. ஆசிரியருக்கு அறிவூட்டும் திட்டங்கள் போதனாமுறை கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் ஏற்படவேண்டும். **(Refresher courses for Teachers.)**

24. ஆராய்ச்சிக்கும், பிரசாரத்திற்காகவும் ஒவ்வொரு போதனாமுறைப் பள்ளியிலும் அதற்கென்ற ஸ்தாபனங்கள் ஏற்படவேண்டும். **(Demonstration Schools).**

25. பள்ளிக்கூடங்களைப் பரீஷை செய்ய யோக்கியதை பெற்ற, அனுபவம் பெற்ற, வழிகாட்டக்கூடிய, மேன் பார்வை நிர்வாக சக்தி

யுள்ள, ஆசிரியர்கள் பயிற்சி செய்யப்பட்டு நியமிக்கப் படவேண்டும். **(Equipped Teacher Supervisors).**

26. சமூகத்தொண்டுசெய்யும் இலாக்காக்களின் ஒத்துழைப்பை கல்வி இலாகா அடையவேண்டும். **(Co-operation of public utility services).**

27. இந்தியப்படிப்புப் பாதுகாப்புக்கென்று ஓர் உத்தியோகப் பற்றற்ற அகில இந்திய ஆராய்ச்சி சபை ஏற்படவேண்டும். இச்சபை கல்வி சம்பந்தப்பட்ட எண்ணங்கள், முயற்சிகள், ஆராய்ச்சிகள், பிரசுரங்கள், அறிவூட்டுதல் போன்ற வேலைகளைப் பயன்படச் செய்யவேண்டும். **(Central Institute of Indian Education.)**

28. இந்த திட்டத்தைக் கையாட விரும்பும் ஆசிரியர்களுக்கு ஒரு வருடப் பயிற்சி ஒன்று உடனே அளிக்கப்படவேண்டும். இதற்கு ஊக்கமுள்ள ஆசிரியர் தான் பொருக்கப்படவேண்டும். இவர்களுக்கு நூல் நூற்றல், ஏதேனும் ஒரு தொழிற்கலை, பொது அறிவு, தொழில் மூலம் படிப்பு அளிக்கும் உபாயங்கள் அறிவு, இந்திய தேசிய வளர்ச்சி அறிவு, உலகப் போக்கு அறிவு, போதனை முறைப் பாடப் பயிற்சி போன்றவை போதிக்கப்படவேண்டும். **(Emergency course of one year for Teachers)**

29. ஆசிரியருக்குப் பூர்ண பயிற்சி அளிக்கும் மூன்று வருட திட்டம் ஆசிரியர் தன்னறிவு, சுற்றுப்புற அறிவு, நாட்டின் தேவை அறிவு குழந்தைகளைப் போற்றும் அறிவு, தொழில் அறிவு, தொழில் கண்ய அறிவு போன்றவைகளைப் போதிக்கவேண்டும். அதாவது புது சகாப்த ஆசிரியர் புதிய வழியில் தயாரிக்கப்பட வேண்டும். **(New scheme requires new teachers.)**

30. பள்ளிகளில் குழந்தைகளின் உழைப்பினால் உண்டாக்கப்படும் பொருள்களை சர்க்கார் வாங்கவேண்டும். பள்ளிகளுக்கு சர்க்கார் இடம், கட்டிடம், விளையாட்டிடம், உபகரணங்கள் போன்ற மொத்தச் சிலவுகளைக் கொடுக்கவேண்டும். இந்த ஆதரவை அடைந்து பள்ளிகள் அவ்வப்போது ஏற்படும் சிலவுகளைத் தாமே ஏற்றுக்கொள்ள வேண்டும். பள்ளிக்கூட அழைப்புக்கும் ஆசிரியர் ஊதியத்திற்கும் இதனால் இணைப்பு ஏற்படும். **(Correlating work of schools and wages of Teachers.)**

**பரிசீலனைக்காக சில வினாக்கள்**

1. தற்போதுள்ள பிரதம கல்வி திருப்திகரமாயிருக்கிறதா?

2. புதிய இந்தியாவிற்கும் சுதந்திர இந்தியாவிற்கும் தகுந்த நாட்டுக்கேற்ற படிப்பு திட்டம் அவசியமா?

3. இந்திய படிப்பு திட்டம் அஹிம்சை, தொழில் மூலம் படிப்பு என்ற இரண்டு கொள்கைகளையே யொட்டி அமைப்பதற்கு என்ன ஆக்ஷேபனைகள்?



147646

4. 'தொழில் மூலம் படிப்பு' என்பது நவீன கொள்கைகளை ஒட்டியதா? இல்லையா?

5. பள்ளிக்கூடத்தின் வேலையைப் பொருத்து ஆசிரியர் ஊதியத்தை நிர்ணயிப்பது தவறு? முடியாதா?

6. நாட்டின் செல்வ நிலையையும், சர்க்காரின் பணத் தெம்பையும் உத்தேசித்து இலவச, கட்டாயக் கல்வி இத்திட்டத்தால் சாத்தியமாகும் என்பது இந்த திட்டத்தின் மனப்பான்மை. இது தவறானால், வேறு உபாயங்கள் என்ன?

7. பிரதமக் கல்வி குழந்தையின் 7-வது வயதில் ஆரம்பிக்க வேண்டுமென்பதற்கு என்ன ஆக்ஷேபனை.

8. 7-வயதுக்குள்பட்ட குழந்தைகளுக்கு வீட்டுக்கல்வி போதிக்க என்ன ஏற்பாடுகள், யார் செய்யவேண்டும்?

9. பிரதம கல்வி 7-வருஷம் நடைபெற வேண்டுவது அவசியமா?

10. பிரதம கல்வியில் வார்தா திட்டத்தின்படி உள்ள பாடங்கள் அவசியமா? இல்லையா?

11. வார்தா திட்டத்தின்படி புதிய ஆசிரியர்கள் சமூகம் ஏற்படவேண்டியது அவசியமில்லையா?

12. புதிய கண்காணிப்பாளர்கள் ஏற்படவேண்டுவது அவசியமில்லையா?

13. புதிய மாகாண கல்வி சபை ஒன்றும், அகில இந்திய கல்வி சபை ஒன்றும் ஸ்தாபிக்கலாமா?

14. பழைய பரீக்ஷை முறைகளை விட்டு, புதிய கல்விச் சோதனை உபாயங்களை அனுஷ்டிப்பதில் என்ன ஆக்ஷேபனை?

15. தினசரி 5½ மணியில் 3 மணி 20 நிமிஷம் இத்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்ற தொழில் படிப்பு வேண்டுமா? பாக்கி பாடங்களை 2 மணியில் நடத்துவது கடினமா?

16. வருடத்தில் தொடர்பள்ளிகள் என்றபடி 288 நாட்கள் பள்ளிக்கூடங்கள் வேலை நடத்தலாமா?

17. குழந்தைகளுக்கு வேலை நேரத்தில் சிற்றுண்டி அளிப்பது வேண்டுமானால் என்ன உபாயங்களைத் தேடலாம்?

18. வார்தா திட்டம் முடியுமென்றால் உங்கள் நகரத்திலோ, கிராமத்திலோ என்ன மூலத் தொழில் கற்பிக்கலாம்? அதன் திட்டங்கள், பலன்கள், வசதிகள் என்ன?

19. வார்தா திட்டத்திற்கென ஓர் அறிவூட்டும் திட்டம் ஏற்பட்டால் நீங்கள் அதில் கலக்கத்தயாரா?

20. உங்கள் பள்ளிக்கூடத்திற்காக வார்தா திட்டத்தின்படி ஏற்படக்கூடிய வரவு சிலவு திட்டத்தை தயாரிக்கவும்.

JL
T15M21, N36PA
N27.2.9-11

# குழந்தைகளின் கைவேலை

## பூநூல், பட்டுத்துணிகள் கொண்டு பூ தைத்தல்




பூநூல் கொண்டு வித விதமான அழகான புஷ்பங்கள் செய்ய முடியும். ரோஜாப்பூ, கனகாம்பரம் இவைகளை பழம் பட்டுத்துண்டுகள் கந்தைகள் கொண்டும் தைக்கமுடியும். இப்புஷ்பங்களைப் பலநாள் பத்திர படுத்தி வைத்துக் கொள்ளவும் கூடும்.

**பூநூல் புஷ்பங்கள் :—** 5'' நீளமுள்ள 8 ஈர்க்குச்சிகள் எடுத்துக் கொண்டு படம் 1—ல் காட்டியது போல் இது கையில் பிடித்துக் கொள், **a, b, c, d, e, f,** என்ற 6 நுனிகள் தென்படும்.



வெளிர் மஞ்சள் நூல் கொஞ்சம் எடுத்துக்கொள். அதன் ஒரு நுனி 5 ஐ உனது கட்டைவிரலால் பிடித்துக்கொள். பிறகு பூநூலை **a b** வழியாய் படத்தில் காட்டியபடி சுற்று, படம் 2, 3—ல் காட்டியபடி 6 குச்சிகளிலும் சுற்றிவா. இதேமாதிரி ஒவ்வொரு குச்சியிலும் ½'' தூரம் சுற்றிவரும்படி நூல் சுற்றிக் கொண்டே வா (படம் 4 பார்க்கவும்) 'இந்த மஞ்சள் நிறம் புஷ்பத்தின் மகரந்தக் காம்பு, மகரந்த தூசி இவைகளைக் காட்டுகிறது.

பிறகு நிரம்ப ரோஸ் நூல் எடுத்துக்கொள். மஞ்சள் நூல் நிறுத்தின இடத்திலிருந்து சுற்ற ஆரம்பி, ஒவ்வொரு குச்சியிலும் 1½ அகலம் உள்ளதாக விருக்கும்படி ரோஸ் நூலை சுற்றி வா. (படம் 5 பார்க்கவும்) நூல் நுழையாமலிருக்கும்படி கடைசியில் முடிக்கும் பொழுது 2, 3 குச்சிகளை முடித்தல் போட்டுச் சுற்று.

பிறகு கொஞ்சம் கெட்டி வெள்ளை நூல் எடுத்துக் கொண்டு படம் 5—ல் காட்டியபடி ஒரு குச்சியில் செருகிக்கொள். அதே குச்சியின் எதிர் நுனியைக் கொண்டு அந்தக் குச்சியை வெளியில் இழுத்து விடு. இப்பொழுது குச்சிக்குப் பதிலாக நூல் ஏற்படும். அதோ மாதிரி பாக்கி இரண்டு குச்சிகளுக்குப் பதிலாக நூலைச் சேர்த்து இழுத்து விடு.

பிறகு படம் 7 ஐப்பார். மேலே சொன்ன 6 நூல்களையும் சேர்த்து புஷ்பத்தின் அடியில் முடிச்சுப் போட்டுவிடு.

சிலந்தி வலைப் போன்ற இப்புஷ்பதின் ஒரு கிண்ணம்போலஇருக்கும்படி செய்துகொள். படம் 8 ஐப்பார் பிறகு இதன் அடியில் ஒரு கொண்டை ஊசி செருகி கொண்டு உன்னிஷ்டம்போல் தலையில் வைத்துக்கொள். இப்புஷ்பத்தின் மத்தில் கொஞ்சம் பட்டுத்துணிகளை தைத்து விட்டால் முன்னம் விட இது அழகாயிருக்கும்.

**பட்டுக் கந்தலில் புஷ்பங்கள் செய்தல்**

உன் தாயார் அல்லது சகோதரி பட்டு ரவிக்கை தைக்கிற காலத்தில் ஏதாவது கொஞ்சம் பட்டுத் துண்டுகளைக் கத்தரித்துப் போட்டிருப்பாள். அதைக்கூடப் பொறுக்கிச் சேர்த்துவை. அவைகளைக்கொண்டு ஏதாவது உபயோகமான சாமான்கள் செய்துகொள்ளலாம். இம்மாதிரி ட்டு துண்டுகள் இருக்குமானால் ஒரு புஷ்பம்போல் செய்து கொள்ளலாம். 1'' முதல் 2 அங்குலம் குறுக்கு அளவுள்ள 8, 9 வொவ்வொரு விதமான வட்டமான துண்டுகள் கத்தரித்துக்கொள். அவைகளை பெரியதை அடியில் வைத்து அதன்மீது பாக்கித் துண்டுகளை படிப்படியாய் அடுக்கினதுபோல் வை. கடைசியில் மிகச்சிறி துண்டையவை. (படம் 10 பார்க்கவும்). நடுமத்தியில் கொஞ்சம் சரிகைவைத்து எல்லாவற்றையும் சேர்த்துத் தைத்துவிடு. இதற்கும் அடியில் ஒரு கொண்டை ஊசி கொடுத்து உன் தலையில் அணிந்து கொள்.

*(All Rights Reserved.)* K. S.

# செய்தித் திரட்டு

## இலுப்பூர்

தி. தா. இலுப்பூர் ஆரம்ப ஆசிரிய சங்கத்தின் கூட்டம் 29-1-38ல் பிற்பகல் 2 மணிக்கு சங்கத்தின் வைஸ்பிரஸிடெண்டு கனம் S. வீராசாமி பத்தர் M.A.L.T. அவர்கள் தலைமையில் கூடிற்று. திரு. K. ராஜகோபாலாச்சாரியார், வாசகம், தாவரம் என்ற மாதிரிப்பாடத்தை நான்காம் வகுப்பிற்கு கற்பித்தார். திரு. S. கிருஷ்ணய்யர், ஆறுமுக சோழத்திரியர், M.A. தாமஸ் ஜோஸப் ராஜ்லிம்ஸன் ஆகிய நால்வரும் ஏக ஆசிரிய பாடசாலையும் அதன் பிரச்னைகளும் என்பதைப்பற்றி உபன்யாசித்தார்கள்.

தலைவரவர்களின் முடிவுரையில் வாசகபாடம் நடித்தும் முறையைப்பற்றியும் ஏக ஆசிரிய பாடசாலையும் அதன் பிரச்னைகளும் என்பதைப்பற்றியும் நீண்டநேரம் பேசினார்கள்

ஷை பிரச்னையின் சாராம்சம் கீழ்வருமாறு.

(1) ஒரு ஆசிரியர் 4, 5, வகுப்புகளை நடத்தவேண்டிஇருக்கிறது. அதிலும் முதல்வகுப்பில் 2, 3, பிரிவுகளிருப்பதால் ஆசிரியருக்கு சிரமம் ஏற்படுகிறது.

(2) 5 வகுப்புகளுக்கு 5 உபாத்தியாயர்கள் இருக்கும் பாடசாலையில் வைத்திருக்கும் பாட அட்டவணைக்கும் ஏக ஆசிரியர் பாடசாலையில் வைத்திருக்கும் பாடஅட்டவணைக்கும் வித்தியாச மிருக்கவேண்டிய தவசியமாகும். பாடஅட்டவணையை எவ்வாறு தகுந்தபடி குறைத்துக் கொள்ளலாம் என்பதை சங்கமூலம் பரீக்ஷித்து நிர்ணயிப்பது நலமாகும்.

(3) ஒரு உபாத்தியாயர் ஏக காலத்தில் பல வகுப்புகளுக்கு பல பாடங்களை நடத்துவதற்கு போதனாமுறை பாடசாலையில் பயிற்சி கொடுக்கவேண்டும். பழையகாலத்து கணக்காயர்கள் திண்ணைப் பள்ளியில் கையாண்டமுறைகளில் குணங்களைமட்டும் கிரகித்து சந்தர்ப்பத்திற்கேற்ற சட்டாம் பிள்ளையின் உதவியினால் மற்றமாணவர்களுக்கு கல்வி கற்பிக்கச் செய்யலாம்.

(4) ஒரு ஆசிரியருக்கு மேற்கண்ட கஷ்டங்களுடன் பலவிதமான ரிஜிஸ்டர்கள் தயாரித்து வைப்பதும், பள்ளிக்கூட உபகரணங்கள தயாரிப்பதும் பிள்ளைகளின் பெற்றோர்களைக் கண்டுபேசி பிள்ளைகளை பள்ளிக்கு வரச்செய்வதுமான முக்கிய பொருப்புவாய்ந்த அலுவல்களும் இருக்கின்றன.

தலைவரவர்கள் அடுத்த விஷயமாக முக்கியமான சர்குலர்களைப் பற்றியும் சங்கத்தின் அபிவிர்த்தியைப்பற்றியும் எடுத்துக்கூறிய தொன்று.

(2) (1) பூங்கொத்து (2) பாலர்கல்வி, ஆகிய இரண்டு பத்திரிகைகளையும் சந்தாத்துகையிலிருந்து வரவழைக்க ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டதை தீர்மானிக்கப்பட்டது மற்றொன்று.

(3) அடுத்த மாதத்தின் வியாசத்திற்கிணங்க முன்னாடியே தகுந்ததோரிடத்திற்கு உல்லாசப் பிரயாணம் போக தீர்மானிக்கப்பட்டது. பிறிதொன்று ராஜவாழ்த்தின்பின் திரு. V. K. ராதாகிருஷ்ண நாயுடு வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

# பத்திராதிபர் குறிப்பு

## வேலை நிறுத்தம்

மலையாளம் ஜில்லாவில் ஆரம்ப ஆசிரியர்கள் வேலை நிறுத்த முறையை அனுஷ்டித்துத் தம்முடைய கஷ்டங்களை நீக்கிக்கொள்ள நினைப்பதாகப் பத்திரிகைகளில் பார்க்கிறோம். மாகாண மெங்கும், பல உதவிப் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆரம்ப ஆசிரியர்கள் அநேக கஷ்டங்களை அநுபவித்து வருவது அதிகாரிகளுக்கும் தலைவர்களுக்கும் தெரிந்த விஷயமே. சம்பளம் மிகக் குறைவென்பார் சிலர். சம்பளத்தில் பிடித்தம் அதிகமெனச் சொல்வார் சிலர். சம்பளம் கொடுப்பதில்லையே யென்றும் கூறுவோர் சிலர். டீசர் மானேஜர்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் பள்ளிக்கூடங்களில் பல, ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்யக்கூடுமாவென்று அதிகாரிகளும் தலைவர்களும் கவனித்தல் அவசிய மல்லவா? ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமையை நாம் நன்கு யறிந்திருப்பதாக நமது கல்வி மந்திரி சுற்றுப்பிரயாணங்களில் சொல்லுகிறார்கள். தாம் மிகவும் வருந்துவதாயும் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். அநுதாபத்தைக் காட்டுவதோடு நின்று விடுதல் நிர்வாகக் கடமையை ஏற்றுக் கொண்டவர்களுக்குச் சரியல்ல. எவ்விதக் கஷ்ட மிருந்தாலும் கல்வியின் முன்னேற்றத்தை யெண்ணி ஆசிரியர்கள் உழைக்காத போனால் அவர்கள் கடமையைச் செய்யவில்லை யென்றே நினைக்கப்படுவார்களென்று அடிக்கடி அதிகாரிகள் அழுத்தமாய்க் கூறுகிறார்கள். கல்வி முன்னேற்றத்திற்கு இடையூறா யிருக்கும் குறைகளை நீக்குவது அதிகாரிகளின் கடமை யல்லவா? பல ஆண்டுகளாக இக் குறைகளிருந்து வருவது ஆச்சரியமல்லவா? எக்காலம் தமது துயரம் நீங்குமென ஆசிரியர்கள் கவலையுற்றிருக்கிறார்கள். அதிகாரிகளும் தலைவர்களும் ஏதும் செய்ய முடியாதென்னும் கொள்கை பரவி விட்டால் கல்வி முன்னேற்ற மடையாது. டீசர் மானேஜர்களுடன் கலந்துகொண்டு ஏற்பாட்டைச் செய்வது மிகவும் அவசியம். கவனித்துவருகிறோமென்று வாய் வார்த்தை வழங்கி வருவது ஆசிரியர்களுக்கு நம்பிக்கையை யுண்டுபண்ணாது. வேலை நிறுத்தக் கொள்கைச் சரியானதா வென்று இச்சமயம் விசாரித்தல் அவசியமாகாது. இத்தகைய நிலைமை ஏற்படக்கூடாதென்று யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். வேலைநிறுத்தக் கொள்கைப் பரவி வேரூன்றுமுன், ஆசிரியர்களின் ஸர்வீஸ் சம்பந்தமான முக்கிய விதிகளை மாகாணக் கல்வி விதிகளில் சேர்த்தல் கல்வி மந்திரியின் முதற்கடமையாகும். நமது முதல் மந்திரி அவர்கள் மாகாண விவசாயிகளின் கஷ்டத்தை நீக்கினார்கள். ஏழை விவசாயிகளைப் போன்றே பல வருடங்களாகக் கஷ்டப்பட்டுவரும் பல ஆரம்ப ஆசிரியர்களின் குறைகளையும் நீக்குவதில் தமது கவனத்தைச் சற்றுச் செலுத்துமாறு முதல் மந்திரியை நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## வர்தா அறிக்கை

இந்த இதழில் வர்தாக் கல்வி அறிக்கையின் முக்கிய கொள்கைகளை நமது நேயர்கள் காணலாம். அறிக்கையோ விஷயம் தெரிந்த

பெரியோர்களும் அநுபவ முள்ளவர்களும் தயாரித்தது. இதிலடங்கியுள்ள தொள்கைகளிற் சில தற்கால வழக்கத்திற்கு விரோதமா யிருப்பதாகத் தோன்றலாம். தற்கால கல்வி முறையைச் சரியானதென்று எவரும் ஒப்புக்கொள்ளவில்லை. சர்க்கார் அறிக்கைகளிலும், தலைவர்களின் சொற்பொழிவுகளிலும் தற்கால கல்வி முறையில் பல பெரிய குறைகள் இருப்பதாக வெளியிடப்பட்டிருக்கின்றது. குறைகளை நீக்கிச் சரியான முறைகளைக் கையாளுவது அவசியம். பெற்றோர்கள் வேண்டுவதென்ன? தலைவர்கள் வேண்டுவதென்ன? அதிகாரிகள் வேண்டுவதென்ன? நன்னடத்தையுள்ளவர்களாகவும் நல்ல விஷயங்களைத் தெரிந்தவர்களாகவும், திடமான தேகத்தையுடையவர்களாகவும், வாழ்க்கைக்கு வேண்டிய பணத்தைச் சம்பாதிக்கக் கூடியவர்களாகவும், குழந்தைகளைப் பழக்குவது பள்ளிக்கூடத்தின் நோக்கமென்று எல்லோரும் இப்போது நினைக்கிறார்கள். தற்சமயம் படிப்புத் திட்டத்தில் தானே உழைத்துச் சம்பாதிக்கக் கூடிய பழக்கமில்லை. இனிமேல் பிறரை அண்டிப் பிழைப்பதை மேலாகக் கருதாது சுய முயற்சியினாலேயே தமக்கு வேண்டியதைச் சம்பாதிக்கும் வழியில் சிறுவர்கள் பழக்கப்படுதல் சரியாகும். வர்தாக் கல்வித் திட்டத்தில் இந்நோக்கத்தின் அவசியத்தை விளக்கியிருக்கிறார்கள். பெற்றோர்கள் வர்தாக் கல்வி முறையின் உண்மையை அறிந்தாலொழிய சீர்திருத்தம் ஏற்படுவது கடினம். இப்போதுள்ள பள்ளிக்கூடங்களின் நோக்கம் மாறிச் சரியான வழியில் குழந்தைகளைப் பழக்குவதற்கு பெற்றோர்களின் ஒத்துழைப்பு அவசியம். தற்கால நோக்கத்தில் மாறுதல் வேண்டுமாவென்றும், புத்தகப் படிப்புடன் தொழிற் பயிற்சியும் அவசியமாவென்றும் ஆசிரியர்கள் கவனிக்கவேண்டும். தற்காலக்கொள்கையைக் கைவிடாது பழையபடியே செல்வதாலுண்டாகும் குறைகளையும் ஆசிரியர்கள் மறக்கக்கூடாது. தேசத்தினுடையவும் குழந்தைகளினுடையவும் முன்னேற்றத்திற்குரியதான நோக்கத்தையும் முறையையும் ஆசிரியர்கள் ஆதரிக்கவேண்டும். சரியான வழியை தெளிவாய் ஆங்காங்குள்ளப் பெற்றோர்களுக்கு விளக்குவதும் ஆசிரியர்களின் கடமை. வர்தா நோக்கப்படிப் பள்ளிக்கூடங்கள் நடப்பதற்கு ஆசிரியர்கள் உற்சாகத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்லாமலே விளங்கும். பல புதிய விஷயங்களையும் போதனை முறைகளையும் அவர்கள் அறிந்துகொள்ளத் தயாராயிருக்கவேண்டும். சுய மதிப்பையும் சுயமரியாதையையும் விடாது தேசத்தொண்டு செய்யும் காலம் இதுவே. ஊக்கத்துடன் தம்மாலியன்றமட்டும் உழைப்பின் ஆசிரியர் கூட்டத்திற்கே மதிப்புண்டாகும். வர்தா அறிக்கை சம்பந்தமாய் தம்முடைய அபிப்பிராயத்தை ஆசிரியர்கள் பாலர் கல்வியில் தெரிவிப்பது நலம். மேலும் மங்களூரில் கூடப்போகும் மாகாணக் கல்வி மகாநாட்டில் இப்போதுள்ளப் பள்ளிக்கூடங்களை வர்தா நோக்கத்திற்கேற்றபடி மாற்றுவதற்கான உபாயங்களைத் தெரிவிப்பார்களென்று நம்புகிறோம்.

ஆவணக்காப்பக
147646.

# பாலர் கல்வி

தொகுதி 2 | 1938 ஞு மார்ச்சு மீ<br>ஈஸ்வர ஞு மாசி மீ | பகுதி 11

## பள்ளிக்கூடமும், வீடும், சமூகமும்

நமது நாடு முன்னேற்ற மடைவதற்குக் கல்விதான் மிகவும் அவசியம் என்று அறிஞர் பலர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். ஆனால் பணம் அவசியமில்லையா? தொழில் அவசியமில்லையா? என்று பலவித கேள்விகளைச் சிலர் கிளப்பலாம். இவை எல்லாம் அவசியமாகவேண்டியவை என்பதிற் சிறிதும் சந்தேகம் இல்லை. பல வகை சம்பத்துக்களும் இருக்க வேண்டுமானாலும், கல்விதான் நாட்டின் உயிர் நிலை. கல்வியின் மூலமாகத் தான் மற்ற நலன்களெல்லாம் மேம்படுவது சாத்தியமாகும்.

இன்னும் இருபது முப்பது வருஷங்கள் கழித்து நமது நாடு இருக்கப்போகும் நிலைமையைப்பற்றி யோசிப்போமானால் இவ் விஷயத்தின் உண்மை நன்கு புலனாகும். தற்காலம் நமது பள்ளிக்கூடங்களில் படித்து வரும் சிறுவர்களும் சிறுமிகளும், இன்னும் இருபது முப்பது வருஷங்களில் பெரியவர்களாக வளர்ந்து நாட்டின் பல துறைகளில் இறங்கி வாழ்க்கை நடத்திவருவார்கள். புது புது தொழில்களை ஆரம்பித்து நாட்டின் செல்வத்தை விருத்தி செய்யக்கூடியவர் அவர்களே. இந்நாளில் நம்மால் தொடங்கப்பட்டு நடந்துவரும் பலவித இயக்கங்களை நடத்தக்கூடியவர் அவர்களே. தேசத்தில் உள்ள பல சுரங்கங்களை வெட்டுவதும், எட்டு திசைகளிலும் சென்று வியாபாரம்செய்து நாட்டின் ஐச்வரியத்தைப் பெருக்குவதும் அவர்களே. காவியம் செய்வதும், கலை வளர்ப்பதும், அவர்களே. இந்நாட்டிற்கு சீரும் சிறப்பும், பேரும் பெருமையும் உண்டாக்க வல்லவரும் அவர்களே.

இவ்வாறு பலவிதமான பொறுப்புகளை வகித்து நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைக்கக்கூடிய பிரஜைகளை உண்டாக்குவதற்குத்தான் நாம் நமது பள்ளிக்கூடங்களில் சிறுவர்களை முக்கியமாகப் பயிற்சிசெய்து வருகிறோம். அவ்வித பயிற்சி சரியான பலனளிக்கவேண்டி பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் சிறு குழந்தைகளின் பெற்றோருடன் பழகி, வீட்டு [illegible]

147246
சென்னை-600 008



மை[illegible] அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். ஏனெனில், குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வரும்போதே சில பழக்க வழக்கங்களுடனும், விருப்பு வெறுப்புகளுடனும் வருகின்றன. பள்ளிக்கூடத்தில் தினந்தோறும் சுமார் ஐந்து அல்லது ஆறு மணி நேரம் இருக்கும்போது இன்னும் சில பழக்கங்களை செய்துகொள்ளுகின்றன. இவையன்றி, குழந்தைகளின் தேகஸ்திதி வீட்டு நிலைமையைப் பொருத்து நிற்கும்; ஆகையினால் உபாத்தியாயர்கள் தமது பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் குழந்தைகளின் வீட்டு ஸ்திதியையும், பெற்றோர்களின் நிலைமையையும் தெரிந்துக்கொள்ளப் பிரயத்தினப்பட வேண்டும்.

குழந்தை பள்ளிக்கூடத்திற்குப் போக ஆரம்பிக்குமுன் வீட்டில் தாய் தந்தையரின் மேல்பார்வையில் வளர்ந்து வருகின்றதல்லவா? பெற்றோர் படித்தவராயிருப்பின் குழந்தைக்கும் படிப்பில் ஒருவிதமான ஆசை ஏற்பட்டிருக்கும். புத்தகங்களைப் பார்த்திருக்கலாம். தன் சகோதர சகோதரிகள் படிப்பதைப் பார்த்துத் தாமும் படிக்கவேண்டுமென்னும் ஆவல் கொண்டிருக்கலாம். ஆனால் கிராமங்களில் தற்காலத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் வெகு சொல்பமாகையால், ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் வந்து படிக்கும் சிறு குழந்தைகள் பலதிறப்பட்ட குடும்பங்களிலிருந்து வந்திருக்கும். அக் குழந்தைகளின் குடும்பங்களின் நிலைமை உபாத்தியாயருக்குத் தெரிந்திருந்தால், சமயோசிதமாக பயிற்சி முறைகளைக் கையாண்டு அவர்களுக்கு படிப்பில் உற்சாகத்தை உண்டாக்குவது சாத்தியமாகும்.

சிற்சில குடும்பங்களில் குழந்தைகளுக்கு அதிக செல்லங்கொடுத்து பிடிவாத குணத்தை உண்டாக்கி யிருக்கலாம். சில குடும்பங்களில் குழந்தைகளைப் பெற்றோர் கவனிப்பதற்கே ஒழிவின்றி யிருக்கும். சில குழந்தைகள் புஷ்டியுள்ள ஆகாரமின்றி சோர்வுற்றிருக்கலாம். இன்னோரன்ன பலவித குறைபாடுகளை உபாத்தியாயர் உணர்ந்து கொண்டால், பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை அறிந்து தகுந்த விதமாக கல்வி போதிக்க முடியும்.

ஆரம்பத்தில் குழந்தைகளுக்குக் கிடைக்கும் பயிற்சி அவரவர்கள் குடும்பத்திலிருந்துதான் வருகிறது. வீட்டில்தான் ஒழுக்கமும், நல்ல குணங்களும், சுசியாக இருக்கவேண்டுமென்ற ஆசையும், பலவித பழக்கங்களும் உண்டாகின்றன என்று சொல்லவேண்டியதில்லை. தாய் தந்தையர் கெட்ட வார்த்தைகளை பேசும் பழக்கத்திலிருந்தால், குழந்தை கெட்டவார்த்தைகளைக் கற்றுக்கொள்ளுகின்றன. தாய் தந்தையர் தமது பெற்றோர்களை நடத்தும் விதத்தையும், வேலைக்காரர் முதலியவர்களை நடத்தும் விதத்தையும், தினமும் கவனித்துவரும் குழந்தைகள் தாமும் அப் பழக்கத்தையே பெறுகின்றன. அதிதிகளை உபசரிப்பதும், மாடு கன்று முதலியவைகளை பாதுகாப்பதும், நல்வார்த்தை பேசுவதும் ஆகிய நல்ல பழக்கங்களை பெற்றோரையும் தமது சுற்றத்தாரையும் பார்த்துத் தான் குழந்தைகள் கற்றுக்கொள்ளுகின்றன.



மேலும், சிறு குழந்தைகளின் குணவிசேஷங்களை அறிந்த உபாத்தியாயர், அந்தந்தக் குழந்தைக்கு எந்த விஷயங்களில் அதிக ஆசையிருக்கிறதோ அந்த விஷயங்களில் மனதைச் செலுத்தி உற்சாகத்துடன் கல்வி கற்பதற்கு வேண்டிய உதவி செய்ய முடியும்.

ஆகையினால் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் உள்ள உபாத்தியாயர்கள் தத்தம் வகுப்புகளில் படிக்கும் பிள்ளைகளைப்பற்றி தெரிந்துக் கொள்ளவேண்டிய விஷயங்களில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறோம்.

## குழந்தைகளின் வீட்டு நிலைமை என்ன?

எவ்வளவுபேர் கூடப்பிறந்தவர்; பெற்றோர்களின் தொழில்; குடும்பத்திலுள்ளவருக்கு எந்த எந்த விஷயங்களில் அதிக ஆர்வம் உண்டு; குழந்தை எவ்வளவுதூரம் பிரயாணம் செய்து வெளியூர்களை பார்த்திருக்கிறது; வீட்டிலோ, அல்லது வீட்டினருகிலோ குழந்தைக்கு விளையாடுவதற்கு சௌகரியம் உண்டா; குழந்தைக்கு பொம்மை, படம் முதலிய விளையாட்டு சாமான்கள் கிடைக்கின்றனவா, செல்லக்குழந்தையா; கவனிப்பாரின்றி இருக்கிறதா; வீட்டில் வேலைக்காரர்கள் முதலியோர் உண்டா; முதலிய விஷயங்கள்.

## தேகஸ்திதி

குழந்தைக்கு வியாதி ஏதாவது உண்டா; வியாதியினால் அதன் மனோ நிலைமை, தேக நிலைமை முதலியன எப்படி யிருக்கின்றன என்பது; காது கேட்கிறதா, பார்வை எப்படி இருக்கிறது; பேசும்போது இயற்கையாக இருக்கிறதா; குழந்தையின் ஆரோக்கியத்தை விருத்திசெய்யும் பழக்கங்கள் என்ன—எப்பொழுது தூங்கும் வழக்கம்—கண், காது, மூக்கு, மயிர் முதலியன சுத்தமாக வைத்துக்கொண்டிருக்கிறதா; என்னும் விஷயங்கள்.

## பொதுவான சில குணங்கள்

குழந்தை ஆழ்ந்த யோசனை செய்யும் ஆற்றல் உடையதா; கற்பனாசக்தியில் மிகுந்ததா; மனோ சக்தி எப்படி யிருக்கிறது; சம்பாஷிப்பதில் சாமர்த்தியம் உண்டா; விஷயங்களைத் தெரிந்துக்கொள்ளவேண்டுமென்னும் விருப்பம் அதிகம் உண்டா, கவன சக்தி எப்படி; வேலை செய்வதில் கண்ணுங்கருத்துமாக இருக்கிறதா, என்பனபோன்ற விஷயங்கள்.

## குண விசேஷங்கள்

நாலு பிள்ளைகளுடன் பழகுவதற்கு ஆசை யுண்டா, அல்லது தனியே இருக்கப் பிரியமா; எடுத்த வேலையை கருத்துடன் முடிக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறதா; மரியாதை, பொறுப்பு முதலியன உண்டா; பொய் சொல்லக்கூடிய குணமா; குழந்தைகளுக்குள் தலைமை வகித்து காரியம் நடத்துவதில் சக்தியுண்டா; மற்றொருவருடைய சுக துக்கங்களை பொருட்படுத்தும் குணமுண்டா; பிறருக்குதவி செய்யும் வழக்கமுண்டா; முதலிய குண விசேஷங்கள்.

JL
T15 m21, N36A 37.2.9

குழந்தைகளுக்கு எந்த விளையாட்டில் பிரியம் அதிகம், எந்த மாதிரிக் கதைகளைக் கேட்பதில் ஆசை அதிகம், எவ்வித கைவேலையில் சக்தியுண்டு என்பன போன்ற முக்கியமான விஷயங்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட பல விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து குழந்தைகளின் குண விசேஷங்களையும், பழக்க வழக்கங்களையும் தெரிந்துக்கொண்டால்தான் பள்ளிக்கூடத்தில் குழந்தைகளின் கல்வி அபிவிருத்தியை கவனிக்க முடியும். உபாத்தியாயர் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது, பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்ளும் விஷயங்களுக்கும், வீட்டு நிலைமைக்கும், சமூக வாழ்க்கைக்கும் ஒருவித சம்பந்தம் இருக்கவேண்டும். ஒன்றுடன் மற்றொன்று முரண்பட்டு நிற்றல் கூடாது. வீட்டில் கடவுள் வழிபாடு, பக்தி, சிரத்தை உண்டாவதா யிருந்தால், பள்ளிக்கூடத்தில் அக்குணங்கள் ஸ்திரப்படுத்தப்பட்டு, மேன்மைபெற வேண்டும். தமது வீட்டில் தப்பான துர் வழக்கம் உண்டாவதாக இருந்தால், பள்ளிக்கூடத்தில் செய்யப்படும் சன்மார்க்க போதனையினால் அவைகள் மாற்றப்பட வேண்டும். சமூகத்திற்கும் தேசத்திற்கும் நலனளிக்கக்கூடிய சில சிறந்த குணங்களையும், நோக்கங்களையும் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடத்தில் கற்பித்து, நமது தேசத்தின் மீதும், பாஷையின் மீதும், நாகரீகத்தின் மீதும் பக்தி யுண்டாகும்படிச் செய்ய வேண்டும்.

பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் தமது குழந்தைகளின் பெற்றோர்களை அடிக்கடி சந்திப்பதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். பள்ளிக் கூடத்தில் தமது குழந்தைகளை எவ்விதம் பயிற்சி செய்கிறார்கள் என்பது பெற்றோர்கள் அறிந்துக் கொள்வது அவசியம். பெற்றோர்கள் அடிக்கடி பள்ளிக்கூடத்திற்கு வந்து பார்வையிடுவதற்காக பஜனைகள், விழாக்கள், கூட்டங்கள் முதலியன குழந்தைகளை கொண்டே நடத்தப்பட வேண்டும். வருஷத்திற்கு ஒரு முறையாவது எல்லாப் பெற்றோர்களும் வந்து பள்ளிக்கூடத்தின் அபிவிருத்தியைப் பற்றி அறிந்துக் கொள்ளுவதற்காக வருஷாந்திரக் கொண்டாட்டம் நடைபெற வேண்டும்.

பல பெற்றோர்களுடைய குடும்பங்கள் சேர்ந்துதான் **சமூகம்** என்பது ஏற்படுகிறது. ஆகையினால் பெற்றோர்களுடைய கூட்டுறவு இல்லாமல் சமூகத்தின் கூட்டுறவு பெறுவது சாத்தியமல்ல. சமூகம் முழுவதிலும் புதிய விஷயங்களைப் பற்றியும், புது புது லக்ஷியங்களைப் பற்றியும் அறிவு பரவவேண்டு மானால் பெற்றோர்களை பள்ளிக்கூடங்களுக்கு வரச் செய்ய தகுந்த முறைகளைக் கையாள வேண்டும். கிராமங்களை சீர்திருத்த வேண்டுமென்று சொல்லாத தலைவர்கள் இக்காலத்தில் இல்லை. அரசாங்கமும் கிராம சீர்த்திருத்தத்திற்காக பணம் செலவு செய்ய முன் வந்திருக்கிறது. கிராமம் சீர்பட வேண்டுமானால் கிராமவாசிகளின் உதவியும் கூட்டுறவும் அவசியம் வேண்டும். ஆரம்ப உபாத்தியாயர்களை விட இப்பெரிய பணியை நன்றாக நடத்தக்கூடியவர் கிராமங்களில் யாருமில்லை.



ஆகையால் கிராமவாசிகள் உபாத்தியாயர்களுடன் பழகி, கிராமத்தின் தேவைகளை யறிந்துகொண்டு நல்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய முறைகளை கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் கடைப்பிடித்து கிராம முன்னேற்ற வேலையைச் செய்ய வேண்டும்.

சமூக வாழ்வை சீர்ப்படுத்தி கிராமங்களுக்குப் புத்துயிர் கொடுப்பதற்காக சில முறைகள் சிற்சில நாடுகளில் உபாத்தியாயர்களால் கையாளப்பட்டு வருகின்றன. அம்முறைகளைப்பற்றி உபாத்தியாயர்கள் தெரிந்துக் கொண்டு, தமது கிராமங்களுக்குத் தகுந்தவாறு அவைகளை மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக, பள்ளிக்கூடத்தில் வாரமொருமுறை புராணம், ஹரிகதை, பிரசங்கம் முதலியவைகளுக்கு ஏற்பாடு செய்து கிராம வாசிகள் அனைவரும் அழைக்கப்பட வேண்டும். விஷயங்களை தெளிவாக, கிராம வாசிகளுக்கு நன்றாக புரியுமாறு எடுத்துச் சொல்லவேண்டும். அடிக்கடி பஜனைகளும் நடத்தலாம்; தெருக்கூத்து, நாடகம், கிராம தேவதைகளுக்கு உற்சவம் முதலியன நடக்கும்போது உபாத்தியாயர்களும் கிராமவாசிகளுடன் கலந்துக் கொண்டு, பள்ளிக்கூடத்தை முக்கியமாக சந்திக்குமிடமாக செய்துக் கொள்ளலாம். கிராமத்தில் பஞ்சாயத்து, கூட்டுறவுச் சங்கம் முதலியன இருப்பின் இவைகள் பள்ளிக்கூடத்திலேயே கூடலாம். யாராவது அரசாங்க அதிகாரிகள் வந்தால் அவர்களை பள்ளிக்கூடத்தில் இருக்கச் செய்து கிராம வாசிகளை வரவழைத்து பிரசங்கங்கள் செய்யும்படி கேட்டுக் கொள்ளலாம். கிராமப் பள்ளிக்கூடத்தில் ஒரு புத்தகசாலை யிருப்பின், அதை கிராமவாசிகள் உபயோகிப்பதற்கு சதிகள் செய்யலாம். தினசரிப் பத்திரிகைகள், மாதந்திரப் பத்திரிகைகள் முதலியன வரவழைத்து பள்ளிக்கூடத்தில் ஒரு வாசகசாலை ஏற்படுத்தலாம். இவ்விதமான பலமுறைகளால் கிராமவாசிகளை அடிக்கடி பள்ளிக்கூடத்திற்கு வரவழைத்து, உலக விஷயங்களைப் பற்றியும் கிராம முன்னேற்றத்தைப் பற்றியும் முக்கியமான விஷயங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி கிராம சீர்திருத்தவேலை தொடங்கலாம்.

மேலே சொன்ன சில விஷயங்களிலிருந்து கிராமப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் எந்த வழிகளில் தாம் கிராமவாசிகளுக்கும் கிராமச் சிறுவர்களுக்கும் உபயோகமாக இருக்கலாம் என்று தெரிந்து கொள்ளுவதுசாத்தியமாகும்.

உடல் பொருள் உயிர் ஒன்றையும் பொருட்படுத்தாமல் சமூகத்தின் நன்மைக்காக உழைக்கும் ஆற்றலுள்ள வகுப்பார் உபாத்தியாயர்கள் தான் என்று தைரியமாகச் சொல்லலாம். அவர்கள் தமது கடமைகளைச் சரிவர செய்வார்களானால், ஒவ்வொரு கிராமமும் புத்துயிர் பெற்று கூடிய சீக்கிரத்தில் புதிய இந்திய சமூகம் நிர்மாணமாகிவிடும் என்று நம்புகிறோம். உபாத்தியாயர்களும் நல்வாழ்க்கை இனிது நடத்துவதற்கும், கௌரவமாகக் காலங்கழிப்பதற்கும், வேண்டிய வசதிகளை அரசாங்கத்தார் செய்வார்கள் என்றும் நம்புகிறோம்.

# நவீன பேர்தனாமுறை; ஓர் எதிர்ப்பு

(பி. சுப்பரமணிய அய்யர், தியாகராயநகர்)

254-ம் பக்கம் தொடர்ச்சி

“ஒன்றேசெய்க; அதையும் நன்றேசெய்க” என்பதற்கிணங்க மேற்கொண்ட நோக்கத்தைச் செவ்வனே நிறைவேற்றிய பிறகு கவனத்தை வேறுவழி செலுத்துதலே செயற்பாலதாம். படிப்பதன் முக்கிய நோக்கம் விஷயங்களை கிரகிப்பதே என்று இக்காலத்தில் கருதப்படுகிறது. குழந்தைகள் பிழை நீக்கி எழுதவும் படிக்கவும் கற்ற பிறகு இந்நோக்கத்தை மேற்கொள்வதில் யாதொரு பிசகும் இல்லை. ஆனால் இந்த விவரம் உணராதவர்கள் இந்நோக்கத்தை எழுத்துகள் கற்பிக்குங் காலம் தொடங்கியே கருத்திற்கொள்ள முற்படுகிறார்கள். முதல் முதலில் பிழைஅற எழுதவும்படிக்கவும் கற்றுக்கொடுப்பதாகிய நோக்கத்தில் முழு கவனத்தையும் செலுத்தவேண்டும். இதனால் இவ்வயதில் குழந்தைகள் விஷயக்கிராகியம் செய்யவேண்டியதில்லை என்று நான் சொல்லவில்லை. இயற்கைக் காட்சிகளை நேரில் பார்ப்பதன் மூலமும், விஷயங்களைக் கேட்பதன் மூலமும், சிற்சில காரியங்களைச் செய்வதன் மூலமும் குழந்தைகள் விஷயக்கிராகியம் செய்யவேண்டுமே தவிர அச்சுப் புத்தகத்தின் மூலம் அறிவு சம்பாதிக்க மிக இளம் வயதில் முயல்வது நன்றன்று என்பது என் அபிப்பிராயம்.

தவிர படங்களைக் காட்டி அவைகளின் கீழ் உள்ள மொழிகளைச் சொல்லும்படி செய்து வருவதால் எழுத்துகளின் உதவிகொண்டு மொழியை நிர்ணயம் செய்யாது படத்தின் உதவி கொண்டே குழந்தைகள் மொழியை நிர்ணயிக்கிறார்கள். மொழிகளின் முதலில் உள்ள சில எழுத்துக்களைக் கண்டதுமே மற்ற எழுத்துக்களை ஊன்றிக் கவனிக்க பொருமை இழந்தவர்களாய் ஊகத்தினாலேயே அம்மொழிகளைப் படிக்கும் துர்ப்பழக்கத்தைக் குழந்தைகள் அடைகிறார்கள்.

உதாரணமாக, எள் செடியின் படமும் அதன்கீழ் “எள்” என்ற வார்த்தையும் ஒரு புத்தகத்தில் காணப்பட்டது. அதைப் பார்த்ததும் ஒரு குழந்தை மரம் என்று சொல்லி, கீழ் இருந்த வார்த்தையைத் தான் படித்துவிட்டதாக கருதிற்று. எழுத்துக்களை ஐயமற உணர்ந்தபின்பே படிக்கவேண்டும். தெரிந்த எழுத்துக்களாலாகிய மொழிகளையே படிக்க குழந்தைகள் முயலவேண்டும். தெரியாத எழுத்துக்களைக் காண நேரிட்டால் தெரியவில்லை என்று, ஆசிரியர் உதவி கிடைக்கும் வரையில் அவ்விடத்திலேயே குழந்தைகள் நின்றுவிடவேண்டும். ஊகித்துச் சொல்லு



தற்கு இடமே இருக்கக் கூடாது. உபாத்தியாயர்களும் அப்படிச் செய்வதற்கு இடம் தரக்கூடாது.

குழந்தைகளை யுற்சாகப் படுத்தவேண்டுமானால், படத்தையும் கற்கப்படும் மொழிகளையும் பிணைத்து வைக்கவேண்டுமென்று ஒரு நிபந்தனையுண்டோ? சில எழுத்துக்களையும் மொழிகளையும் தனியே சிறிது பிரயாசையுடனே யாயினும் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் பயின்ற பிறகு அரைமணி நேரமோ, அதற்கு அதிக காலமோ, அழகான படங்களைப் பார்த்துக் கொண்டிருந்து சம்பாஷித்துக் களிப்பெய்தலாம். இப்படிச் செய்தால் குழந்தைகள், படிக்கும் கஷ்டத்தை ஏற்றுக்கொள்ள முன்வர மாட்டார்கள் என்றும், கஷ்டத்தை ஏற்றுக் கொள்வதற்கு அவசியமாக இருக்கும் தூண்டுகோல் இல்லாமற்போய் விடுமென்றும் சிலர் சொல்லலாம். இது வீண்வாதம் என்று நான் சொல்வேன்.

எப்படிப்பட்ட காரியங்களுக்கும் சில தூண்டுகோல்கள் நீக்கமற இருப்பதை நாம் கவனித்தல் வேண்டும்.

(1) உபாத்தியாயர், பெற்றோர் இவர்களுடைய முகமலர்ச்சியைப் பெற உண்டாகும் விருப்பமும், (2) தன்னைப் பிறர், பிற குழந்தைகள் உட்பட, மெச்ச வேண்டு மென்று தோன்றும் விருப்பமும் (3) எடுத்த காரியத்தை வெற்றியோடு முடித்தோம் என்று நினைக்குந் தோறும் எழுகின்ற சந்தோஷத்தை மீண்டும் மீண்டும் பெற உண்டாகும் விருப்பமும் (4) பரிசுகளை பெறவும் தண்டனைகளை அடையாதிருக்கவும் உண்டாகும் விருப்பமும், எவ்வித தொழிலைத் தொடங்கவும் போதிய தூண்டுகோல்களாக இருப்பதை நாம் காண்கிறோம் அல்லவா?

“படங்காட்டி போதித்தல்” என்றமுறை, கையாளப்படும்போது (1) எழுத்துக்கள் பிரதானத்தை இழக்கின்றன (2) குழந்தைகளின் புத்தி விஷயத்தை நாடி அதன் பின்னே செல்லத் தொடங்குகிறது (3) உபாத்தியாயரும் விஷயங்களைப்பற்றியே பேச ஆரம்பித்து விடுகிறார் (4) நிதானமும் எழுத்துக்களில் முழுகவனம் செலுத்தும் பழக்கமும் இல்லாமல் வார்த்தைகளை ஊகத்தினால் படிக்க இடம் இருக்கிறது. இவ்வித காரணங்களினாலே இம்முறை அநேக குறைபாடுகளோடு கூடியதென்று சொல்லுவதே தகுதி உடைத்தாம்.

# அமுதின் சரிதம் - பாட்டு

### ராகம்—புன்னாகவராளி, தாளம்—ஆதி.

### "ஆடுபாம்பே" என்ற வர்ணமெட்டு

1. அறிகுவமே அறிகுவமே
அமுதின் சரிதமதை யறிகுவமே.

2. நிலம் உழுது நன்கு நீர் வார்த்துப்
பரம்படித்துப் பல பண்படுத்தி.

3. பலவித நெல் விதைகளைத் தெளிக்கப்
பளபளவெனப் பச்சைப்பாய் விரித்தாற்போல்.

4. இளம்பயிர் கிளம்பிடும் இனிமையாக
வளம்பெற வளர்ந்திடும் விரைவாக.

5. நாற்றைப்பிடுங்கி நட்டுநீர் வார்த்துக்
காற்று மழையினின்றும் காப்பாற்றி.

6. மாதம் ஆறுமுடிய மகரம் வரின்
கோதிலாக் கதிர்கள் முற்றிக் கீழேசாயும்.

7. ஆண்களும் பெண்களும் அறிவாள்கொண்டு
சாண்விட்டுக் கதிர்களைத் திருத்திச்சென்று

8. கட்டுக் கட்டாகக் கட்டிக்களம் சேர்த்துக்
கெட்டியாகவே கட்டாந்தரையில் தாக்கப்

9. பிரிந்திடும் பொன்மணிபோல் நெல்மணிகளும்.
முறங்களால் வீசப்பதர் பிரிந்தகலும்.

10. கண்டுமுதல் செய்தபின்னர் களத்தினின்றும்
வண்டிகளில்நெல்லை ஏற்றிவீடு சேர்த்து

11. பக்குவமாக வெயிலில் உலர்த்தியபின்
மட்குதிரில் மூன்றுமாதம் இருத்தியபின்

12. உலக்கையால் மாதர்இருவர் உரலில்குத்த
களக்கமற அரிசிகாணக் கிடைக்கும்.

13. அரிசியை உலையில்இட அமுதமாகும்
அறுசுவை உண்டிகொள்வோம் அழகாக

14. மானிலத்திற் பிறந்தோர் மண்ணில்வாழத்
தானியங்களைப் படைத்தோன் தாள் தொழுவோம்.

—அறிகுவமே அறிகுவமே.



கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பிலிருந்து உபாத்தியாயர்கள் தகுந்த படங்கள் தயாரித்து இப்பாட்டை சொல்லிக்கொடுக்கலாம். அல்லது பிள்ளைகளுக்கு அபிநயம் மூலமாக இப் பாட்டை 'நடப்பில்' கற்பிக்கலாம். (பர்)

குறிப்பு:—1. ஒரு பையன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். இலையில் சாதம் பரிமாரி யிருக்கிறது. பையன் ஏதோ கேள்வி கேட்பதுபோல, இடதுகை விரலால் இலையைச் சுட்டிக் காட்டிக்கொண்டும் வலதுகையைக் கேள்வி கேட்பதுபோல வைத்துக்கொண்டும், மேலே பார்த்தவண்ணமிருக்கிறான்.

2. (a) உழவன் வயலில் ஏர் உழுதுக்கொண்டிருக்கிறான்.

(b) இருவர் மூங்கிற் கூடையால் அருகில் ஓடும் வாய்க்காலிலிருந்து வயலுக்குநீர்பாய்ச்சுகிறார்கள். (c) வயலில் பரம்படிக்கப்படுகிறது.

3. (a) ஒரு குடியானவன் கூடையில் நெல்லை வைத்துக்கொண்டு வயலில் தெளிக்கிறான். (b) மற்றொரு வயலில் நாற்று முளைத்திருக்கிறது.

4, 5. (a) நாற்றங்காலிலிருந்து சில பெண்கள் நாற்றைப் பிடுங்குகிறார்கள். (b) மற்றொருபக்கம் சிலர் நாற்று நடுகிறார்கள்.

6. ஒரு வயலில் நெற்பயிர் கதிர்கள் முற்றிக் கீழே சாய்ந்திருக்கிறது.

7. வயலில் சிலர் கதிர் அறுக்கிறார்கள். ஒரு மனிதன் தலையில் ஒரு கட்டு இருக்கிறது.

8, 9. பக்கத்தில் களம்-ஒரு ஆலமரம்-சில கட்டுக்கள் கீழே கிடக்கின்றன. ஒருவன் சிறு கட்டாக மற்றொருவன் கையில்கொடுக்கிறான்—அவன் அதை வாங்கிக் கீழே அடிக்கிறான். அருகில் நெல், குவியலாகவிருக்கிறது. மற்றொருபுறம், தாள்கள் போராகப் போடப்படுகிறது. அதன் மேல் ஒருவன் நிற்கிறான். ஒருவன் முறத்தால் நெல் குவியலின்மேல் வீசுகிறான். பதர் அப்புறம் கிடக்கின்றது.

10. நெல் மூட்டைகளுள்ள வண்டியொன்று, தூரத்திலிருக்கும் ஒரு வீட்டை நோக்கிச் செல்கிறது.

11. (a) ஒரு முற்றத்தில் நெல் உலரவைக்கப்படுகிறது. சூரிய வெளிச்சம் அதன்மேல் படுகிறது.

(b) ஒரு மட்குதிர்—ஒரு ஸ்த்ரீ கூடையால் நெல்லைக் குதிரில் கொட்டுகிறாள்.

12. இரு மாதர் உரைக்குழியில் (தரையில்) நெல்லைக் குத்துகின்றனர்-மற்றும் இருவர் ஒரு உரலில் நெல்லைக் குத்துகின்றனர்-கீழே அரிசியும் உமியும் கலந்து கிடக்கின்றது. ஒருத்தி முறத்தால் அதைப்புடைக்கிறாள். அருகில் சல்லடை, விளக்குமாறு இவை கிடக்கின்றன. சற்று அப்பால் அரிசி குவியலாக இருக்கின்றது.

13. (a) ஒரு மாது சமையல் செய்கிறாள்.

(b) சிலர் சாப்பிடுகிறார்கள்—மாது பரிமாறுகிறாள்.

14. சூரியன் உதிக்கின்றது. சிலர் அதற்குப் பூஜைசெய்து பொங்கல் படைத்து வணங்குகின்றனர்.

# ஆரம்ப ஆசிரியர் சங்க முறை

P. பரிமணப்பல்லவராயர்

**சங்கம் செய்வது தங்கம் செய்யாது**—என்ற புதுமொழியைச் சில காலமாகச் சிலர் அறிந்திருக்கலாம். ஆனால், அதனுடைய முறைகளோ, சில விருப்ப முறத்தக்க முறையிலும், சில வெறுக்கத்தக்க முறையிலும், இருப்பது கண்கூடு. இவற்றில் ஆரம்ப ஆசிரியர் சங்கங்களை எடுத்துக் கொண்டால், பெரும்பாலும் அவற்றில் மாதிரி பாடம் நடத்துதலும். குறிப்பிட்டதொரு வியாசம் வாசித்தலுமாகவே நடைபெறக் காண்கின்றோம்.

“**பழகப் பழகப் பாலும் புளிக்கும்**’ அன்றோ! இதைக் கவனியாது, குறிப்பிட்ட முறையினைக் குறியாகவே கொண்டு நடத்துங் கொள்கை எத்துணை விரும்பக் கூடியதாகும்? இம்முறையினை வெறுக்கும் பரீட்சாதிகாரிகள் சிலர் இல்லாமலும் இல்லை. இருந்தென்ன? இம்முறைக்குக் காரணம் பெரும்பாலும் பரீட்சாதிகாரிகளேயாகும். இவர்களே இம்முறைகளை வரையத்துக் கட்டளை யிடுகின்றன ரெனின் மிகையாகாது.

எனவே, சங்கக் கூட்டங்களில் வேறு என்ன செய்ய வேண்டும் எனலாம்! என்ன செய்ய வேண்டுமா? ஆரம்ப ஆசிரியர்கள் கிணற்றுத் தவளைகளா? ஆரம்ப ஆசிரியர்களால் தான் தேசம் சுடர் விட்டொளிர வேண்டும் என்போர், ஆரம்ப ஆசிரியர் அதற்குத் தக்க அறிவு ஆற்றல் பெற்றுத் திகழவேண்டும் என்று நினைப்பதில்லை—அவற்றிற்கேற்ற செயல் புரிவதில்லை. எத்தனை ஆரம்ப ஆசிரியர்கள் தற்காலம் கல்விப் பிரச்சினையிலெழும் அபிப்பிராயங்களைத் தத்தம் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றைச் சிந்தனை செய்கின்றனர்? ஒரு சங்கத்தை எடுத்துக் கொண்டு அதில் 50—பேர் இருப்பதாகக் கொள்ளின், பத்துப் பேராவது பத்திரிகை வாசனையுடைய வராக இருக்கக் காண்கின்றோமா? பத்திரிகைகள் வாங்கிப்படிக்கும் நிலையிலாவது ஆரம்ப ஆசிரியர்கள் இருக்கின்றனரா? இருக்கும்படி வைக்கப்பட்டிருக்கின்றனரா?

“**ஆரம்பக் கல்வி**” பத்திரிகையை எடுத்துக் கொள்வோம். 1937 டிசம்பர் இதழில் வெளிவந்துள்ள, 1. ஆசிரியர் சங்கங்கள் அடிமைச் சங்கங்களல்ல, 2. (வார்தா கல்வித் திட்ட) ஆற்றங்கரைப் பேச்சு, 3. ஆசிரியர்கள் முற்றும் தேர்ச்சி பெற வேண்டும், 4. மகாத்மாவின் கல்வித் திட்டம் என்பன போன்ற விஷயங்களும்; ‘**பாலர் கல்வி**’ பத்திரிகை, போதனு விஷயப் பூங்கொத்து, முதலியவைகளில் வெளிவரும் விஷயங்களில் சிறந்த வற்றையும் தேர்ந்தெடுத்து சங்கக் கூட்டங்களிலாவது படித்து ஆரம்ப ஆசிரியர்களின் மனது விசால மடையும்படி செய்வது மேன்மையல்லவா!



மாதிரி பாடத்துக்கும், குறிப்பிட்டதொரு வியாசங்கள் படிப்பதற்கும், மேலதிகாரிகளின் தபால்கள், சர்க்குலர்கள் (ஆபீஸ் வேலைகளில் ஒரு பாகம்) செய்வதற்குமே ஏற்படுத்தப்பட்ட 1½, 2 மணி நேரங்கள் போதவில்லையே. மேலே குறிப்பிட்டவைகளுக்கு நேரம் அங்கே இருக்கின்றது எனலாம். இல்லைதான். மாதத்திற்கு ஒரு முறை கூடும் ஆசிரியர்கள் ஒரு 4-மணி நேரம் தங்கி, தாம் வந்த நோக்கம் முற்றுப் பெறும்படி ஏன் தங்கியிருந்து, தாம் ஏற்றுக்கொண்ட தொழிலுக்கு ஏற்ற விஷயங்களை அறிந்துகொள்ளக் கவனம் செலுத்த அக்கரை கொள்ளக் கூடாது? இந்த 1½, 2 மணி நேரத்திலேயே இடையில் கேட்டுக்கொண்டும் கேட்காமலும் சென்றுவிடும் ஆசிரியரும் இல்லாமலில்லை. இப்படிப்பட்டவர்கள் ஆசிரியராவதற்குத் தகுதியாவரா என்று கேட்கின்றோம்? அன்று முழு நாளுக்கும் சம்பளம் பெறவில்லையா என்றும் யோசித்துப் பார்க்கட்டும்! கருத்தும் கவலையும் இன்றி, கூட்டத்துக்கு வந்து, ஆஜர் பதிவு கொடுத்து விட்டுப் போய்விடுவோர், தம் தொழிலில் எவ்வளவு பொறுப்பு உள்ளவர் என்பதை யோசித்துப் பார்த்தால் அது மிகவும் வருந்தக்கூடியதாகவே ஆகும்.

ஆசிரியர் தொழிலுக்குக் கேவலம் உண்டுபண்ணும் வகையில் நடந்துகொள்வோரையும் என்ன வென்று வர்ணிப்பது? சிலர் தாம் மிக உயர்ந்த ஆசிரியத் தொழிலை ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல், ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காகத் தொழில் செய்கிறோம் என்ற எண்ணம் ஒன்றையே கொண்டிருப்பது எவ்வளவு இழிதகைமை என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை. தொழிலையும் உயர்ந்ததாக—உண்மையாகச் செய்தலும் வேண்டும், தமது தொழிலினுறும் குறைகளையும் தைரியமாக நிவர்த்திக்க முயல வேண்டும். இதுவல்லவா **ஆசிரியர்** என்போரின் **ஆண்மை**யாகும்! பேதை போலும் பேடிபோலும் செயல்புரிவதா **ஆசிரியர்க்கழகு** என்கிறோம்? இவ் வகையில் ஆசிரியரைச் செலுத்துவது—நடக்கும்படி செய்வது—அடக்கி ஆள்வது ஆரம்பக்கல்வி அபிவிருத்திக்கு உதவியாகுமா என்று கேட்கின்றோம்? நினைத்துப்பார்க்க வேண்டுகின்றோம்! ஆசிரியர்க்குரிய குண நலங்கள்தானே அவர் தம் மாணவர்க்கு அமையும். அங்ஙனமாயின் அவ்வித மாணவர் அகில உலக தேச நலம் நாடுவோராக எங்ஙனம் அமைதல் கூடும்?

எனவே, ஆரம்பக்கல்வி அபிவிருத்திக்கு—இக்காலக் குழந்தைகள் பிற்கால நன்மக்களாக ஆவதற்கு எது உசிதம் எது உசிதமல்ல என்பதை ஆராய்ந்து அவ்வழியில் உண்மையாகச் செயல்புரியுமாறு ஆசிரியர்களையும் அதிகாரிகளையும் அபிமானிகளையும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

# தமிழ் எழுத்துப் பயிற்சி

"பாலசந்திரன்" M. A.

## பூர்வ ஆராய்ச்சி

நமது நாட்டில் கிராமாந்தரங்களில் மணலிலே பிள்ளைகளை எழுதச் சொல்லி வந்ததுண்டல்லவா? அம்முறை கையாளப்பட்டு வந்ததேன்? இந்த கேள்விக்கு யாராகிலும் எப்பொழுதாவது விடை அளித்திருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது. ஆயினும் கிராமங்களில் சிலேட்டுகளோ வேறு எழுதுவதற்கேற்ற சிறு தனி போர்டுகளோ அக்காலத்தில் சுலபமாக கிடைக்காததால் மணலில் எழுதுவது சாதாரணமாக இருந்தது எனலாம். அவ்வாறு எழுதுவது ஏன் கூடாது என்பதற்கு அது சுகாதார விதிகளுக்கு முரண்பட்டதாகும்; குழந்தைகள் கைகளுக்கு கெடுதல்களை விளைவிக்கும் என்று இரண்டு காரணங்கள் கூறலாம். தவிர தற்காலத்தில் சிலேட்டுகள் எங்கும் பரவிவிட்டதால் மணலில் எழுத வேண்டிய அவசியமில்லை என்றும் சொல்லலாம். மணலில் எழுதுவதில் அல்லது எழுதி வந்ததில் சாதகங்கள் உண்டா? என்று கேட்டால் உண்டு என்று தான் சொல்லவேண்டும். குழந்தைகள் கைகளை தாராளமாக செலுத்தி எழுதவும், எழுதின எழுத்துக்களை இலகுவில் அழித்துவிட்டு மேன்மேலும் எழுதவும் மணல் வசதி அளிக்கக்கூடியது. "மனிதன் இயற்கைத் தாயின் போதனைகளை மறந்ததாலேயே தான் கெட்டான். நாகரிகம் தொடங்கியதற்கு முந்திய நிலைமையே தான் அவனுக்கு சாதகமானது. சப்தத்தை எழுத்து ரூபமாக அமைக்க தொடங்கினபோது இயற்கையாக அதற்கேற்றவாறு அமைந்திருந்தது அத்தாயின் உடலான மண்ணும் மணலுமே. அவற்றின் மீதே அவன் தனது அக்ஷரங்களை எழுதி எழுதி தேர்ச்சியடைந்தான். ஆகையால் இயற்கையே வடிவமாய் அமைந்துள்ள குழந்தைகள் அவ்வியற்கையான முறையையே கையாண்டு பிறகு வேண்டுமானால் தங்களைச் சுற்றி இயங்குகின்ற நாகரிக செயற்கை முறைகளில் அகப்பட்டு உழலட்டும்" என்று ஓர் கீழ்நாட்டு வேதாந்தியோ அல்லது மேல் நாட்டு இயற்கை தேவதையின் தீவிர பக்தரில் ஒருவரோ கிளர்ச்சி செய்து அதன் பலனாக இயற்கை முறையையே மறுபடி கையாளப்படுவதற்கு சாதகமாக "மனித மிருக, தாவர முதலிய எந்த ஜீவராசியின் சம்பந்தமுமற்ற சுத்தமான அமெரிக்க நதி மணல்—ஒரே சீரானது—சிறுவர்கள் கைகளுக்கு சுலபமாக நகர்ந்து உருண்டு இயங்கும் தன்மையது. எவரும் ஆக்ஷேபிக்க முடியாதபடி சுத்தமாகவும் நவீன வைத்திய சாஸ்திர நிபுணர்கள் ஐந்து பேரின் பிரத்தியட்ச மேற்பார்வையின் கீழும் தயாரிக்கப்பட்டு சிறுவர் மனதைக் கவருகின்ற பூப்போட்ட தட்டுகளில் நிறப்பப்பட்டுள்ளது" என்கிற மறுக்க முடியாத யோக்கியதாம்சங்

களுடன் மணலும் கிளம்பிவிட்டால் கட்டாயம் இயற்கை முறையான மணலில் எழுதும் முறை அதன் பழைய கௌரவத்தை திரும்பி அடைந்துவிடும் என்று சொல்லலாம்.

## கோடுகள் அமைக்கப்பட்ட ஆரம்ப சாதனங்கள்.

மணலை விட்டுவிட்டால் சிலேட்டுகளும் சிறு மரப்பலகைகளும் சுவற்றில் அமைக்கப்பட்டிருக்கும் போர்டுகளுமே அடுத்தபடி எழுத்துப் பயிற்சிக்கு சாதனங்களாகும். எழுத்துக்களை எழுதுவதற்கு இச்சாதனங்கள் எவ்வாறு அமைந்திருக்கவேண்டும் என்பதை கவனித்தால்,

(1) அவைகளில் கோடுகள் போடப்பட்டிருக்கவேண்டும்.

(2) அக்கோடுகள் எழுத்துக்களின் அளவை நிதானப்படுத்தக் கூடிய வகையில் அமைந்திருக்கவேண்டும்.

(3) சிலேட்டுகளில்லாத மற்ற இரு சாதனங்கள் சிறுவர்கள் எளிதில் கையாளும்படி அமைக்கப்படவேண்டும் என்பதை இரு அவசியங்கள் விளக்கும். கோடுகள் எழுத்துக்களின் வரிசைகளை ஒழுங்குபடுத்தவும், எழுத்துக்களின் அளவைக்காட்டவும் அவற்றின் உருவங்களைச் சரிவர அமைக்கவும் சாதகமாயிருக்கின்றன. அவ்வாறு அமையும் கோடுகள் ஒவ்வொன்றாகவோ, இரண்டிரண்டாகவோ அமைந்திருப்பது போதுமானதல்லவென்பது தமிழ் எழுத்துக்களை பார்த்த மாத்திரத்திலேயே விளங்கும். மூன்று கோடுகளில் பயிற்சி அளிப்பது ஒரு முறையாக இருக்கிறது. இரண்டு கோடுகளைவிட க,ச, த, ந போன்ற எழுத்துக்களின் உருவத்திற்கு இவை ஏற்றதாக இருந்தபோதிலும் எ, ஏ, ஐ, ஒ, ஓ சப்தங்களையுடைய எழுத்துக்களையும், உ, ஊ சப்தங்களையுடைய எழுத்துக்களையும் அமைப்பதற்கு இவை ஏற்றதாயில்லை. ஏனெனில் முன் சொன்ன எழுத்துக்கள் மூன்று கோடுகளுக்கு மேலும், பின் சொன்னவை கீழும் கொஞ்சம் எழுதப்பட வேண்டியிருக்கின்றன. சிறுவர்கள் எல்லாவற்றையும் ஒரு வழியாக அக்கோடுகளின் அளவிலேயே அமைத்துவிடுகிறார்கள்; அல்லது மேலும் கீழும் அளவின்றி எழுத்துக்களை இழுத்துவிடுகிறார்கள். ஆகையால் இரட்டைக் கோடுகளைவிட முக் கோடுகள் எப்படி அதிக சுகமாகின்றனவோ அதுபோல அதிகமேலளவு அதிக கீழளவு இவற்றையும் காட்டக்கூடிய இரண்டு கோடுகளை முக்கோட்டு வரிசையுடன் அமைத்து ஐந்து கோடுகளாக்கினால் மிகக் குறைந்த குறைபாடுகளுடன் தமிழ் எழுத்துக்களை எழுதக்கற்றுக் கொடுப்பது சாத்தியமாகும். சாத்தியமானால் மட்டும் போதுமா, சுலபமும் வேண்டாமா என்று ஆக்ஷேபித்தால் கோடுகள் அகலமாக அமைக்கப்பட்ட பலகைகளோ அல்லது சுவர்ப்பலகைகளோ கையாளப்பட்டால் அச்சுலபமும் கூடிய அளவில் ஏற்படும் எனலாம். சிலேட்டுகளில் இவ்வாறு கோடுகளை அமைத்து அவைகளில் எழுதச் செய்வதைவிட பலகைகளில் எழுதச் செய்வதே சிறந்ததாகும். ஏனெனில் தெளிவான விசாலமும் கையின் போக்குக்கு கோடுகளின் வரம்பிற்குட்பட்ட ஓர் சுயேச்சையும்

பலகைகளில் தான் பெறக்கூடியவையாகும். ஆசிரியர் முதலில் எழுத்துக்களை அக்கோடுகளில் எழுதிக் காட்டி, பழக்கம் ஏற்பட ஏற்பட பிள்ளைகளை தாமாகவே மேன்மேலும் எழுத்துக்களை அவ்வரம்புகளில் எழுதும்படி செய்வது நலம். எழுத்து உருவங்களை அக்கோடுகளில் சற்றேனும் சரியாக அமைக்கவராது தவிக்கும் சிறுவர்களுக்கு ஆசிரியர் எழுதிய எழுத்துக்களின் மேல் எழுதும் பயிற்சியையே முதலில் கொடுக்கலாம். அதிக வளைவுகளையுடைய எழுத்துக்களை பலகைகளில் பள்ளங்களாக அமைத்து குழந்தைகளை தங்கள் கைகளை அவற்றிலேயே செலுத்தி அதன் மூலம் ஒருவாறு அவ்வடிவங்களை நிதானப் படுத்திக் கொள்ளும்படி செய்வதும் ஒருமுறையாகும்.

மனிதர்களில், எக்காலத்தும் நினைத்த சௌகரியங்களை தேடிக் கொள்ளக் கூடியநிலைமையில் ஒரு கூட்டத்தாரும், அன்றையபொழுது சிரமத்தை போக்கிக் கொள்ளும் ஒரு கூட்டத்தாரும் இப்போதும் இருப்பது போல பள்ளிக்கூடங்களிலும் இம்மாதிரி ஆசிரியர்கள் இருக்கின்றனர். இவ்வகை ஆரம்ப எழுத்துப் பயிற்சி சாதனங்களை எவ்விடங்களிலும் எளிதில் தேடிக் கொள்ளக் கூடியவைகளா என்று கேட்பில் இச்சிறு சௌகரியங்களை அமைத்துக் கொள்வதில் மேற்கூறிய நற்பழக்கம் ஏற்படவேண்டும். பலத்தஇடையூறுகளும் எப்படியோ என்று நான் எதிர் பாராதவாறு நீங்கள் கேட்டு விட்டாலும் சரி நினைத்தாலும் சரி, சற்று சங்கடமான நிலைமையில் "நோட்டீஸ்" என்று சொல்லித் தப்பிக்கும் சட்டசபை முறையைத்தான் நான் கையாள வேண்டும். ஆனால் அந்த முறைதற்போது செல்லாது போலிருப்பதால் "நானுக உங்களுக்கு உத்தரவு கொடுக்கும் பொழுது அக்கேள்வியை கேளுங்கள். அல்லது எனக்கு அம்முறையில் பூரண நம்பிக்கையும் ஆர்வமும் உண்டு. அதைக் கையாள வேண்டுமென்று முயற்சி செய்து அதில் வெற்றி அடையுமாறு நண்பர்களான நீங்கள் ஒலிக்கு நல்விருப்பம் விரும்புங்கள்" என்று வணக்கத்துடன் சொல்வதாக வைத்துக் கொள்ளுங்கள்.

### நோட்டேப்புக்குகளில் எழுதுதல்

**கோடுகேள்:**—எவ்வளவு காலம்—இப்பொழுது சிறந்த சாதனங்களின் உதவியினுலேயோ அல்லது வேறு எவ்வகையிலோ சிறுவர்கள் ஒருவாறு எழுதித் தெரிந்து கொண்டதாக வைத்துக் கொள்வோம்.

நோட்டு புக்குகள் எப்போதாவது ஒரு சமயம் அவர்கள் கைகளுக்கு வந்துதான் தீரவேண்டுமல்லவா? அவைகளில் எவ்வாறு எழுதப் பழக்குவது என்றல். ஐங்கோட்டு வரிசைகளுள்ள நோட்டுப்புக்குகளிலேதான் என்று பதில். அதுதான் பழக்கமாகிவிட்டதே, இன்னுமா அந்த மின்சார கம்பிக்கட்டங்கள் என்று கேட்டால், நண்பர்களே, ஆரம்ப வகுப்புக்கள் (1,2,3 வது வகுப்புக்கள் முழுவதும்) அப்பழக்கம் செவ்வனே ஏற்பட்டபொழுது போனல் போகிறது. நடுக்கோட்டை விட்டுப் பாருங்கள். சில சிறுவர்கள் அக்கோடுகளில்லாமல் ஒழுங்காக



எழுதினுல் அவர்களை அவ்வாறே. விடுங்கள். சிலர் க, ச, த முதலிய எழுத்துக்களை பலூன்களைப்போல் ஒப்பச் செய்தால் மறுபடி அக்கோட்டை உபயோகியுங்கள். பழக்கத்தின் காரணமாகவோ சொந்தத்தீவிரத்தினுலோ சிறுவர்கள் கோடுகள் இல்லாமலேயே வடிவ ஒழுங்கை அடைந்து விட்டால் அச்சிறுவர் விஷயங்களில் ஆஸ்தீக வேதாந்த உபந்நியாசங்களை செவியுற்று திரும்பும் மக்கள் அப்போது உண்டான தீவிரானந்தத்தினுல் மானஸிகமாகவாவது உலக சம்பந்தங்களை வீடுவரையில் ஒவ்வொன்ருக தியாகம் செய்வதுபோல அக்கோடுகளாகிய பந்தங்களை தியாகம் செய்து விடுங்கள்.

### எழுதும் கருவி

எழுதுவதற்கு பென்சில்களே சிறந்த கருவிகளாகும். இங்கியில் பயிற்சி 5-வது வகுப்பு வரையில் அல்லது கட்டாயம் நான்காவது வகுப்பு முடியும் வரையிலாவது வேண்டாம். பென்சிலால் எழுதும்போது "ரப்பரை" உபயோகிக்கவே கூடாது; உபயோகித்தாலும் குறைந்த அளவுதான் உபயோகிக்கவேண்டும், உபயோகித்ததே தெரியாமல் உபயோகிக்க வேண்டும்; பார்க்கிறவர்கள் பிரமிக்கவேண்டும்" என்றென்னலாம். விசேஷ அதிகாரச் சட்டங்களை போடாதீர்கள். ஏனென்றல் அச்சட்டங்கள் சிறுவர்கள் விஷயத்தில் செல்லா. கூடியவரையில் அவர்கள் எழுதுவதை கவனித்து மாதிரி வரிகளாவது ஆரம்பத்தில் எழுதிக் கொடுத்து, சுயேச்சைத் தன்மையால் ஏற்படும் கோளாறுகளைத் திருத்தி பொறுமையுடன் வழிகாட்டினுல் முறை இலகுவில் பயிற்சியாகி விடும். "எழுத்து வேலை எல்லோருக்கும் கொடுத்துவிட்டு விபரீதமான எழுத்து வடிவங்கள் ஒரு நோட்டிலும் தோன்ருமல் ஒவ்வொரு குழந்தையின் பக்கத்திலும் உட்கார்ந்து வழிகாட்ட நான் என்ன எத்தனை பேராக வேண்டுமானுலும் என்னையே வாய்ப்பாட்டினுல் பெருக்கி சுலபமாக அமைத்துக்கொள்ளமுடியுமா?" என்று கேட்பீர்களானுல், "கூடியவரையில் முதல் இரண்டு வகுப்புகளில் எழுத்துவேலையை குறைத்துக் கொள்ளுங்கள்; கொஞ்சம் எழுதினுலும் அதை நன்ருக பழக்குங்கள்" என்று சொல்வேன்.

"ஒரு குழந்தைக்கு 2 நிமிஷமாவது பக்கத்தில் இருந்து கவனிக்க வகுப்பு முழுவதற்கும் 1½ மணி நேரம் வேண்டி யிருக்குமே, அதற்குள் கவனிக்கப்பட்டு விட்டவர்களும் கவனிக்கப்படவேண்டியவர்களும் தங்கள் கைப் போக்குகளை சாசனம் செய்து விடுவார்களே" என்பீர்களானுல் "அதிலிருந்து தப்பிக்க ஒரு வழி யுண்டு; சம்பளக் குறைவில்லாமல் குறைந்த பிள்ளைகள் உள்ள ஓர் வகுப்பிற்கு எழுத்து மேற்பார்வை வேலையை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் துரதிர்ஷ்டம் எல்லா வகுப்புகளும் திணியட்டும்; அவைகளுக்குள்ளே குறைவான எண்ணிக்கைப் பிள்ளைகளுடைய வகுப்புகளின் எழுத்துப் பயிற்சி மேல் பார்வைக்கு சாமர்த்தியத்தின் காரணமாகவோ, சர்வீசில் ஸீனியாரிடின்படியோ

பலத்தப் போட்டி இருக்கிறதே" என்று முணுமுணுப்பீர்களானால் "நான் அதற்கு என்ன செய்வது, உங்கள் நன்மையை மனப்பூர்வமாக கோறுகிறேன். ஆனால் எங்கள் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் வேலை காலியில்லையே" என்றுதான் நான் சொல்லக்கூடும்.

**நோட்புக்குகளில் எழுதுவதைத்தவிர மற்ற எழுத்து** வேலை ஓரளவில் இரண்டாவது வகுப்பிலிருந்தாவது இருந்தேதீரும். கணக்குகளில் எழுத்துக்கள் வந்தே தீரும். டிக்டேஷனோ நமது நித்திய கர்மானுஷ்டானங்களில் முக்கியமானவைகளில் முதன்மையாவது. இவ்விரண்டு எழுத்து வேலைகளைச் செய்யும்போது பிள்ளைகள் இஷ்டப்படி எழுதாமல் செய்வதெப்படி? அதனால் ஏற்கனவே ஐங்கோடுகளால் ஏற்பட்ட வடிவ நிதானமும் உருவ ஒழுங்கும் கெட்டுவிடாவா? இவ்வாறு பயிற்சியை கொடுத்து அதை அழிக்கும் முறைகளையும் கூடவே அனுஷ்டித்தால் அப்பயிற்சி எம்மாதிரி பலன் அளிக்கும்? இவைகள் ஆணித்தரமான கேள்விகள்தான். ஆனால் நமது சரீரத்திற்கு ஏற்படும் சீர்கேடுகள் சிறு சிறு அளவு மருந்துகளாலும் டாக்டர்களின் கைகளுடைய ஸ்பரிசம், அன்பான மானஸீக மின்சார குணமிருந்த உணர்ச்சி அலைகள் இவைகளை தவிர இன்னதென்று சொல்ல முடியாத அதிர்ஷ்டம், விதி, ஆண்டவனருள் முதலிய காரணங்களாலும் உங்கள் ஆரோக்கியம் குறையாது இருப்பது போல ஊக்கத்துடனும் கவனத்துடனும் அளிக்கப்படும் சிறு அளவும் பிள்ளைகளின் உற்சாகமும், ஒழுங்கில் அவர்களுக்கு இருக்கும் பிரியமும், சாமர்த்தியமும், ஓரளவு கற்றுக்கொண்ட எழுத்துக்களை கோளாறுகளிலிருந்தும் காக்கும். நாளடைவில் வடிவங்கள் கைப்பழக்கத்தால் நன்றாகவே அமையும்

இப்பொழுது வருவது கடைசிக்குமுந்தின அங்கம். ஒரு சந்தேகம் அடங்கிய அங்கம் அது. என்ன வென்று யாராவது சொல்லுகிறீர்களா? அதுதான் தமிழில் ஆரம்ப பாடங்களுக்கும், ஆரம்ப எழுத்துப் பயிற்சிக்கும் இருக்கவேண்டிய நெருங்கிய சம்பந்தம். இதில் என்ன விசேஷம், ஒன்றுமில்லையே, ஏன் இது சந்தேகம் நிரம்பியது? என்பீர்களோ, ஒன்றன்பின் ஒன்றாக கீழிருக்கும் கேள்விகளை தயவுசெய்து கேளுங்கள்.

**தகராறு:—**

(1). தமிழ் மொழியில் ஆரம்பப் பாடங்கள் முழு வார்த்தை ரூபமாகவேபோதிக்கபடவேண்டியிருந்தால், அம்மொழிகளை அப்படியே எழுத்துக்கள் ரூபமாகவே சிறுவர்கள் அவ்வப்போது அமைப்பது சுலபமா?

(2) எழுத்துக்கள் எழுதப் பயிலும்போகும்நேர்க்கோட்டு எழுத்துக்கள் முதலிலும் குறைவான வளைவுகளுடையவை அடுத்தபடியும் மற்ற எழுத்துக்கள் முறைப்படி மேலும் மேலும் வருவது சுலபமல்லவா?

(3) மொழி முறைக்குத் தகுந்தாற்போல எழுத்து சுலபம் அமைந்து வந்துள்ளதா?

(4) அவ்வாறு அமைந்திராவிடில் கற்கப்படும் மொழிகளுக்கும் எழுத்துக்களுக்கும் சம்பந்தமே இராது போய்விடுமே?



(5) இரண்டுக்கும் பொதுவாக சம்பந்தமுள்ளதாக ஆரம்பப் பாடங்களை பூராவும் அமைத்துக்கொள்வது முடியுமா? சில இடங்களில் சம்பந்தம் அற்றுப் போனால் போகட்டும். எழுத்துக்கள் பூராவும் படித்துவிட்டால் மொழிகள் அவைகளில்அடங்கிதானேஇருக்கவேண்டும் என்று முடிவுசெய்யலாமா? அன்னியபாஷையைக் கற்கும்போதுதானே மொழி முறை அவசியம். பேசுகிற சுய பாஷை மொழிகளை அநேகம் பிள்ளைகள் ஏற்கனவே அறிவார்களே. அவைகளை எழுதத் தானே தமிழ் எழுத்துப் பயிற்சி அவசியம். ஆகையால் எழுத்துக்களின் சுலபத்தை ஒட்டியோ பெரும்பாலும் பயிற்சி அளிப்பது பாதகமாகாது என்று "இது சென்ற வாரம் வரைக்கும் செல்லட்டும்" என்கிற தைரியத்தோடு சொல்லிவிடலாமா? இச்சந்தேகங்களை தயவுசெய்து நீங்கள் தீர்த்துவிடுங்கள். அச்சுக் காப்பி எழுதச்செய்வதா? என்கிற சந்தேகம் மாத்திரம் வேண்டாம். அது அவசியமில்லை.

## 5. சுருக்கம்

(1) ஆரம்ப எழுத்துப் பயிற்சி ஐங்கோடுகள் அமைந்த சாதனங்களில் செய்வது நலம்.

(2) இச் சாதனங்களிலிருந்து நோட்புக்குகளுக்கு எப்போது சௌகரியமோ அப்போது தாண்டலாம். இங்கும் ஐங்கோடுகளே.

(3) ஐங்கோடு வரிசைகள் தமிழ் எழுத்துப் பயிற்சிக்குச் சிறந்தது.

(4) ஆரம்ப வகுப்புகளில் பென்சிலே எழுதும் கருவி.

(5) கற்பிக்கும் ஆசிரியர்கள் முடிந்தவரையில் தங்கள் உற்சாகத்தையும் கவனத்தையும் பிள்ளைகளுக்கு செலுத்துவது நல்லது.

# பொம்மை செய்தல்

## (விளையாட்டுக் கருவியின் மூலம் அறிவை வளர்க்கும் முறை)

---

P. V. ராமசுவாமி B. A., L. T.

உபயோகமுள்ள பொழுதுபோக்கு அலுவல்களில் பொம்மை செய்தல் ஒன்றாகும். இவ்வலுவலில் தேகத்தின்கண் உள்ள சகல தசை நார்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன. தசை நார்கள் உபயோகப்படுத்தப் படுவதால் தேகம் வலிவுறுகின்றது. மனத்தில் ஊக்கமும் உணர்ச்சியும் தோன்றுகின்றன. சுயமாகவே செய்த ஒரு விளையாட்டுப் பொருளை ஒரு சிறுவன் காணுங்கால் அவன் எத்தனை மகிழ்ச்சி யுறுவான்! ஊக்கமின்றி எப்பொழுதும் சிடு சிடு வென்றிருக்கும் குழந்தைகள் கூட தாம் ஒரு விளையாட்டுச் சாமான் செய்யும்பொழுது ஊக்கத்துடன் வேலை செய்வதன்றி, செய்த பொம்மை நன்கு அமைந்து விட்டால் களிபேருவகை எய்துகின்றன. மந்த புத்தியுள்ள குழந்தைகளின் மனத்தைக்கூட பொம்மை செய்தல் கவர்ந்து விடுகின்றது. எப்படியெனில் தாம் எவ்வாறு அப்பொருளைச் செய்து முடித்தல் வேண்டும் என்பதுபற்றி ஒரு முடிவான அபிப்பிராயமோ நோக்கமோ ஏற்படுகிறது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவர்கள் பிரயத்தனப் படும்போது ஏற்படும் ஊக்கத்திற்கும், காரிய சித்தியான பிறகு அவர்களுக்கு ஏற்படும் சந்தோஷத்திற்கும் எல்லை உளதோ! தன்னால் செய்யப்பட்ட விளையட்டுக் கருவியில் குற்றம் குறைபாடுகள் இருப்பினும் செய்த சிறுவனுக்கு அதன்மேல் தனிப் பிரீதி ஏற்படுகின்றது. இதற்குக் காரணம் தன் கையினால் அப்பொருள் செய்யப்பட்டுள்ளது என்னும் ஓர் எண்ணமே. தன் காட்சியிற் தெளிந்த ஒரு பொருளை மனத்தேயிருத்தி அதனைப்போல் தானும் செய்யத் தொடங்கி சிறிது சிறிதாய்த் தன் கையினாலேயே செய்கின்றான். ஆகவே அப்பொருளைப் பற்றிய சகல அம்சங்களையும் தன் முயற்சியாலேயே அறிகின்றானே தவிர பிறர் சொல்லக் கேட்டு அறிவதில்லை. எந்தக் குழந்தை சுத்தியையும் உளியையும் கையாளப் பயப்படுகின்றதோ அதுதான் பிறர் சொல்லக் கேட்டு விஷயங்களை அறிந்துக்கொள்ளக்கூடும். மனோபாவனை ஏற்படும் பொழுது நரம்புத் தொடர்புகள் உண்டாகின்றன. இவ்விதம் ஏற்பட்ட தொடர்புகளை அதிக சிரமப்பட்டாலொழிய தகர்த்தெரிய முடியாது. தான் செய்யவேண்டிய பொம்மையின் பிரதி ஒன்றைப் பார்த்ததுமே குழந்யின் (உள்ளத்தில் மனோபாவனையில்) அதன் சகல பாகங்களும் பதிந்து விடுகின்றன. அப்பாகங்களை மேலும் மேலும் எப்படி விருத்தி செய்ய



லாம் என்பதே அதனுடைய நோக்கமாகின்றது. இவ்விதம் மாசற்றமனோ பாவனைகளை உற்பத்தி செய்து கொள்வது குழந்தைகளைப் பொறுத்ததே தவிர உபாத்தியாயரைப் பொறுத்ததன்று. ஆனாலும் அன்னவர் குழந்தையின் மனோ பாவனை சரியான நிலையில் ஆரம்பமாக வேண்டியசாதகம் செய்வது அவசியம்.

மனோ தத்வ அறிஞர்கள் சிறுவர்களுக்கு இம்மாதிரிப் பயிற்சிகள் அவசியம் இருக்கவேண்டுமென்று அறிந்து அதற்கேற்பப் பாடத் திட்டங்களும் வகு(அமை)த் திருக்கின்றனர். 'மாடேம் மாண்டிஸாரி' என்னும் அறிஞர் ஒரு சிறு குழந்தைக்கு ஏதாவது ஒரு வஸ்துவைப்பற்றிக் கற்பிக்க விரும்புவோர் அக் குழந்தையிடம் அவ் வஸ்துவைக் கொடுத்து அதைக் கண்ணினால் பார்த்தும் கையினால் தடவியும் உணர்ந்து அறிய வேண்டும் என்று சொல்லுகிறார். விளையாட்டுக் கருவியைச் செய்யும் ஒருவன் தான் செய்யும் கருவியைத் தன் பஞ்சேந்திரியங்களாலும் அறிவது அவன் அறிவு வளர்ச்சிக்குச் சிறந்த வழி என்று தெரிகின்றது. கல்வி "விளையாட்டு மூலமாய் போதிக்கப்படவேண்டும்" என்னும் உண்மையைப் பொம்மைகள் செய்தல் ஊர்ஜிதப்படுத்துகின்றது. மோட்டார் வண்டி செய்யும் ஒரு சிறுவன் மோட்டாரின் பல பாகங்களைப் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ளுகிறான். வேறு எந்த வழியாலும் அவன் மோட்டாரின் பாகங்களை இவ்வளவு தெளிவாகவும் சுலபமாகவும் அறிந்து கொள்ள முடியாது.

இம் முறைக்கு ஆட்சேபணைகள் சில எழும்பலாம். இக் காரியங்களுக்கெல்லாம் போதிய பணமும் அவகாசமும் ஏது என்று கேட்கலாம். இம் முறை சிறுவர்களுக்கு வகுத்ததே அன்றி பெரியோர்களுக்கல்ல. சிறுவர்கள் படிக்கவேண்டிய பாடங்கள் அநேகமில்லை. ஆகையால் அவர்களுக்குப் போதிய அவகாசம் கிடைக்கும். மேலும் பொழுது போகாத நேரங்களிலும் இடைவேளைகளிலும் பொம்மைகள் செய்வது சந்தோஷத்தையும் அறிவு வளர்ச்சியையும் கொடுப்பதோடு, அடுத்துவரும் வேலைக்கும் அவன் மூளையை ஆயத்தப்படுத்துகின்றது. தவிர சிறுவர்கள் செய்த விளையாட்டுச் சாமான்களைச் சொற்பவிலைக்கு விற்று அந்த ஊதியத்தைக் கொண்டு வேண்டிய சாமான்களும் ஆயுதங்களும் வாங்கிக்கொள்ளலாம்.

மகாத்மா காந்தியின் ஆதரவின் கீழ் வார்தாவில் தயாரிக்கப்பட்ட கல்வித் திட்டத்தில் இந் நோக்கம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. கல்விக்கு வேண்டிய தனம் சிறுவர்களின் கைத்தொழிலிலிருந்தே கிடைக்கவேண்டும். அவர்கள் செய்யும் கைத்தொழிலில் அவர்களுக்கு ஊக்கமும், பெருமையும், சந்தோஷமும் இருக்கவேண்டும்.

விளையாட்டுச் சாமான்கள் செய்வதில் சிறுவர்களிடமுள்ள சில சாதாரணமான குறைகள் நீக்கப்படுகின்றன. சோம்பேறித்தனம், மடமை, அஜாக்கிரதை முதலியவை நாளாவட்டத்தில் நீங்கிவிடுகின்றன. விளையாட்டுக் கருவிகள் செய்வது அழகை வியக்க உதவுவதோடு பொழு

மையையும் கற்பிக்கின்றது. சிறுவர்களில் சிலர் பள்ளிக்கூடங்களில் நடக்கும் பாடங்களைக் கவனிக்க முடியாமல் மந்தமாயிருக்கின்றார்கள். நாம் போதிக்கும் சரித்திரம் விஞ்ஞானம் முதலியவை அவர்களுக்குப் பயன்படுவதில்லை. விஞ்ஞான பாடம் நடக்கும்போது அது சம்மந்தான சோதனைகளை, கருவிகளைக் கொண்டு செய்து காட்டினால் மாணவர்கள் எவ்விதம் அந்தப் பாடத்தில் ஊக்கம் காட்டுவார்களோ அதேபோல் நம் கையால் செய்த ஒரு விளையாட்டுக் கருவியை உபயோகித்துப் பாடத்தை போதிப்போமானால், மிக மந்த புத்தியுள்ளவனாயிருந்தால் கூட அவ்விஷயத்தை கிரகிக்காமலிருக்க முடியாது.

இம்முறையைப் பின்பற்ற அதிகப்பணமோ பொருள்களோ தேவையில்லை. காலித் தீப்பெட்டிகள், அட்டைகள், கார்க், குண்டூசிகள், காகிதம் முதலியவைகளைக் கொண்டு அழகான விளையாட்டுச் சாமான்கள் செய்ய முடியும். களிமண்ணால் பொம்மைகள் செய்வது மற்றொரு முறையாகும். கூடுமான வரையில் விளையாட்டுச் சாமான்கள் ஏளிதில் கிடைக்கக்கூடிய பொருள்களிலிருந்தே செய்யப்படவேண்டும். கொட்டாங்கச்சியிலிருந்து (பிடிலும்) யாழும் உபயோகமற்ற காகிதங்களிலிருந்து கூடையும் செய்யலாம். அட்டைத் துண்டுகள், சிறு கள்ளிப் பெட்டிகள், கார்க், துடைப்பக் குச்சிகள், சாக்லேட் பேப்பர்கள், அப்ரேக் முதலியவைகளிலிருந்து அழகான வஸ்துக்கள் செய்யலாம். பொம்மைகளுக்கு வர்ணம் கொடுப்பது ஆரம்ப காலங்களில் உசிதமல்ல. விளையாட்டுக் கருவிகள் செய்வதில் கூடுமானவரை ஆயுதங்களை உபயோகிக்காமலிருக்கவேண்டும். குழந்தைகளின் வயதிற்கும், அறிவு வளர்ச்சிக்கும் தேக வலிமைக்கும் தக்கவாறு பாட திட்டம் வரையறுத்துக்கொண்டு அதைப் பின்பற்றுவது நல்லது. மரத்தினால் செய்த பொம்மைகள் மிகச் சிறந்தவை.

கூடுமான வரையில் உபாத்திமார்கள் பிள்ளைகளுக்குப் பொம்மை செய்வதில் சுயேச்சை அளிக்கவேண்டும். தன் குற்றங்களைத் தானே உணர்ந்து தன்னைத் தானே திருத்திக்கொள்ள அவனுக்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். ஒவ்வொரு சிறுவனும் தன் வேலையைச் சுறுசுறுப்புடன் செய்ய முயலவேண்டும். பூர்த்தியான விளையாட்டுக் கருவிகள் கூடுமானவரையில் நிஜ உருவத்தை எல்லா அம்சங்களிலும் ஒத்திருக்கும்படி செய்யச் சொல்லுதல் நல்லது.

கீழே சில விளையாட்டுக்கருவிகள் செய்யும் விதத்தைப்பற்றிக் கூறியுள்ளேன். உபாத்தியாயர்கள் அவைகளைப் பின்பற்றி முடிந்த வரையில் குழந்தைகளை மேற்படி கருவிகளைச் செய்யும்படி தூண்டுவது உசிதம்.

1. **காகிதம் அல்லது அட்டை வேலைகள்:** கிணறும் வாளியும் 10 அங்குலம் நீளமும் 2½ அங்குலம் அகலமும் உள்ள ஒரு மெல்லிய அட்டையை எடுத்துக்கொள். அதன் ஒரு பக்கத்தில் ½ அங்குலம்விட்டு



மடி. 2 வது படத்தில காட்டியபடி அதில் கூறுபோடு—இந்த அட்டையை வளைத்து ஒரு நீட்ட உருளையாகச் செய். வெட்டப்பட்ட துண்டுகள் கிணற்றின் விளிம்புகளாகும். A. B. என்ற ஒரு தடித்த காகிதத்தை எடுத்து (படம் 1) மடித்துக் கிணற்றின் பக்கங்களோடு ஒட்டிவை. A. B. நேர் நேராக இரண்டு துளைகள் போட்டு அவைகளின் வழியாக ஒரு சிறு பிரம்பைச் செருகு. இந்தக் குச்சியின் இரு முனைகளிலும் இரண்டு அட்டைகளை மாட்டி அவைகளின் மற்ற நுனியில் இரண்டு சிறிய தீக்குச்சிகளைச் செருகவேண்டும். இவ்விதம் செய்த பொம்மை ஒரு கிணறாகும். இதற்குத் தகுதியான சிவப்பு நிறம் பூசிவிட்டால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். வாளி செய்வதற்கு ஒரு நீண்ட சதுர அட்டையை எடுத்து படம் 4 ல் காட்டியபடி கத்தரித்து வாளிபோல் அட்டையை வளைத்துக் கட்டவேண்டும். அடிப்பாகத்திற்கு ஒரு வட்டம் கத்தரித்து ஒட்டிவிட வேண்டும். கைப்பிடிக்குப் பதிலாக ஒரு கயிற்றைக் கோத்துக் கட்டி விடலாம்.



படம் 1




படம் 4



படம் 3



படம் 2



படம் 5

2. **தீப்பெட்டிப் பொம்மைகள்: (Sentry Box)** காவற்காரன் தங்கியிருக்கும் கோபுரம். தீப்பெட்டியின் அரையின் ஒரு பக்கத்தில் மரம் இரட்டித்திருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். அதைப் பிரித்து நீட்டிவிட்டு இரண்டு நுனிகளையும் ஒன்றாய்ச் சேர்த்தால் கோபுரத்தின் கூரை உண்டாகிவிடும். இந்த முக்கோண வடிவமான பாகத்தின் பின்புறத்தில் ஒரு சாணித்தாளை ஒட்டிவிட்டால் பார்ப்பதற்கு அழகாய் இருக்கும் வேறு ஒரு காகிதத்தில் ஒரு சிறிய சிப்பாயின் உருவத்தை வெட்டி அரைக்குள் ஒட்டி விடலாம். (படம் 5)

3. **மண் பொம்மைகள்:**—மண்ணினால் அநேக பொம்மைகள் செய்யலாம். ஆனால் மண்ணைப் பக்குவப்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். சுத்தமான களியோடு அளவுப்படி நல்ல மணலாகக் கலந்து பிசுக்கு உண்டாகும்படி சேர்த்து அரைக்கவேண்டும். பிறகு மனத்திற்குத் தோன்றியவாறு உருவங்கள் செய்யவேண்டும். இவ்விதம் செய்த பொம்மைகளை நல்ல காற்றோட்டமான இடத்தில் உலரவைத்து அவைகளின் மேல் வர்ணக்காகிதங்களோ **கலரோ** பூசிவிட்டால் நன்றாயிருக்கும். கொட்டாங்கச்சி ஸ்திரமாய் நிற்காதாகையால் இவைகளின் உதவியால் தலையாட்டி பொம்மைகள் **(Unstable equilibrium)** செய்யலாம்.

சிறிய மண் அகல் ஒன்று எடுத்துக்கொண்டு அதன் வாயை மூடக்கூடிய கெட்டியான காகிதத் துண்டு ஒன்றைத் தயார் செய். இதன் மத்தியில் சிறு துவாரம் செய்து அதன் வழியாக ஒரு நுனியில் சிறு குச்சி ஒன்றுகட்டப்பட்டிருக்கும் குதிரை வால் மயிரைச் செலுத்தி இழுத்துப் பிடித்துக்கொண்டு காகிதத்தை அகலின் வாயில் ஒட்டிவிடு. மயிரின் மற்றொரு நுனியில் ஒரு கொக்கி **(Loop)** முடிபோட்டு வச்சிரத்தில் தோய்க்கப்பட்ட ஒரு குச்சியில் மாட்டிவிடு. இப்போது குச்சியை வேகமாய்ச் சுற்றினால் ஒருவித விநோதமான சப்தம் உண்டாகும். இது குழந்தைகளுக்கு சிறந்த விளையாட்டுக் கருவியாகும்.

4. **மரவேலை (Fret Work):**—இந்தமாதிரி வேலைக்கு மூன்று ஒட்டுப்பலகை **(Ply Wood)** சிறந்தது. பலகையின் மேல் நமக்கு வேண்டிய படம் வரைந்துகொண்டு அவசியமில்லாத பாகங்களையும் இடுக்குகளையும் கம்பி அரத்தைக்கொண்டு அறுத்துவிடலாம். பழக்கமாகும் வரையில் இவைகளைச் செய்வது கடினமாயிருக்கும். ஆனால் இதில் அனுபவம் ஏற்பட்ட பிறகு எடுத்தவேலையைக் கீழே வைக்கவே மனம் வராது. இன்னும் நெட்டி, குச்சி, காகிதம் முதலியவைகளின் உதவியால் அநேக பொம்மைகள் செய்யலாம்.

மேற் சொன்னவைகளைத் தவிர இன்னும் எத்தனையோ விதங்களில் பொம்மைகள் செய்யலாம். ஆசிரியர்கள் தங்களால் இயன்றவரை முயன்று, குழந்தைகளுக்கு இத் தொழிலிலுள்ள ஆவல் அதிகரிக்கும்படி செய்வார்களென்று நான் பெரிதும் நம்புகிறேன்.

# ஆரம்பப்பாடசாலை உபாத்தியாயர்கள் சங்கம்

---

## பொன்மலை

இச்சங்கத்தின் 10 வது கூட்டம் 12—2—1938 சனிக்கிழமையன்று மாலை 1-30-மணிக்கு பொன்மலை தென்னிந்திய ரெயில்வே 'F' டைப் பள்ளிக்கூடத்தில் இச்சங்க உப அக்கிராசனாதிபதி ம-ா-ா-ஸ்ரீ S. குருஸ்வாமி அய்யர் அவர்கள் B. A. தலைமையில் கூடிற்று. சென்ற கூட்டத்தின் சாராம்சங்கள் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன

பிறகு G. S. கிருஷ்ணமூர்த்தி அய்யர் V ம் வகுப்பு மாணவர்களுக்கு 'பண்டு முளைப்பதரிசியே யானாலும்' என்ற செய்யுள் மாதிரிப் பாடம் கொடுத்தார்.

பின்பு பொன்மலைப்பட்டி R. C. பள்ளிக்கூடம் தலைமை உபாத்தியாயர் Rev. Br. சந்தானமரியன் வெளியே உலாவ போய் வருதல் (Excursion) என்பதைப்பற்றி பேசினார். அவ்விதம் செல்வதில் எந்தெந்த வகைகளில் நன்மைகள் ஏற்படுகின்றன என்பதை ஒரு உதாரணத்தைக் கொண்டு தெளிவாகச் சொன்னார்.

அக்கிராசனர் தனது முடிவுரையில் செய்யுள் பாடங்களை குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டியதன் அவசியம், கற்பிக்கும் முறை ஆகியவைகளைச் சொல்லி, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் குழந்தைகளை பல தடவைகள் வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வது மிக்க அவசியமாகுமென்றும், மாணவர்கள் தங்கள் வகுப்புக்களில் கற்றுக்கொண்ட விஷயங்களைநேராகப் பார்த்து நன்கு தெரிந்துகொள்ள தக்க சமயமாகுமெனவும், அவ்விதம் ஏற்படும் அறிவு அழியாமல் என்றும் நிலைத்திருக்குமெனவும் சொன்னார்.

அடுத்தபடியாக அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

1. "தென்னிந்தியா ரெயில்வே பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் விஷயத்தில் ஷை பாடசாலையில் அக்கிராசனாதிபதி தாராள நோக்கத்துடன் கவனிக்க வேண்டுமெனவும், ஷை ஸ்கூல் ஹெட்மாஸ்டர் அவர்களுக்கு தனிப்பட்டச் சம்பளத் திட்டம் கொடுக்குமாறு சிபார்சு செய்ததற்காகவும் இச்சங்கம், திருச்சு ரேஞ்சு உதவிக் கல்வியதிகாரி ம-ா-ா-ஸ்ரீ V. ராமையா அய்யர் அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றியைச் செலுத்துகிறது.

2. "பொன்மலை ரெயில்வேப் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் அவர்களுக்கு தனிப்பட்ட சம்பளத் திட்டம் கொடுத்ததற்காக ஷை ரெயில்வே பாடசாலை அக்கிராசனாதிபதி அவர்களுக்கு இச்சங்கம் மனப்பூர்ணமான வந்தனம் செலுத்துகிறது."

3. "இவ்வருஷம் மார்ச்சுமீ 12௳ சனிக்கிழமையன்று நடக்க வேண்டிய இச்சங்க வருஷாந்திரக் கொண்டாட்டத்திற்காக, ரூ. 30 ம் அதற்குக் குறைவாக சம்பளம் பெறும் ஒவ்வொரு உபாத்தியாயரும் அணா 4 வீதமும், ரூ. 30 க்கு அதிகம் பெறும் ஒவ்வொருவரும் அணா 8 வீதமும் கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

4. வருஷாந்திரக் கொண்டாட்டத்தைச் செவ்வனே நடத்த காரியதரிசியுடன் கனம் M.G. வெங்கட்டராமய்யர், கனம் கோபாலையர், கனம் G. S. கிருஷ்ணமூர்த்தி அய்யர் ஆகிய இவர்களடங்கிய ஒரு உதவி கமிட்டி நியமிக்கப்பட்டது.

கடைசியில் இச்சங்கக் காரியதரிசி கனம் S. P. நடராஜ சாஸ்திரிகள், இதன் உப அக்கிராசனாதிபதியும், ரெயில்வே ஸ்கூல் தலைமை உபாத்தியாயருமாகிய ம-ா-ா-ஸ்ரீ S. குருஸ்வாமி அய்யர் B. A. அவர்களுக்கு புதிய சம்பளத்திட்டம் கிடைக்கப்பெற்றதற்காக இச்சங்கத்தின் சார்பாக சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டதுடன், அக்கிராசனர் அவர்களுக்கு சபையின் சார்பாக வந்தனோபசாரம் அளித்து இராஜ வாழ்த்துப் பாட்டு பாடி கூட்டம் இனிது கலைவுற்றது.

சென்னை-600 008
47646

## பத்திராதிபர் குறிப்பு

### ஆரம்ப ஆசிரியர்களும் புதிய விதிகளும்

கல்வி இலாகா டைரெக்டராக விருக்கும் ஆர். எம். ஸ்டேதம் துரை அவர்கள் சென்ற ஜூன் மாதத்தில் தெள்ளிச்சேரியில் நடத்திய சொற்பொழிவில் ஆரம்ப ஆசிரியர்கள் படும் கஷ்டங்களை உணர்ந்து அவர்கள் குறைகளை நீக்குவதற்கும், முக்கியமாக சரிவரச் சம்பளங்கள் பட்டுவாடா செய்யப்படுவதற்கும், வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கத்தார் செய்ய உத்தேசித்திருப்பதாகக்கூற அதை நாம் பாராட்டி எழுதியதை வாசகர்கள் படித்திருக்கலாம். அக்கருத்தை நிறைவேற்ற நிகழும் மார்ச்சு மாதம் முதல் தேதி வெளியான **கேஜட்டில் ஆரம்ப ஆசிரியர்**களின் சம்பந்தமாய் அரசாங்கத்தார் ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் சில புதிய விதிகள் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. அவ் விதிகளை அன்பர்கள் நன்றாக வாசித்து அவற்றின் சாரத்தை உணரவேண்டியது அவசியம்.

பொதுவாகக் கூறுமிடத்து அவ் விதிகளின் சாராம்சம் பின் வருமாறு:—

இனிமேல் கல்வி டிபார்ட்மென்டால் அங்கீகரிக்கப்பட்ட (போர்ட் முனிஸிபல் அல்லாத), ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் வேலையிலமர்ந்துள்ள போதாகாசிரியர்கள் கல்வி இலாகா அதிகாரிகளால் அளிக்கப்பட்ட **அனுமதிச்சீட்டு** (லைசென்ஸ்) பெற்றிருக்கவேண்டியது அவசியம். அச் சீட்டில் அடியிற்கண்டவை தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

போதகாசிரியரை மானேஜர் எவ்வளவு காலத்துக்கு வேலைக்கு அமர்த்திக்கொள்ள இசைந்திருக்கிறார் என்பது.

எந்த நிபந்தனைகளுக் குட்படுத்தி உபாத்தியாயரை வேலைக்கு அமர்த்திக் கொள்ளுகிறார் என்பது.

உபாத்தியாயருக்கு ஏற்படுத்தியுள்ள சம்பளம்.

இவ்வனுமதிச் சீட்டில் (ஜில்லா) கல்வி இலாகா அதிகாரியின் கையொப்பம் இருத்தல் அவசியம்.

இச் சீட்டை ஏற்படுத்துவதால் உபாத்தியாயர் வேலை போய் விடுமோ என்ற பயம் நீங்கி உத்தியோகத்தில் நிலைத்திருக்கக் கூடுமென எதிர் பார்க்கப்படுகிறது. மற்றொரு விதியால் உபாத்தியாயருக்கு ஏற்படுத்தியுள்ள சம்பளத்திலிருந்து அவர்களிடம் காணப்படும் குற்றம் குறைகளுக்காக விதிக்கப்பட்ட அபராதங்களைத் தவிர வேறு பிடிப்புகள் இருக்கக் கூடாதென்று விதித்திருக்கிறார்கள். இவ்விதி, தற்காலம் ஆரம்பாசிரியர்களை அவர்கள் அனுபவித்து வரும் கஷ்டங்களி லிருந்து விடுவிக்க மிக முக்கியமானதெனத் தோன்றாமற்போகாது. அகாரணமாய் எத்தனை தடவை எத்தனை பேருடைய சம்பளங்களிலிருந்து பிடிக்கப்பட்டு இருக்கின்றன வென்பதைக் கூறவும் வேண்டுமோ?

அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டபடி மானேஜர்கள் உபாத்தியாயர்களுக்குச் சம்பளங்கள் தருகிறதில்லையென்று ருசுப்படுத்தப்பட்டால் பள்ளிக்கூடங்களுக்குள்ள அங்கீகாரம் (Recognition) எடுத்து விடப்படும். உள்ள விதிகளில் இது மிகச் சிறப்பானது; உபாத்தியாயர்கள் நிலையைப் பாதுகாக்கத் தக்கது. மேலும் மானேஜர்கள் சரிவரச் சம்பளங் கொடுப்பதில்லையென்று தெரிந்தால் டிஸ்டிரிக்ட் எடுகேஷனல் கவுன்ஸிலே நேராக சம்பளங்களை உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கலாம் என விதித்திருக்கிறது. ஆனால் இவ் விதியை வேறு வழி யில்லை என்று தோன்றினால்தான் அமுலுக்குக் கொண்டுவருவார்கள்.

முறைப்படி உபாத்தியாயர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் கிராண்டுகளில் $\frac{9}{10}$ பாகம் உபாத்தியாயர்களுக்குச் சேரவேண்டும். மிகுந்த ஒரு பங்கு மானேஜரைச் சேர்ந்தது. ஆனால் இவ்விதி சம்பளத் திட்டங்கள் சரிவர வகுக்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கும், கிராண்டு தொகைக்குக் குறையாத சம்பளங்கள் ஏற்படுத்தியிருக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் அமுலுக்கு வராது.

இவ்விதியின் உட்கருத்து என்னவென்றால் பள்ளிக்கூடங்களை நிர்வகிப்பதற்குக் கிரான்ட் பணம் ஒன்றைத் தவிர வேறு வருவாய் இல்லாத மானேஜர்கள் கிராண்ட் தொகையில் 10 ல் ஒரு பங்கை பள்ளிக்கூடச் செலவுகளுக்கு வைத்துக்கொள்ளலாம் என்பதேயாம்.

மற்றொரு விதியால் அனுமதிச் சீட்டை ரத்து செய்வதற்குக் கல்வி இலாகா டைரக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இவ்விதமாக ஸர்டிபிகேட்டுகளை ரத்து செய்யும் அதிகாரமும் டைரெக்டருக்கு இருக்கிறதென்பதை அன்பர்கள் இங்கு அறியவேண்டும்.

பரந்த நோக்கத்துடன் கவனித்தால் மேற்கூறிய விதிகளெல்லாம் ஆரம்பாசிரிர்களுக்கு உத்தியோக நிலையிலும் மாதாமாதம் சம்பளங்கள் பெறும் வகையிலும் நன்மை பயக்கத்தக்கவையென்றே தோன்றுகின்றன. இப்பொழுதும் ஒவ்வொரு பள்ளியிலும் சம்பள பட்டுவாடா ரிஜிஸ்தர்கள் இருக்கத்தான் இருக்கின்றன. அவற்றில் உபாத்தியாயர்கள் கையொப்பமிடுகின்றனர். அவ்வப்போது கல்வி இலாகா அதிகாரி இந்த ரிஜிஸ்தர்களைப் பரிசோதிக்கின்றனர். ச. ப. ரிஜிஸ்தரில் உள்ளதை அனுமதிச் சீட்டில் பெயர்த்து எழுதுவதால் மாத்திரம் உபாத்தியாயர் படுங் கஷ்டம் நீங்குமென எதிர்பார்ப்பதற்கு இடமில்லை.

சீட்டில் கண்டபடி பட்டுவாடா செய்யத் தவறினால் மேலதிகாரிகளுக்கு மனுக்கொடுக்க உபாத்தியாயர்களுக்குத் தைரியம்வேண்டும். அப்படி தைரியமாய் உபாத்தியாயர் மனுக்கொடுத்துக்கொண்டால் மானேஜர்கள் கரம் வைத்து ஏதோ ஒரு காரணத்தைக் கூறி உபாத்தியாயர்களை வேலையினின்று தள்ளினால் இவ்விதிகளெல்லாம் ஆசிரியர்களுக்கு எவ்விதம் நன்மை பயக்குமெனத் தெரியவில்லை. தற்காலத்தில செகண்டரி பள்ளிக்கூடங்களில் வழங்கிவரும் அக்ரிமென்ட்டுகளும் இதே நிலையில் தானிருக்கின்றனவென்பதை வாசகர்கள் சொல்லாமலே அறியலாம்.



கல்வி அதிகாரிகளுக்குப் பள்ளிக்கூட "ரெகக்னிஷ"னை எடுத்துவிடுவதற்கு உள்ள அதிகாரம் மானேஜர்கள் நியாயமாக நடந்துகொள்ளுவதற்குப் பெரும்பாலும் தூண்டுகோலாக இருக்கலாம். ஆனால் சில முதலானவைகளும் இன்னின்ன காரணங்களுக்குத் தான் உபாத்தியார்களை நீக்கலாமென்றும் லைசென்ஸ் பெற்ற உபாத்தியாயரைத் தகுந்த காரணமில்லாமல் மானேஜர் தள்ளிவிடக் கூடாது என்றும் இவ்விதிகளில் வெளிப்படையாகயில்லை, குறிப்பாகவும் இல்லை. ஆனால் முக்கியமாக நோக்கத்தகுந்தது, வேலை செய்யுமளவும் உபாத்தியாயருக்கு கிராண்ட் தொகையில் $\frac{9}{10}$ தவறாமல் கொடுக்கப்படுமென்பது திருப்திகரமான அம்சம்.

அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டபடி மானேஜர்களும் உபாத்தியாயர்களும் சரிவர நடக்கிறார்களா என்று பார்ப்பதற்கும் அப்படி நடக்கத் தவறியதாக மானேஜரோ அல்லது உபாத்தியாயரோ கூறநேர்ந்தால் உண்மையை ஆராய்ந்து நியாயமளிக்கவும் கல்வி இலாகா அதிகாரிகளுக்கு முடியுமா? அல்லது வேறு கனவான்களும் உபாத்தியாயர்களும், அதிகாரிகளும் கலந்த போர்ட் அல்லது கமிட்டி ஒன்று ஏற்படுத்துவது அவசியமா, அன்று? என்பதை உபாத்தியாயர் சங்கங்கள் ஆராய்ந்து தெளிவாக்கவேண்டும்.

லைசென்ஸ் விஷயத்தில் நமக்கொரு சந்தேகம் தோன்றுகின்றது. மேல் படிப்புள்ள ஆசிரியர் கிடைக்கும் பொழுது எலிமெண்டரி லோயர் உபாத்தியாயர்களை உத்தியோகத்தில் நியமிக்கக் கூடாது என விதிகளில் தெளிவாக இருக்கிறது. குறைந்தது ஹையர் கிரேட் உபாத்தியாயரையாவது நியமிக்க வேண்டும்மென்பது தெளிவாகிறது. உபாத்தியாயர் டிரெயினிங் ஸ்கூலோ, காலேஜிலோ முறைப்படி படித்து ஸர்டிபிகேட் பெறுகிறார். ஹையர் கிரேட் உபாத்தியாயர்களுக்கும் செகண்டரி உபாத்தியாயர்களுக்கும் 18-மாதம் பயிற்சிக் காலம் உண்டு, அதன் பிறகு கல்வி இலாகா அதிகாரிகள் உபாத்தியாயர்களின் வேலையை பரிசோதித்து நேராக அவர்கள் பாடம் சொல்லப் பார்த்து, கேட்டு, சர்டிபிகேட்டுகளை பூர்த்தி செய்கிறார்கள். இவ்வித ஸர்டிபிகேட்டுகளைப் பெற்றிருக்கும் உபாத்தியாயர்களை லைஸன்ஸ் பெறும்படி செய்வது எதற்காக என்னும் வினா வாசகர்கள் மனதில் தோன்றுவது இயல்பே. இது கால் இங்கிலாந்தில் இருப்பதைப்போல் உபாத்தியாயர் பதிவுச் சங்கம் ஒன்று இம்மகாணத்தில் இருத்தல் நலமென உபாத்தியாயர் சங்கங்கள் வற்புறுத்தி வருகின்றன. இவ்வித சங்கத்தின் நோக்கம் புதிதாக ஏற்படும் லைஸென்ஸின் நோக்கமும் ஒன்றென்று நமக்குத் தோன்றவில்லை. இவ்விதிகளால் உபாத்தியாயர்கள் மீதும் மானேஜர்கள் மீதும் கல்வி இலாகா அதிகாரிகள் முன்னினும் அதிக ஆதிக்கம் பெறுவதை நாங்கள் குறை கூறுவதாக நினைத்தல் ஆகாது. எவ்வளவு திறமை வாய்ந்தவராயினும் அத்தகைய அதிகாரங்கள் ஒருவரிடம் இருப்பதைக் காட்டிலும் ஒவ்வொரு ஜில்லா ஆசிரியச் சங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரும் கல்வி இலாகா

வைச் சேர்ந்த ஒருவரும் இவ் இருவர்களாலும் கூட்டிக் கொள்ளப்பட்ட பொது ஜனத்தைச் சார்ந்த ஒருவரும் சேர்ந்த போர்ட் ஒன்று எற்படுவது நலமென நமக்குத் தோன்றுகிறது. அஃதன்றி லைசென்ஸ்கள் எவ்வித நிப்பந்தனைகளுக்குட் பட்டு எவ்வித யோக்கிய தாம்சங்களுள்ள உபாத்தியாயர்களுக்கு அளிக்கப்படு மென்பதைத் தெளிவாகக் கூற வேண்டும். உதவிப் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு பாத்திரம் அனுமதிச் சீட்டு ஏற்படுவதால் இவர்களை பிற ஆசிரியர்கள் இழிவாய் நினைக்கவு மிடமுண்டு. அனுமதிச்சீட்டு என்றில்லாமல் வேறு வழியில் குறைகளை நீக்கிக்கொள்ள முடியாதா வென்பதையும் அதிகாரிகள் கவனித்தல் நலம்.

வழக்கம்போல் இவ்விதிகளுக்குள்ள தடைகளையோ அல்லது குறைகளையோ நீக்கும் வழிகளை ஏப்ரல் மீ 1-தேதிக்குள்ளாக அரசாங்கத்தாருக்குத் தெரிவித்தால் அமுலுக்குக் கொண்டு வருவதற்குமுன் அவற்றைக் கவனிப்பதாக கஜெட்டில் அறிக்கை செய்யப்பட்டு இருக்கிறது. ஆதலால் காலதாமதமில்லாமல் ஆரம்ப ஆசிரிய சங்கங்கள் மேஷ விதிகளின் சாரத்தையும் உட்கருத்தையும் உணர்ந்து தீர்மானமாகத் தங்கள் அபிப்பிராயங்களை அரசாங்கத்தாருக்கு தெரிவிக்க வேண்டுமென வற்புறுத்தப்படுகின்றது.

இவ்விதிகளில் ஆலோசித்து அபிப்பிராயங்கள் கூறத்தகக்க முக்கிய அம்சங்கள் இருப்பதால் இதில் சம்பந்தப்பட்டவர்கள் நண்பர்களைக் கலந்து ஒரு முடிவுக்குவர ஒரு மாதகால அளவு போதாது; குறைந்தது இன்னொரு மாதமாவது (அஃதாவது ஜூன் மீ 1உ) தவணை கொடுப்பது அவசியமென நாம் கருதுகிறோம்.

இப்பொழுது வெளியிட்டுள்ள விதிகளை ஆசிரியருடைய நன்மையைக் கருதியும் மனேஜர்கள் நன்மையைக் கருதியும் **பப்ளிக் இன்பர்மேஷன்** மந்திரி தேச பாஷா பத்திரிகைகளுக்கும், ஆசிரியர்களுக்கு எளிதில் பயன்படக் கூடியமாதாந்தரச்ஸஞ்சிகைகளுக்கும் அனுப்பி வெளியிடும்படி செய்வது பொதுஜன அபிப்பிராயம் உருவாகக் தெரிந்து கொள்ளத்தக்க வழியாகும். மனேஜர்களின் சுபாவமும் ஆசிரியர்களின் நிலையும் மெச்சத்தக்கதல்லவென்று புதிய விதிகளின் அவசியத்தால் தெரிந்து கொள்ளலாம். இத்தகைய மானேஜர்களைக் கொண்டோ ஆரம்பக்கல்வி முன்னேற்மடையக்கூடும்! அதிகரிகளின் காலம் முழுவதும் மானேஜர்களை ஒழுங்கா யிருக்கச்செய்வதில் செலவழியவேண்டியதாயின், சீர்திருத்தம் செய்ய சாவகாசமிருக்குமாவென்று நாம் யோசிக்கவேண்டும். விதிகள் குறைகளை முழுவதும் நீக்கிவிடுமொன்பதற்கில்லை. இவ்வளவாவது அதிகாரிகள் கவனம் காட்டுவதால் அநேக மானேஜர்கள் தவறான வழிகளிற் செல்லமாட்டார்களென்று நம்பலாம். தகுந்த திருத்தங்கள் அங்கீகரித்து ஆசிரியர்களின் முன்னேற்றத்தை அதிகாரிகள் நாடுவார்களென நாம் வேண்டுகிறோம்.

J.L
15 M21, N36PA 37.2.9
167646

*Wanted publishers to purchase the following manuscripts written by C. S. Ramaswamy Iyer, Retired Teacher and author of Child's History of India, Heroines of Ind, etc.*

| | |
|---|---|
| English Conversation Book I | for Class IV |
| do. do. Book II | do. V |
| Arithmetic for Beginners ... ... | in Tamil |
| Domestic Hygiene ... ... | in Tamil |
| Stories from Indian History ... ... | for Class V |
| Tamil Primer for Beginners ... | ... ... |

For terms, please write for outright purchase of the Copyright of the above

to The Editor of this Magazine or to:

C. S. RAMASWAMY IYER (*Retired Teacher*)

**2/12-A, Alangatha Pillai Street : : Triplicane, Madras.**

A NEW SERIES OF ENGLISH READERS FOR SCHOOLS IN INDIA

# The Coronation English Readers

**Edited by Prof. J. C. ROLLO, M.A.**

*Principal, Maharaja's College, Mysore*

| | | |
|---|---|---|
| Primer, Part I | (3rd Class) | Annas 3 |
| Primer, Part II | (4th Class) | Annas 3 |
| Primer, Parts I & II | | Annas 6 |
| Book I | (5th Class) | Annas 6 |
| Book II | (1st Form) | Annas 8 |
| Book III | (2nd Form) | Annas 10 |
| Book IV | (3rd Form) | Annas 12 |

The above series of English Readers are the result of thorough study of the present day needs of pupils learning English at the early stages. The books are well got up with many illustrations. A perusal of the books will convince any teacher of their special merits.

Applications for specimens from teachers will be attended to immediately.

**B. G. PAUL & Co., Educational Publishers**

12, Francis Joseph Street, G.T., MADRAS